# சிலம்பின் சிறப்பு

*

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.

*

வரதர் வெளியீடு

முதற் பதிப்பு: ஒக்டோபர் 1964

விலை ரூபா [redacted]

பதிப்புரிமை :
" வரதர் வெளியீடு "

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

பயன் தூக்காது நயன்பலபுரியும் பண்பாளரும்

என் நண்பாளருமான

பண்ணாகம், வைத்தியகலாநிதி

எ. கைலாயபிள்ளை அவர்களது

சால்பு நிறைந்த உள்ளத்திற்கு

இந்நூல்

சமர்ப்பணம்.

# முகவுரை.

தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களில் பலவகையாலும் தனிச்சிறப்பு வாய்ந்து விளங்குவது சிலப்பதிகாரம். அந்நூலில் யான் கண்ட சிறப்புக்களைப் பிறரும் அறிந்து மகிழவேண்டும் என்னும் ஆசை என் மனத்தில் நீண்ட காலமாக இருந்தது. சில ஆண்டுகளுக்குமுன் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் வாரந்தோறும் சிலம்பின் சிறப்புக்களை விரித்துக்கூறும் வாய்ப்பினைப் பெற்றேன். பின்னர் அவ்விரிவுரையினைச் சுருக்கி, 'ஈழநாடு' வார இதழில் கட்டுரை வடிவில் எழுதிய போது, என் நண்பர் பலர், அவற்றையெல்லாம் திரட்டி ஒரு நூலாக வெளியிடுமாறு கூறினர். அறிஞர்களின் அரிய கருத்துக்களின்முன் இந்நூல் சூரியன்முன் மின்மினி போலாகுமெனக் கருதியமையால் நூலாக வெளியிடும் எண்ணம் எப்பொழுதாயினும் என் மனத்தில் எழவே இல்லை. அவ்வெண்ணம் 'வரதர்' உள்ளத்தில் உதித்ததுபோலும் அவரது நல்லுள்ளம் இந்நூலைத் தமிழுலகிற்கு நல்குகின்றது. காய்தல் உவத்தல் இன்றி இதனை ஆய்ந்து அறிவுடையோர் மகிழ்வராக.

முன்பு கட்டுரை வடிவில் வெளியிட்ட 'ஈழநாடு' பத்திரிகைத் தாபனத்தார்க்கும், நூல் வடிவில் இதனை வெளியிடும் 'வரதர்' வெளியீட்டாருக்கும் என்றும் நன்றிகள் உரியன.

7-10-64.

பொன். முத்துக்குமாரன்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கற்கோயிலும் காப்பியக்கோயிலும் | 1 |
| 2. | வாழ்த்தில் அமைந்த வனப்பு | 6 |
| 3. | இன்ப வாழ்க்கை | 11 |
| 4. | வாழ்க்கையும் நோக்கமும் | 15 |
| 5. | நாடக மகளின் ஆடலும் பாடலும் | 21 |
| 6. | கற்புக்கடம் பூண்ட பொற்புடை நங்கை | 26 |
| 7. | அன்பின் ஆற்றல் | 33 |
| 8. | கற்புடைக் கண்ணகியின் அற்புதச் செய்கை | 40 |
| 9. | உண்மையை அறிதலும் உவகை பெறுதலும் | 47 |
| 10. | காதலர்கண்ட கடைநாள் இன்பம் | 53 |
| 11. | சிலம்பு செய்த தீங்கு | 59 |
| 12. | மாசுநீக்கிய மங்கையும் நீதியை நிறுத்திய மன்னனும் | 65 |
| 13. | தீ பரந்தது சினம் தணிந்தது | 72 |
| 14. | சேரநாடு சேர்ந்த தெய்வம் | 78 |
| 15. | சேரமன்னனின் சீரிய பண்பு | 84 |
| 16. | மாதவி பாடிய கானற்பாட்டு கனகவிஜயர்தம் முடித்தலை நெரித்தது | 89 |
| 17. | வாழ்த்தும் வரமும் | 95 |
| 18. | சிலம்பிற் காணும் இசைச்சிறப்பு | 102 |
| 19. | சிலம்பிற் காணும் நாடகச் சிறப்பு | 117 |

# சிலம்பின் சிறப்பு

## கற்கோயிலும் காப்பியக் கோயிலும்

மகாபாரதத்தில் அற்புதமான ஒரு கதை உண்டு. சந்தனு மகாராசன் கங்கையை மணந்து ஒரு மைந்தனைப் பெற்றான். அம் மைந்தன் வளர்ந்து அழகிய காளைப் பருவம் அடையும் காலத்தில், தன் தந்தையின் மறுமணம் நிறைவேறுதற்பொருட்டுத் தான் பிரமச்சரிய விரதத்தை மேற்கொண்டான். பெற்ற தந்தையின் மகிழ்ச்சியைக் காண, முற்றாகத் தன் சுகத்தைத் துறந்த அம்மைந்தனின் செயலைக் கண்டு தேவரும் யாவரும் ஆச்சரியமுற்றனர். வியக்கத் தக்க விரதம் பூண்டமையால் அம்மைந்தன் பின்னர் வீஷ்மன் எனப் பெயர் பெற்றான். இந்த வீரச் சம்பவம் நடந்த அந்தப் பாரத நாட்டிலேயே. பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து மற்றுமோர் அரிய செய்தி நிகழ்ந்தது. பாரதத்தின் தென் கோடியிலே, பழங்குடி மக்களுள் ஒருவர்

என நூல்கள் பறைசாற்றும் சேரர்குடி அந்தத் தீரச் செயலை புரிந்தது.

சேர மன்னனான இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் தன் மைந்தர் இருவரோடும் அரியணையில் இருக்கையில் ஒரு நிமித்திகன் அவ்விடத்து வந்தான். அரசன் பக்கலில் இருந்த மைந்தர்களில் இளையோன்மீது அவன் பார்வை பதிந்தது. அப்போது அவன் மனத்தில் ஒரு கருத்துத் தோன்றியது. அவன் சேரலாதனை வாழ்த்தி, ''அரசே, உனக்குப் பின் உன் இளமைந்தனே இந்நாட்டை ஆள்வான்'' என்றான். அதனைக் கேட்டதும், மூத்தோனான செங்குட்டுவனின் முகம் வாட்டமுற்றது. இளையவன் தன் அண்ணனின் மனக்கவலையைக் குறிப்பாலறிந்து, அவன் வாட்டமெல்லாம் தீர்க்க எண்ணினான். தான் அரசனாவதில்லையென்றும், தன்னண்ணனும் அவன் பின்னோருமே ஆளும் உரிமையை அடையவேண்டும் என்றும் முடிவு செய்தான். உடனே எழுந்து, “நிமித்திகனே, யான் அரசனாவேன் என்று கூறிய உன் வார்த்தையைப் பொய்ப்பிக்கின்றேன், பார்'' என்று கூறி, அப்பொழுதே தன் அரச உடையைக் களைந்து துறவியாய்த் தவக்கோட்டமடைந்தான். தமையன் அரசனாய்ச் சிறப்பதுவே தம்பிக்குப் பேரின்பம். தன் துறவினால் அவ்விள மைந்தன் தமையனுக்கு மட்டுமன்றி அவன் சந்ததியோர்க்கும் அரசுரிமையை ஈந்துவிட்டான். ஈத்து உவக்கும்

இன்பமும், இம்மை இன்பத்தைத் துறக்கும் வீரமும் அவனது இளம் உள்ளத்திலேயே முளை விட்டிருந்தன!

துறவிலே பல வகை உண்டு. கடன் முதலிய தொல்லைகளினாலே காவியுடையை நாடுவதும் ஒரு வகை. துறந்தாரின் வேடத்தைத் தாங்கி ஊர்களில் ஒற்று அறிவதும் ஒருவகை. "துப்புர வில்லார் துவரத் துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கூற்று" ஆதலால் வறுமை காரண மாக வலிந்துகொள்ளும் துறவும் ஒரு வகை. இவற்றை விட மனைவி சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளேயாமாகில் கூறாமல் சந்நியாசம் கொள்ளுதலும் ஒருவகைத் துறவுதான். மெய்ம் மைத் துறவோ, இவையெல்லாவற்றையும் விட வேறானது; மேலானது. அது, முன்னைத்தவத்தால் அடைவது. விட்ட குறை தொட்ட குறையாய் உள்ளத்தே ஒட்டி நிற்பது. இளங்கோவின் துற வும் அத்தகையதே. அது இயற்கையாய், அன் புள்ளத்தினின்றும் அரும்பியது. மெய்ப்பொரு ளையும் மெய்யான இன்பத்தையும் அடையவேண் டுவார் அன்புள்ளத்தராதல் வேண்டும் அல்ல வா? தமையனிடத்தில்வைத்த அன்பினால் தரணி யை ஆளும் வேட்கையையே வேரோடு களைந்த இளங்கோ, துறவிகள் வாழும் இருக்கையை அடைந்தார். ஆரவாரமின்றி அமைதியான கருத்தோடு அறிவுநூல்கள் பலபல கற்றுணர்ந் தார். கல்வி ஏறும்தோறும் அவரிடத்தில் நல்

லறிவு ஊறிப்பெருகியது. நல்லறிவு சுரந்து பெருகப் பெருக, பல்லுயிர்களிடத்திலும் அருள் பரந்தது. அந்நிலையில் அவர், தாம்பெற்ற இன்பம் இந்தத் தரணியெல்லாம் எய்த ஆசை கொண்டார். காக்கை கரவா கரைந்துண்ணும். மெய்ஞ்ஞானிகளும், தாம் பெற்ற மேலான இன்பத்தை மற்றவர்களும் எய்த வழிகாட்டுவார்கள். மனித சமூகம் ஆசாபாசங்களினால் மாசு நிறைந்து, வாழ்வின் இலக்கை அறியாது தாழ்வெய்தும் காலங்களிலெல்லாம் கலங்கரை விளக்குப்போல் கரை காட்டுமாறு பெரியோர்கள் காப்பியங்களைப் படைத்தளித்திருக்கின்றனர். இளங்கோவடிகளது உள்ளத்திலும், மக்களுக்கு என்றும் வழித்துணையாய் நிற்கவல்ல இலக்கியம் செய்ய வேண்டும் என்ற கருத்து முகிழ்த்திருந்தது. அது பின்னர், சிலப்பதிகாரமென்னும் தேமலராக மலர்ந்தது.

சிந்தனையாற்றலும் கலை நுணுக்கமும் தேர்ந்த சிற்பி ஒருவன், சாதாரண பொருள்களிலெல்லாம் தன் கலைத்திறனைப் பொறிப்பதில்லை. அவன் மண்ணிலும் மரத்திலும் வடிக்கும் சிற்பம் அற்ப காலத்துள் அழிந்துவிடும். ஆகவே தன் கலை அழியாது நிலைத்துநிற்க வேண்டுமாயின் உறுதியும் உயர்வும் பொருந்திய மூலப் பொருளையே சிற்பவேலைக்குத் தெரிந்தெடுக்கின்றான். அதுபோலவே தெய்வத் திறம் படைத்த செந்தமிழ்ப் புலவர்களும் சிறிய செய்திகளை

விட்டு விட்டு, சீரிய மக்களின் வாழ்க்கைச் செய்தியைக் காப்பியப் பொருளாகத் தேர்ந்தெடுக்கின்றார்கள். எத்தனையோ கதைகள் இந்தத் தமிழ் நாட்டில் வழங்கியிருப்பவும் கம்பர் கருத்து இராமன் கதையை நாடக் காரணம் யாது? வாய்மை, நீதி, வள்ளன்மை, கற்பு என்னும் நற்பண்புகளே, மக்கள் வாழ்க்கையை எக்காலத்திலும் நிலைக்கச்செய்வன. அத்தகைய பண்பு வாய்ந்த நல்லோர் செய்தியை அறியவும் அதனைக் காவியமாகப் புனையவும் இளங்கோ ஆசைப்பட்டார். சீத்தலைச் சாத்தனார் கண்ணகியின் கதையைக் கூறியது இளங்கோவின் ஆசை நிறைவேறும் வாய்ப்பை அளித்தது. ஒருவரது உள்ளக்கிடக்கையின் ஆழமும் கல்வியின் அகலமும் மதியின் நுண்மையும் செயல்வடிவில் உருப்படும் பொழுதே பிறர்க்குப் புலனாகும். இளங்கோ அடிகளின் உயர்ந்த உள்ளமும், அகன்ற கல்வியும். நுணுகிய மதித்திறனும், சால்பு நிரம்பிய தகைமையும் அவரது காப்பியத்தின் வாயிலாகத் தெள்ளிதில் அறியக்கிடக்கின்றன.

சேரர் மரபில் வீரரென உதித்த அண்ணனும் தம்பியுமான இருவர் இருவகையில் சமானமின்றி விளங்குகின்றனர். மூத்தோனான செங்குட்டுவன் பொருளுலகிற்கு வேந்தனாய் விளங்க, இளையோரான இளங்கோ அருளுலகிற்கும் அறிவுலகிற்கும் அரசராய்த் திகழ்ந்தார். அண்ணனான செங்குட்டுவன் புறப்பகையாகிய வட

நாட்டரசர்களை வென்று மறப்புகழை நிலை நிறுத்தினன். தம்பியாகிய இளங்கோ அகப் பகையாகிய ஆசை முதலியவற்றை வென்று அந்தமில் இன்பம் பெற்றார். அரசனான செங் குட்டுவன் கண்ணகிக்குக் கற்கோயில் எழுப்பி, நாடெங்கும் விழாக் காணச் செய்தான். அடிக ளான இளங்கோ கற்புடைச் செல்வியான அக் கண்ணகிக்கே காப்பியம் அமைத்து, தமிழ் உள் ளளவும் கற்பின் பெருமை தழைக்கச் செய்தார். கண்ணகி வழிபாடு ஒவ்வோரிடத்துக் கைவிடப் பட்டதாயினும் சிலப்பதிகாரக் காப்பியமேம் பாடு காலந்தோறும் சிறந்து வருகின்றது.

## வாழ்த்தில் அமைந்த வனப்பு

இளங்கோவடிகள் பிறப்பினால் அரசர்; அறி வுச் சிறப்பினால் ஆற்றல் மிக்க புலவர்; வாழ்க்கை முறைமையால் ஆன்றவிந்தடங்கிய அடிகள். அத் தகைய பெரியார் கண்ணகியின் வாழ்க்கையைக் கூறுவதன் மூலம் பெண்மையின் பெருமையை அறிவுறுத்த ஆசைப்பட்டார். அவர் காலத்துக்கு முன், கதை தழுவிய செய்யுள் நூலையோ காப்பி யத்தையோ யாரும் செய்தாரில்லை. ஒருகால் யாரேனும் செய்திருப்பினும் அவ்வாறு செய்யப் பட்ட நூல் இன்று நாம் அறிதற்கில்லை. எனவே காப்பியமொன்றினை முதன் முதலாகப் படைத்த புதுமைக் கவிஞர் இளங்கோவடிகளேயாவர்.

மதி நுட்பமும் ஆழ்ந்தகன்ற கல்வியும் உடைய அறிஞர்கள் எதனையும் ஆராய்ந்து

தெளிந்த பின்னரே எடுத்துரைக்கின்றனர். அங்ஙனம் உரைக்கும்போது அவர்களது சொல்லை வெல்ல வல்ல சொல் வேறு இருப்பதில்லை. அவர்கள் சொல்லும் முறையில் புதியதோர் உத்தி புலப்படும். சொல்லில் பொதிந்த பொருளும் சுவைமிகுந்து நிற்பதோடு காலங்கள் பல கழியினும் கற்போர் மனத்திற்கு நல்விருந்தாய் விளங்கும். அத்தகைய அறிஞர்களில் உத்தமராய்த் திகழும் இளங்கோ ஒரு காப்பியம் செய்தாரெனில் அந்நூல் எத்தகையது, அதில் கூறப்பட்ட பொருள் எவ்வாறிருக்கும் என்பன போன்றவற்றை அறிய ஆவல் உண்டாகுமல்லவா? ஆவலைத் திருப்தி செய்ய நூலினுள் புகுவோம். நூலினுள்ளே நுழையும் போது வாழ்த்தொலி கேட்கின்றதே! இதுவும் ஓர் நல்ல சகுனம்தான். வாழ்த்தினை உற்றுக் கேட்போம். "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்று தொடங்குகின்றது முதல் வாழ்த்து. அவ்வளவில் வாழ்த்து அமையவில்லை. "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என மற்றுமோர் வாழ்த்து அடுத்துக் கேட்கின்றது. இருளை நீக்கி இன்பத்தை ஆக்கும் இரு சுடர்களும் வாழ்த்தப்படுகின்றன. உலகத்துக்கு ஒளிமட்டும் போதுமா? உணவும் வேண்டுமல்லவா? எல்லா உயிர்க்கும் நல்ல உணவாகி உணவை ஆக்குவதுமாய மழையின் நன்றியை யாரும் மறக்கமாட்டார். அந்த மழையை வாழ்த்தும் வாழ்த்து அடுத்து வருகின்றது. "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"

என்ற வாழ்த்தைக் கேட்கும்போது வள்ளுவர் நினைவன்றோ வருகின்றது! திருக்குறளில் கடவுள் வாழ்த்திற்கு அடுத்ததாய் நிற்பது வான் சிறப்பு. அது போலச் சிலப்பதிகாரமும் மழையின் சிறப்பை அறிவுறுத்த வாழ்த்தெடுக்கின்றது. மழையை வாழ்த்தியபின் வாழ்த்துதற்கு வேறு எது இருக்கின்றது என்று நாம் எண்ணுவோம்; வாழ்த்துக்களெல்லாம் முடிவுற்றன என்றும் கருதுவோம். இளங்கோ அவ்வாறு கருதவில்லை, கற்புக் கரசியான கண்ணகி பிறக்கத் தவஞ் செய்த மண்ணை நினைக்கின்றார். ''எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்று முன்னொரு புலவர் பொதுப்பட வாழ்த்திய கருத்து இளங்கோவின் உள்ளத்தாழத்தில் பதிந்திருந்தது போலும். ''பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்'' என்ற தொடரைக் கேட்கும்போது, சேரநாட்டவராகிய இளங்கோ சோழ நாட்டவராகி விட்டாரோ என்று நாம் எண்ணுவோம். சோழ நாட்டுப் பிரஜையொருவன் தான் பிறந்த பொன் நாட்டில் வைத்த பேரன்பினால் எத்தகைய குழைவோடு தொழுது கூறுவானோ, அவ்வாறு இளங்கோ பூம்புகாரைப் போற்றுகின்றார்!

சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக்களின் முடிவில் மணவினைக் காட்சி நம்மை வரவேற்கின்றது. மற்றைய புலவர்கள் நாட்டு வர்ணனை, நகரவர்ணனை, கதாநாயகன் பிறப்பு என்பனவற்றை

முதற்கண் விதந்து கூறுவர். மக்களுடைய வாழ்க்கையிலே நிகழும் செய்திகள் எல்லாவற்றிலும் திருமண நிகழ்ச்சியே இன்பகரமானது; எல்லோரையும் மகிழ்விப்பது. இளங்கோவடிகள் துறவியேயாயினும் திருமணத்தின் சிறப்பினை உணராதவரல்லர். தம் நூலின் தொடக்கத்திலேயே மங்கல கரமான மண வினையை அவர் அழகுறப் புனைந்து கூறி அதனைக் காண நம்மை அழைக்கின்றார்.

திருமணச் செல்வர்களைப் பார்த்தற்கு இரு கண்களும் போதா என்றால் அது புனைந்துரையாகாது. ஆடவரும் மகளிரும் கூடிநின்று அகமும் முகமும் மலர அவர்களைக் கண்டு கண்ணுற் பருகுகின்றனர். அவர்கள் கண்கள் எத்தகைய தவத்தைச் செய்தனவோ? மணம் புணரும் அம் மங்கலச் செல்வரை இளங்கோ நமக்கு அறிமுகப்படுத்தும் முறையே அழகாய் இருக்கின்றது. ஆண்மகன் ஒருவனின் நன்மைக் குணங்களால் அவன் மாத்திரமே பெருமையடைகின்றான். பெண்ணொருத்தியின் நற்குணங்களாலோ அவளும் அவள்கணவனும் மட்டுமன்றி, அவள் பிறந்த அகமும் புக்க அகமும் பெருமை பெறுகின்றன. அத்தகைய பெண்களை மனைவியராகப் பெறுவோர் பகைவரும் நாணப்பீடு நடை கொள்வர் என்பர் வள்ளுவர். கணவனின் புகழை உயரச் செய்ய வல்ல கன்னியர் உலகில் மிகவும் சிலரே.

அருந்ததி என்ற ஒரு பெண்ணின் திருந்திய கற்பினை நூல்களிலே பலபடக் கேட்கின்றோம். அவ்வருந்ததி யாரைப்போல்வாள் என அறிய விரும்புவோர்க்குக் காணத்தக்க பொருளாய் இதோ நாணியிருக்கின்றாளே இந்த மணப் பெண்ணைக் கூறலாம். இவள் மாநாய்கன் மகள். இவள் பெயர் கண்ணகி. அழகின் வடிவமான இலக்குமி இவளைப்போலத்தான் இருப்பாள். இவளது அருங்குணங்களைக் கண்டு, பெண்களே இவளைக் கண்கண்ட தெய்வமாகக் கைதொழுகின்றனர்! இவள் பக்கலில் இவளுக்கு மணமகனாக வாய்த்த பெருமகன் யாரெனில் மாசாத்துவான் மகன் கோவலனாவன். இளமையிலேயே அளவில்லாத புகழ்படைத்தவன் அவன். இத்தகைய இருவருக்கும் இயைந்த இன்பமணத்தைக்காண ஊரே திரண்டுவந்துவிட்டது!

மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன. முத்துப் பந்தலின் கீழ் வேத முறை தவறாமல் மணவினை நிகழ்கின்றது. தீ வலம் வருதல் முதலிய நிகழ்ச்சிகள் எல்லாம் ஒவ்வொன்றாய் நிறைவேறுகின்றன. நற்குல மங்கையர் பொற்கலனும் பூரணகும்பமும்ஏந்தி, மணமான இருவரையும் அழைத்துச் சென்று மங்கல நல்லமளியில் இருத்தி வாழ்த்துகின்றனர். 'பேறு பதினாறும் பெற்றுப் பெருமையொடு வாழ்திர்' என நம்உள்ளம் வாழ்த்துகின்றது. அம்மங்கையர் நாவில் அவ்வித வாழ்த்துக்கள் பிறக்கவில்லையே! ''காத

லர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக''
என வாழ்த்துகின்றனர்! **பிரியாமல், நெகிழாமல்,
தீதறுக** என்ற சொற்கள் அச்சந்தர்ப்பத்திற்கு
ஏற்றனவாயில்லையே. கூடிமகிழ்தலையே கூறி,
பிரிதலைப் பற்றிப் பேசாதிருக்கலாமே. நன்மை
யையே சொல்லி, தீதினை நினையாதிருக்கலாமே!
மங்கையரின் மங்கல வாழ்த்தினை இளங்கோ ஏன்
இவ்வாறு அமைத்தார்? இது பின்வரும் கதைப்
போக்கிற்கு ஓர் குறியாக் குறிப்பாயிருக்கும்
போலும்.

# இன்ப வாழ்க்கை

கண்ணகியும் கோவலனும் நன்மணம் பூண்ட
செய்தியைமுதற்கட்காட்டிய இளங்கோவடிகள்
அவ்விருவரது இன்பப் பேற்றினை அடுத்தாற்
போற் சித்திரிக்கின்றார். மணமான இருவர் தத்
தம் உளப்பாங்கு, இளமை, பொருள்வளம் என்
பவற்றுக்கேற்ப இன்பத்தினை ஆரத்துய்ப்பர்.
அவர்கள் அவ்வாறு துய்க்கும் இன்பம் பல
திறத்ததாய் அமையும். ஐம்புலன்களால் நுகரும்
இன்பம் எனவும், அறிவினால் பெறும் இன்பம்
எனவும், அன்பினால் எய்தும் இன்பம் எனவும்
அதனை வகைப்படுத்தல் இயலும். இங்கே கோவ
லனும் கண்ணகியும் எய்திய இன்பம் யாது?

அதனை இளங்கோவடிகள் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார் என்பதை நோக்குவோம்.

இப்பிறப்பில் சிறந்த தானம் முதலிய அறங்களைச் செய்தோர் மறுமையில் தேவராய்க் குறைவின்றி இன்பம் நுகர்வர். அத்தகைய தேவர்களே மானுட வடிவில் ஈண்டு வந்துள்ளனரோ என்னும்படி கோவலனும் கண்ணகியும் இன்பத்திற்குத் துணையாயுள்ள இளமை, செல்வம் முதலிய யாவும் எய்திக் காட்சி தருகின்றார்கள். அவ்விருவரும் செல்வத்திற் பிறந்து செழுமையில் திளைத்து வளர்ந்தவர்கள். அவர்கள் ஒருநாள், தமது நெடுநிலை மாடத்தின் இடை நிலத்தில் உள்ள மலர்ப்படுக்கையில் இனிது இருக்கின்றனர். மெல்லென வீசும் தென்றல் நல்மணத்தோடு சாளரத்தின் வழியாகத் தவழ்ந்து வருகின்றது. தென்றலின் பரிசம் இன்பவேட்கையை எழுப்ப, இருவரும் அம்மாளிகையின் மேலுள்ள அரமியத்தை அடைகின்றனர். அங்கே கோவலனின் ஐம்புலன்களும் ஆராத இன்பத்தில் அமிழ்ந்துகின்றன. "கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடிகண்ணே உள" என்பது கோவலன் அனுபவத்தில் பொய்யாமொழியாய் விடுகின்றது. இன்பத்தின் எல்லை காணுதவனாய் அவன் கண்ணகியின் கட்டழகினைப் பாராட்டி மகிழ்கின்றான். உயர்வொப்பில்லாக் கண்ணகியின் உறுப்பழகினை ஒன்றொன்றாகப் புனைந்துரைக்

கின்ருன். விழியையும் மொழியையும், இடையையும் நடையையும் அவன் எடுத்துக் கூறும் முறையே அற்புதமாய் உள்ளது. அழகுள்ள பொருளைத்தேடி அறிவதிலும், அவற்றின் தரத்தினை நுணுகி நோக்கி மகிழ்வதிலும் அவன் மிக்க ஆற்றல் உள்ளவன் போலும்! கண், காது முதலிய ஐம்பொறிகளாலும் நுகரப்படும் கவின் அமைந்த பொருள்களையெல்லாம் வென்று நின்ற கண்ணகியின் உறுப்பழகை வண்ண மொழிகளில் அவன் வர்ணித்தின்புறுகின்ருன்.

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே''

என்ற புகழ் மொழிகள், ஐம்புலன்களாலும் அவன் பெற்ற இன்ப நிறைவையும் கண்ணகியின் புறத்துறுப்புக்களின் சிறப்புக்களையும் தெற்றெனக் காட்டுகின்றன. கோவலன் இவ்வாறு கண்ணகியோடு குலாவி இன்புற்று வாழும் நாளில் அவன் தாய் அக்கோவலனும் கண்ணகியும்இல்லறம் இனிது நடத்துதலைக் காணவிரும்பினள். எனவே, அவர்கட்கு வேண்டிய பல் வகைப் பொருள்களையும் அளவின்றிக் கொடுத்து, ஏவலர் முதலானோரையும் அவர்க்குத் துணையாகவிடுத்து, அவ்விருவரையும் இல்லறத்திற் செலுத்தினள்.

கோயில்களிலே புறச்சுவர்களிலும் வாயில்களிலும் அழகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும். கோயிலுக்குச் செல்வோர் சிலர் அந்தச் சிற்பங்களை வியந்து கொண்டாடுவதுடன் அமைதி பெறுகின்றனர். கோயிலின் அகத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைக் கும்பிட்டுப் பயன்பெற நினையார். அதுபோல, மக்கள்தம் புறத் துறுப்புக்களை மாத்திரம் நயத்தற்கும் வியத்தற்கும் உரிய மனப்பாங்கு உடையோரும் மக்களுள் உள்ளனர். அத்தகையோர் ஒருவருடைய உள்ளத்தின் சிறப்பை ஆராய்ந்து அறிந்து உவக்கும் வாய்ப்பினை இழந்துவிடுகின்றனர். எப்பொருள் எத்தன்மையதாயினும் அப்பொருளின் மெய்மைத் தன்மையைக் காண வல்லவனே அறிஞனவன். கண், காது முதலிய தமது பொறிகளின் வழிச்சென்று பொருள்களின் தன்மையை மட்டிடுவோர் அப்பொருள்களின் உண்மைத் தன்மையை நுணுகிக்காணும் உணர்வு பெறமாட்டார். கோவலனும் அத்தகையவனே. கோவலன் மணமெய்தியபின் பெற்ற இன்ப நுகர்ச்சியை இளங்கோவடிகள் மிகமிக விரித்து அழகுறக் கூறியுள்ளார். கோவலன் கண்ணகியின் நலத்தைப் பாராட்டியதாக அவர் பரக்கக் கூறிய சொற்கள் அவனது உள்ளப் பாங்கை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அப்பகுதியில் அமைந்த சொற்கள் யாவும் கண்ணகியின் உறுப்பழகை வியந்து கூறுவனவே.

தீதிலா வடமீனின் கற்பினையோ, மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங் குணத்தையோ காணும் கண்ணினை அவன் அப்பொழுது பெற்றிருக்கவில்லை. அவன் மனக் கண்ணிற்குக் கண்ணகி அழகின் தெய்வம்; இன்பத்தின் வடிவம் அன்றி, இல்லறத்திற்கு ஏற்ற துணைவி என்று அவன் எண்ணுது போயினன். இல்லறம் நடத்துமாறு தனியாக விடப்பட்டபோதும் அவன் கண்ணகியோடு கழித்த ஆண்டுகள் மிகச்சிலவே. ஒரு பொருளின் உட்பண்பை ஆராயாது புறத்திலமைந்த கவர்ச்சியை மட்டும் விரும்பி நாடுவோர் பயனுள்ள தம் வாழ்க்கையையே பாழாக்குகின்றனர். கோவலனின் இளமையும் அவ்வாறு பயனின்றிக் கழிய விருப்பதனை அவனது இளம் பருவத்திலமைந்த உள்ளப்பாங்கே தெள்ளிதில் உணர்த்துகின்றது.

## வாழ்க்கையும் நோக்கமும்

சங்க காலத்திற் செய்யப்பட்ட அகப்பொருள் நூல்களில் பேசப்படும் தலைவனும் தலைவியும் பிறப்பு குடிமை முதலியவற்றுல் ஒத்த தன்மையுடையவர்களே. பிற்காலத்திற் செய்யப்பட்ட பெருங்காப்பியங்களிற் காணப்படும் கதாநாயகன், நாயகி ஆகியவர்களும் உள்ளப்பாங்கு முதலியவற்றுல் ஒத்த இயல்பினரே.

உதாரணமாக, இராமபிரான் எத்தகைய உயர்ந்த உள்ளப்பாங்கு உடையவரோ சீதா தேவியும் அத்தகைய அரும்பண்பு அமையப் பெற்றவரேயாவர். அவ்வாறே அர்ச்சுனன் திரௌபதி, அரிச்சந்திரன்- சந்திரமதி, நளன்–தமயந்தி ஆகியோரும் ஒத்தபண்பினரே. அவர் அவ்வாறாக, சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளால் சித்திரிக்கப்பட்ட கோவலனும் கண்ணகியும் பிறப்பு, குடிமை, அழகு, அறிவு முதலிய பலவற்றாலும் ஒப்புடையோராய், வாழ்க்கையின் நோக்கம் பற்றிய தன்மையில் இருவர் தம் உள்ளங்களும் வேற்றுமையுடையனவாய்க் காணப்படுகின்றன.

மனிதப் பிறப்பும் விலங்குப் பிறப்பும் ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவுடையன. மக்களில் மாக்களும் உள்ளனர். மாக்களில் மக்கட் பண்பும் அரிதாய்க் காணப்படுகின்றது. ஐம் புல நுகர்ச்சியோடு சுயநலமும் உடையது விலங்குப் பிறப்பு ஐம்புலத்திற்கும் அப்பாலாய்ப் பகுத்தறிவும், அதனால் பிறர் நலம் பேணுதலும் உடையதே மக்கட் பிறப்பு. ஐம்புலனையும் பகுத்தறிவையும் உடைய ஒருவன் சுயநலத்தையே பேணி நடப்பனேல், அவனது வாழ்க்கை ஏனைய உயிரினங்களின் வாழ்க்கையை ஒத்ததேயாகும். உயர்ந்த பிறப்பெனப்படும் மனிதப்பிறவியை எடுத்த ஒவ்வொருவனும், மனைவியோடும் மக்களோடும் கூடி இல்வாழ்க்கை நடத்தாது இல்ல

றம் நடத்தலே முறைமை. வள்ளுவர் பெருமான் ‘இல்வாழ்க்கையியல்’ என்னாது ‘இல்லறவியல்’ என்று பெயர் கொடுத்து, அதன் முதற் கண் அமைந்த அதிகாரமாக இல்வாழ்க்கையைக் கூறி, அவ்வில்வாழ்க்கையும் இயல்புடைய மூவர் துறந்தார், துவ்வாதவர், இறந்தார், தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று கூறப்பட்ட எல்லார்க்கும் துணையாய் நின்று அறமாதல் வேண்டுமென வற்புறுத்தி யுள்ளார். உருவாலும் உணர்வாலும் பலர் மக்களேயாயினும் வாழ்க்கையும் அதன் நோக்க மும் என்ற இருதன்மைகளால் அவர்கள் வேறு படுகின்றனர். கோவலனும் கண்ணகியும் என் னும் இருவரும் உரு, உணர்வு முதலியவற்றால் ஒருவரை ஒருவர் ஒத்தனராயினும் வாழ்க்கை யில் இருவரும் வேறு வேறு திசையில் செல் பவரே. வாழ்க்கையை இன்பப் பேற்றிற்காக நடத்தினான் கோவலன். வாழ்க்கையை அற மாக்கமுயன்றாள் கண்ணகி. இல்வாழ்க்கையை இன்பம் நிறைந்ததாகச் செய்வதற்கு மனைவியே வேண்டும் என்பதில்லை. ஆயின், இல்வாழ்க் கையை இல்லறமாக்குவதற்குக் கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் துணையாதல் இன்றியமையாதது.

அழகினையும், அழகுக் கலையினையும் சுவைக் கும் திறன் கோவலனிடத்தில் உண்டு. ஐம்புலன் களாலும், அறிவாலும் அழகுள்ள பொருள்களை

நாடி அவற்றின் சிறப்பைத் தெரிந்து இன்பம் கொள்வதே கோவலனின் இளமைக்கால இலட்சியமாயிருந்தது. குணங்களாற் சிறந்த கண்ணகியை வாழ்க்கைத் துணையாகப் பெற்றும் கோவலன் தனக்கினிய துணையைப் பெறுதவன் போலானான். இல்லிலிருந்து இனிய மனையாளோடு நல்லறங்கள் பலவும் செய்ய எண்ணுமல் இன்பத்தை நாடித் திரிந்தான். கல்வி, அறிவு, செல்வம், இளமை ஆகிய எல்லாம் ஒருங்கமைந்த கோவலனின் இலட்சியம் நிறைவேற ஏற்றகாலம் வந்தது. அழகு, கலைத்திறன், அறிவு ஆகியன முற்றும் நிரம்பப்பெற்ற மாதவி என்னும் இளம் பருவத்துக் கணிகையொருத்தி அந்நாளிற்றுன் நடனம் அரங்கேற்றிச் சோழ மன்னனது பரிசுபெற்றுள். மன்னன் அவளுக்குப் பரிசாக வழங்கிய மாலையை விலைகொடுத்து வாங்கியதன் மூலம் கோவலன் மாதவியின் உறவையும் வாங்கிவிட்டான். கோவலன் வாழ்வில் அவன் கருதியது கைகூடப் பெற்றமையால் ஓர் எழுச்சியும், கண்ணகி வாழ்வில் அவள் கருதியது கைகூடாமையால் ஏமாற்றமும் ஏற்படலாயின. கோவலன் கண்ணகியிடத்தில் அழகை மட்டும் கண்டான். அழகோடு கலைச் சிறப்பும் ஒருங்கு அளிக்கத்தக்கவளாய் விளங்கிய மாதவியின் உறவால் அவனது இன்ப அநுபவம் வளர்பிறைபோல் நாளும் சிறந்து மிகுந்தது.

சிலம்பில் அமைந்த கதாநாயகனும் கதாநாயகியும் இவ்வாறு முரண்பட்ட இலட்சிய நோக்குடன் வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். கதாபாத்திரங்களை இவ்வாறு படைத்துக் காப்பியத்தை உருவாக்குவதன்மூலம் இளங்கோவடிகள் பிறரிடத்துக் காணப்படாத தனிச் சிறப்புடன் விளங்குகின்றார். கதாநாயகர்களாகிய கோவலனும் கண்ணகியும் பிறப்பு முதலிய பல திறத்தினாலும் ஒருவர்க்கொருவர் ஏற்புடையவராகக் கூறப்படுதலையும் உள்ளத்தின் ஆழத்தில் அமைந்த பண்பின் தன்மையால் ஒருவர்க்கொருவர் மாறுபட்ட திசையில் செல்பவராகக் கூறப்படுதலையும் நோக்கும்போது, அடிகளாரின் நுண்ணிய ஆற்றல் பாராட்டத்தக்கதாயுள்ளது. கோவலனைப்பற்றி அடிகளார் நமக்கு அறிமுகப்படுத்தும்போது,

''மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் [பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள் என்று இசை [போக்கிக் காதலாற்
கொண்டேத்தும் கிழமையான்''

எனக் கூறுவதிலிருந்து கோவலன் சாதாரண ஆண்மக்கள் எல்லாரினும் மிக மேம்பட்டவன் என்பதை உணர்த்தினார். அவ்வாறே கண்ணகியை,

"போதிலார் திருவினுள் புகழுடை
[வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம் இவள் திற
[மென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்
[குணத்துக்
காதலாள்"

எனக்கூறி அவளது ஒப்புயர்வற்ற பண்புகளை அறிவுறுத்தினர். இவ்வாறு புறத் தோற்றத்திலும், போற்றக்தக்க செயல்களிலும் அவ்விருவரது ஒத்த தன்மைகளை உரைத்து, அவர்களது உள்ளத்தின் ஆழத்தில் அமைந்த மாறுபட்ட தன்மைகளையும் வாழ்க்கை நோக்கம் பற்றிய வேறுபட்ட பண்புகளையும் அவர்களது வாழ்க்கைக் கூறுபாடுகளை வகுத்துக் கூறுவதன் மூலம் உய்த்துணர வைத்துள்ளார். துன்பத்தில் இன்பம் காணுதலும், வேற்றுமையில் ஒற்றுமை காணுதலும் உயர்ந்தவர்க்கே இயலும். அது போல, வேறு வேறு திசைநோக்கிய இருவரது இல்வாழ்வில் வியக்கத்தக்க நற்பெரும் பண்புகளை நாம் காணத்தக்கவாறு இளங்கோ தமது காப்பியத்தை அமைத்துத் தந்துள்ளார். எனவே, ஏனைய காப்பியங்களிலுள்ள கதாபாத்திரங்களில் காணப்படும் இலட்சியப் பண்புகளைக் காட்டிலும் சிலம்பில் கூறப்பட்ட கோவலனதும் கண்ணகியதும் வாழ்வில் காணும் சீரிய பண்புகள் ஒருவகையில் வேறுபட்டும் உயர்ந்தும் உள்ளன.

# நாடக மகளின் ஆடலும் பாடலும்

கம்பர் பாடிய காப்பியத்தின் கதாநாயகனை இராமன் நற்குணங்கள் எல்லாம் முற்றும் நிரம்பப்பெற்றவன். மனிதனிடத்தில் உள்ள தீய பண்புகள் முற்றும் அடங்கி நற்பண்புகள் முதிரப்பெற்ருல் அம்மனிதன் எவ்வாறு காணப்படுவானே அதற்கு உதாரண புருடனுயுள்ளவன் இராமன். அவன் இல்லாளோடு கூடிவாழினும் துறவியே; பிறப்பால் மனிதனுயினும் சிறப்பு மிக்க குணங்களால் அமரனே. "இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்ற அந்த இராமன் வேறு, சிலம்பில் காணப்படும் கோவலன் வேறு. தீதிலாவடமீனின் கற்பமைந்த மங்கை நல்லாளை மனையாளாகப் பெற்ற பின்னரும், மற்றெருமாதினை நாடும் மதிபடைத்தான், கோவலன்! கண்ணுக்கு அழகு மட்டும் உடையயளாய கண்ணகியிலும் அழகும் கலைத்திறனும் உடைய மாதவி, கண்ணை மட்டுமன்றிக் கருத்தையும் கவர்த்தக்கவளாய் இருந்தாள்.

ஒரு தலைவன் பரத்தையரோடு உறவு பூண்டாஞகப் பாடல் செய்யும் வழக்கம் சங்ககாலத்திலும் இருந்தது. பரத்தையர்கள் பண்டைநாளில் இற்பரத்தையர், சேரிப் பரத்தையர் எனப் பலராயிருந்தனர். முன்னைத் தவத்தால் அன்பொத்த உள்ளத்தனய் ஒருத்தியைக்கண்டு கூடிமணந்த தலைவன் பின்னர்ப் பரத்தையர் பொருட்டாகப் பிரிந்தானென்றும், அவனது

பிரிவு கருதித் தலைவி அவனோடு ஊடினாள் என்றும், அவ்வூடலைத் தீர்க்கப்பாணர், விருந்தினர் முதலியோர் அவனுக்குத் துணையாயினர் என்றும் சங்க நூல்கள் கூறும். அவ்வாறு சங்க நூல்களிற் கூறப்படும் தலைமகனை ஒப்ப, சிலம்பில் காணப்படும் கோவலனும் அவனது ஒழுக்கமும் அமைதலில் வியப்பில்லை. ஆயின் கோவலனால் உறவு கொள்ளப்பட்ட மாதவி என்னும் பாத்திரத்தை இளங்கோ நூதனமாகச் சித்திரித்துள்ளனர்.

மாதவியின் குலம் பரத்தையர்குலம். வரைவில் மகளிர் என்றும், இருமனப் பெண்டிர் என்றும், அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார் என்றும், பொதுநலத்தார் என்றும், மாயமகளிர் என்றும் வள்ளுவரால் இழித்துரைக்கப்பட்டவர்கள் அப் பரத்தையர்கள். அவர்கள் மரபிலே வந்த மாதவியும் அத்தகையள் போலும் என்ற கருத்தை நீக்குவார் போல இளங்கோவடிகள், ''மலைப்பரும் சிறப்பின் வானவர் மகளிர் சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை தாதவிழ் புரிகுழல் மாதவி'' என மாதவியின் பிறப்பினை மாண்புறக் கூறுகின்றார். ஊர்வசி தோன்றிய மரபிலே உதித்த மாதவி பிற பொதுமகளிர்க்கில்லாத சிறப்புக்கள் பல உடையவள். நற்குணங்கள் மாத்திரமன்றி கல்வி, அறிவு, கலைத்திறன் முதலியனவும் உரிய பருவத்திலேயே எய்தப் பெற்றவள்; ஐந்து வய

தின் மேல் பன்னிரண்டு வயதுவரையும் ஆடல் பயின்றவள்; பன்னிரண்டு வயதில் அரசன் முன் னிலையில் தனது ஆடலை அரங்கேற்றிச் சோழ மன்னனால் அளிக்கப்படும் பெரும் பரிசாகிய ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் மாலையையும் பெற்றவள். இத்தகைய கலை நலத்தாலும் அழகி னாலும், பூம்புகாரிலுள்ள பெருங்குடி மக்களும் அம்மக்களுக்கெல்லாம் தலைவனாய சோழமன்ன னும் மேலாக மதிக்கத்தக்கவாறு விளங்கிய மாதவி, பிறப்பினால் எய்திய மாசினைத் தன் அறிவு, அழகு முதலிய அரும் பண்புகளினால் நீக்கி, பெருமையொடு விளங்கியவள். ஒருவ ரது குலமும், உருவும் அவரது உயர்வு தாழ்வு களுக்குக் காரணமானவையல்ல. அவரது குண மும், அறிவும், செயலுமே பெருமை சிறுமை கட்குக் காரணமாவன. மாதவியின் மாண்பும் அவளது பிறப்பால் அன்றி அறிவு முதலியவற் றால் அறிந்து போற்றப்பட வேண்டியதே என் பதை அறிவுறுப்பார் போல இளங்கோவடிகள் தமது நூலில் மாதவியைப் பற்றிக் கூறும் பகுதி யில் தொடக்கத்திலேயே அவளது கலைத்திறனை விரித்துரைத்தார்.

ஆடல், பாடல், அழகு என்னும் இவற்றின் சிறப்பால் நாடெல்லாம் புகழத்தக்க மாதவி யைக் காதலியாகப்பெற்ற கோவலன், இன்பமே எந்நாளும் எய்தினன். ஊடலும் கூடலும் கோவலனுக்கு அளித்து மாதவி அவன் மனக்

கருத்திற்கிசைய நடந்தாள். அவன் தனது மனை யையும் அரிய மனையாளையும் மறந்தான். பல் லாண்டுகள் கழிந்தன. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்களுக்கும் மாதவியின் ஆடல், பாடல், அழகு என்பன கோவலனுக்கு விருந்தாய் இருந்தன. வாழ்க்கை யில் ஐம்புல இன்பங்களை ஆரத்துய்ப்பதே பெரும்பேறு எனக் கருதிய கோவலன் அவற் றைப் பல்லாற்ற்றானும் துய்த்தனன். காவிரிம்பூம் பட்டினத்தில் ஆண்டு தோறும் இந்திர விழா நடைபெறுவதுண்டு அது சித்திரை மாதத்துச் சித்திரை நாளில் தொடங்கி இருபத்தெட்டு நாள்வரை நிகழும் அவ்விருபத்தெட்டு நாளும் பூம்புகாரிலுள்ள மக்கள் அனைவரும், வழிபாட்டி லும் கலை நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டுக் களிப்பர். அந்நாள்களில் சிறப்பாக நடைபெறும் மாதவி யின் ஆடலைக்காண, வேறு நாட்டாரேயன்றித் தேவரும் அங்குவந்து சேருவர். ஆடலரசியைக் காதலியாகப் பெற்ற கோவலன் அவளது ஆடலையும் பாடலையும் கண்டு மகிழ்வதோடு அவளது கலையழகினைப் பிறரும் கண்டு கொண் டாடுதலைப் பார்த்தும் பெருமிதமடைவன். கோவலன் இவ்வாறு இன்பத்தை அளிக்கும் அவளது ஆடலும் அழகும் ஒவ்வொருபோது துன்பத்தையும் தருதலுண்டு. தன்னுடைய புலன்களையும் மனத்தையும் வசப்படுத்திய அவ ளது கலையும் அழகும் பிறரையும் அவ்வாறு வசப்படுதததுதலைக் காணும்போது அதனைப்

பொறுக்கலாற்ருது வருந்துவன். ஆசை சுய நலத்தினை அடிப்படையாகக் கொண்டது. அன்பு பிறர் நலத்தினையே அடிப்படையாகக் கொண்டது.

கோவலன் மாதவியினிடத்திலமைந்த கலைச் சிறப்பு, அழகுப் பொலிவு என்னுமிவை காரணமாக அவளைவிரும்பினுன். அவளது கலையையும் அழகையும்தான் மட்டுமே அநுபவிக்க வேண்டுமென்ற ஆசைவயப்பட்ட கோவலன் பிறர் அவற்றைப்பார்த்துப் பெருமையாகப் பேசுதலையும் அவளைப் புகழ்தலையும் காணும் போது இன்புறுதலின்றிப் பொறுக்கலாற்ருத மனப்பாங்கும் துன்பமும் அவன் அடைதல் இயல்பே. அவ்வித நிலையில் கோவலன் வாடியிருக்கும் போதெல்லாம் அவனது இழிகுணத்தைக்கண்டு இகழாது அவன்மனத்தை மகிழ்விக்கும் வகையில் மாதவி முயல்வாள் இந்திர விழா நிகழ்ந்த இருபத்தெட்டு நாளிலும் கோவலன் இவ்வாறு சிறிது இன்பமும் பெரிது துன்பமும் அடைந்திருத்தலைக்கண்ட மாதவி அவளை வேறு வழியால்மகிழ்விக்கஎண்ணி, கடலாட்டிற்கலந்து களிப்படைதற்கு வழி செய்தாள் இந்திர விழாவின் இறுதிநாளில் பூம்புகார் மக்கள் அனைவரும் கடற்கரையை அணுகிப் பலவகை இன்பச் செயல்களில் ஈடுபட்டும், கடலாடியும் மகிழ்வர்.

அவ்வாறேமாதவியும் கடலாட்டின்பொருட்டுத் தன்காதலனை முதல் நாளே அழைத்துக்கொண்டு காவிரிக் கடலோடு கலக்கும் கரையிடத்தை அடைந்தாள். தன் மனத்தில் தனியிடம் பெற்ற கணவனை எவ்வாற்றானும் மகிழ்விக்கும் உயர்ந்த பண்பு மாதவியிடத்தில் காணப்பட்ட ஒப்பற்ற பண்பாகும்.

## கற்புக் கடம் பூண்ட பொற்புடை நங்கை

ஆடவரை ஆண்மையுடையரென்றும் ஆளும் தன்மையுடைய ரென்றும், பெண்களை மெல்லியலாரென்றும், விரும்பத் தக்கார் என்றும், மடவார் பேதையரென்றும் கூறுவது புலவோர் வழக்கு. இதனால் ஆண்கள் வலியாரென்றும் உயர்ந்தோர் என்றும், பெண்கள் மெலியர் என்றும் தாழ்ந்தோர் என்றும் கொள்ளுதல் பொருந்தாது இரு திறத்தாரும் வேறு வேறு வகையால் உயர்ந்தவரே. அவ்வாறே துறவிகள் உயர்ந்தவரென்றும் இல்வாழ்வார் இழிந்தவரென்றும் கூறுதல் பொருந்தாது. வனத்திலே வாழ்ந்து உணவைச் சுருக்கி, புலன்களையடக்கி, ஒருமையுடன் இறைவனை நினைந்து தவஞ்செய்யும் முனிவர்கள் எத்துணைப் பெரியரோ அத்துணை இல்லிலிருந்து அன்பைப்பெருக்கி அறவழியில் வாழும் மங்கையரும் மாணப் பெரியரே யாவர். "வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கி

யும், நுங்குவ அருந்துவ நீக்கி நோற்பவர் எங்குளர்? குலத்தில்வந்து இல்லில் மாண்புடை நங்கையர் மனத்தவம் நவிலற்பாலதோ?'' என அநுமன் கூறியது ஈண்டு நினைக்கத்தக்கது. மெல்லிய இயல்பினையுடையரான பெண்கள் தம் கணவரிடத்து வைத்த தலையாய அன்பினால் தவத்தோரினும் மேலாம் நிலையையும் வலிமையையும் எய்துகின்றனர். அந்நங்கையர் பிறரால் செய்தற்கரிய செயலைச் செய்யவும் வல்லவராகின்றனர். துறவியர்கள் தம்மைத் துன்பஞ் சுடச்சுட இறைவனிடத்தில் வைத்த அன்பிற் சிறிதும் பிறழாது உறுதியாய்நின்று உயர்வடைகின்றனர். அதுபோலக் கற்புடைய மங்கையரும் துன்பஞ் சுடச்சுடத் தம் கணவரிடத்தில் வைத்த அன்பில் அணுவளவும் மாறுபடாது அறமே புரிகின்றனர். அவ்வாறு அப்பெண்ணினல்லார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதனால் வானுறையும் தெய்வத்துள் வைத்து மதிக்கப் படுகின்றனர். சிலம்புச் செல்வியாகிய கண்ணகி அவ்வாறு வாழ்ந்து தெய்வமானவளாவள்.

மகளிர் எவரும் தம் கணவர் அறிவிலும் அழகிலும் ஆற்றலிலும் மிக்கோராய் இருத்தலையே விரும்புவர். அவ்விருப்பம் துணையாக அவர்களது அன்பு நாளுக்கு நாள் பிறைமதி போல வளர்ந்து நிறைவுறும். தம் கணவர் மதுவையோ சூதினையோ விரும்பின் அது அம்

மங்கையர்க்குத் துன்பத்தையே தரும். தன் கணவன் மதுவருந்துதல் முதலிய தீய செய்கைகளை விடாதுசெய்து உறவினராலும் பிறராலும் வெறுத்து ஒதுக்கப்படினும் நற்குணம் வாய்ந்த மனையாள் அவனை வெறுக்காது அன்பு செய்வாள். அவ்வாறு தன் கணவனிடத்துள்ள குற்றங்களெல்லாவற்றையும் குணமாகக்கொண்டு நேசிக்கும் உயர்ந்த பண்பு வாய்க்கப்பெற்ற உத்தமியும், தன் கணவன் மற்றொரு பெண்ணில் மனம் வைத்துள்ளான் என்பதைக் கனவிலும் விரும்பாள். பிற பெண்ணிடத்தில் உறவுடையானையும் குறைகாணாது, அவனைத் தன் உள்ளக் கோயிலில் எழுந்தருளிய உயர் தெய்வமாகப் பூசித்து அன்பு செய்தல், செயற்கு அரிய செயல் மட்டுமன்று; நினைத்தற்கரியதுமாகும். கம்பர் காட்டிய கற்பினுக்கு அணியானசீதை, இராமன் பிரியும் அரக்கியரின் நெருக்குதலும் வருத்த வருத்த, அருந்தவம் செய்வார்போல இராமன் நாமமே தாரகமாய், அவன்மேல் தான் வைத்த அன்பே உயிராய் அருஞ்சிறையில் இருந்தாள். தீயவர் கையில் அகப்படினும் தன் நாயகனையன்றிப் பிறரை உள்ளத்தாலும் தீண்டாத உத்தமியரின் வாழ்வுக்கு உதாரணமாகச் சீதையின் சிறைவாழ்வு அமைந்துள்ளது. இளங்கோவடிகள் சிறப்பித்துப் புனைந்த பெண்ணணங்காம் கண்ணகி, மங்கையர் யாரும் பொறுக்கலாற்றாத தீய ஒழுக்கத்தை மேற்கொண்ட தன் நாய

கனைத் தூய்மையான அன்போடு தொழுது அவன் குறிப்பின் வழி ஒழுகிய பெருஞ் சிறப் புடையளாயினள்.

ஒருபயனையும் கருதாது செலுத்தப்படும் அன்பே தலையாயது. தலைவன் நேசிக்காவிடினும் தம் நேயம் குன்றுதிருத்தலை உயர்ந்த மகளிரிடத்தில் காணலாம். காரைக்காலம்மையார் இறைவனிடத்தில்வைத்த அன்பு அத்தகையதே. "இடர்களையாரேனும் எமக்கிரங்காரேனும் படரும்நெறி பணியாரேனும்—சுடருருவில், என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானூர்க்கு அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு" என்ற அவரது திருவாக்கில் அவரது அன்பின்தன்மை புலப்படுகின்றது. "என்நெஞ்சு அவர்க்கு" என்ற அம்மையார் அன்புபோலக் கண்ணகியும் தன் நெஞ்சினைக் கோவலனுக்கே உரிமையாக்கிய தன்மையள். அவள் நெஞ்சம் கோவலனை நேசித்தலையன்றி வேறு அறியாது. கோவலனைத் தனது ஆடல், பாடல், ஊடல், கூடல் ஆகியவற்றால் மாதவி மகிழ்விப்ப, அவன் கண்ணகியையே மறந்து வாழ்கின்றான். கண்ணகியின் அணிகலன்களும் ஒன்றொன்றாக மறைகின்றன. எண்ணரிய செல்வமும் வெயில் முன்கிடந்த வெண்ணெய் போலக் கரைந்து தீர்கின்றது. அந்நிலையிலும் கண்ணகியின் மனம் கோவலனை வெறுக்கவில்லை. கோவலனோடு கூடி மகிழும் மாதவிக்குக் கிடைத்த இன்ப வாழ்வும், கோவலனின் தாய் தந்தையரும் தன்

தாய் தந்தையரும் அளித்த குறமனைய செல்வக் குவியலும் தனக் கெய்தாமை பற்றியோ தான் அவற்றை இழந்தமை பற்றியோ கண்ணகி எண்ணினுளல்லள். அவையேயன்றிக் கோவலன் தன்பால் அன்பு குறைந்தான் என்றும் கண்ணகி கருதினுளல்லள். தன் கணவனது அன்பினைத் தானும் எதிர்பாராது அவனுக்குத் தன் அன்பினைப் பெருக்கி மகிழ்வதிலேயே கண்ணகி கருத்தாயிருந்தாள். எனவே, தீயவனுய்த்திரிந்த கோவலனைத் தெய்வமாகக் கருதி அன்பு செய்த அவளுக்குச் சிறிதேனும்மனக்கவலை இல்லையென் பதில்லை. பெரியதோர் கவலை அவள் மனத்தைப் பிடித்திருந்தது. தன் தெய்வமான கணவனைப் பேணிப் பணிசெய்யவும், அவனோடு கூடி அறம் பல புரியவும் ஆவல் கொண்டிருந்தாள். அந்தத் தவங்களை ஆற்றத் தன்கணவன் அருகில் இல்லாதது அவளது மனத்தைக் கணந்தோறும் வருத்தியது. அவ்வருத்தத்தால் புலம்புதல், பிறர் தன்னை ஆற்றத் தக்கவாறு பெருந் துயருறுதல் என்பன சிறிதுமின்றி அடங்கி வாழ்ந்தாள். கோவலனின் தாய் தந்தையர், அவன் கண்ணகியைப் பிரிந்து வாழுதலைக் காணும்தோறும், தம் மைந்தன் செயல் நினைந்து வருந்துவர். கண்ணகி அவர்களைக் காணும் போதெல்லாம் தன் கவலையை மறைத்து, தன் புன்முறுவல் மூலம் அவர்களது துயரத்தையும் ஒருவாறு துடைப்பாள். கணவன் அறம், பொருள், இன்பம் காரணமாகப்

பிரிந்தகாலத்தில் மனைவி ஆற்றியிருத்தல் முல்லை எனப்படும் சங்க இலக்கியங்களில் கூறப்படும் தலைவன் அறம் முதலியன காரணமாகப் பிரிந்திருக்கும் காலம் ஒரு குறித்த அளவினதாயே அமையும். எல்லைகடந்து பிரிந்திருப்பானாக இலக்கியஞ் செய்தல் புலவர் வழக்கில் இல்லை. கோவலன்கண்ணகியைப்பிரிந்துமாதவியோடுவாழ்ந்த காலம், தொல்காப்பியத்திற் கூறப்பட்ட கால எல்லையைக் கடந்தது. ஓராண்டு ஈராண்டன்றி பல்லாண்டுகள் மனையையே மறந்திருந்த கோவலனிடத்தில் மாசில்லாத அன்பு பூண்டு அவ்வன்பு துணையாக ஆற்றியிருந்த கண்ணகியின் பண்பு காவியப் பொருளுக்கு உயிராய் விளங்குகின்றது.

கோவலன் பிரிந்தமையால் கண்ணகியின் உள்ளத்தில் மூளாத் தீப்போல் அடங்கிக் கிடந்த துயரத்தை முகக்குறிப்பாலறிந்த தேவந்தி என்பாள், அவளது துயரைப் போக்கவும் அவளுக்கு நல்வாழ்வு கூட்டவும் ஆசைப்பட்டு ஒருநாள் அவளை அணுகி, ஒன்றுகூற முற்படுகின்றாள். காவிரி கடலோடு கலக்கும் இடத்திற் கயலிலே நெய்தலங் கானல் என ஓரிடம் உண்டு. அங்கே சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் பெயருடைய இருகுளங்கள் உள்ளன. கணவனைப் பிரிந்தோர் அவ்விரு குளத்திலும் மூழ்கி, அயலிலேயுள்ள காமவேள் கோயில் சென்று வணங்குவராயின், பிரிந்த கணவரை மீட்டும் கூடப் பெற்று இம்மையில் இன்பம் நிறைந்து வாழ்வர்.

மறுமையிலும் பிரியாது சுவர்க்கத்தில் இன்பந் துய்ப்பர். இச்செய்தியைத் தேவந்தி கண்ணகிக்குரைத்தபோது அவள் அதனை ஒரு பொருளாக மதிக்கவில்லை. கணவனையன்றிப் பிற தெய்வத்தைக் கனவிலும் கருதாத கற்புக்கடம் பூண்ட கண்ணகி, "இது நமக்கும் பெருமைதருவதன்று" எனச் சுருக்கமாகக் கூறி, அக்கருத்தைக் கைவிட்டாள். 'தெய்வ மிகழேல்' என்றதனால் தெய்வத்தை வணங்காமை ஒரு குற்றமாகும். தெய்வத்தை நம்பாதவர்களையும் தெய்வத்தை வணங்காதவர்களையும் அறிவுடைப் பெருமக்கள் மதிப்பதில்லை. தெய்வம் இல்லையென்பவன் பேய்க்குச் சமானமானவன் எனத் திருக்குறள் கூறுகின்றது. அவ்வாறு ஆணையிடும் திருக்குறள் தெய்வந் தொழாது கணவனைத் தொழுது எழுபவளைத் தெய்வத்துக்குச் சமமாகச் செப்புகின்றது. கண்ணகி, தெய்வமில்லை என்று அதனைத் தொழாதவளல்லள். கண்ணகி, தெய்வத்தைக் கணவனிடத்திற் கண்டு தொழுபவள். தெய்வத்தை ஒரு வடிவில், ஒரு பெயரில் வைத்து அன்பு செய்யும் உயர்ந்த மெய்யடியார்கள் பிற வடிவில், பிறபெயரில் அதனைக் காண்பதில்லை. அதுபோல கணவனையே தெய்வமாக வணங்கும் கற்புடை மகளிர் பிறதெய்வத்தைப் பேணி அன்பு செய்வதில்லை. ஆகவேதான், தன் கணவனை மீளப்பெறும் பொருட்டாயினும் கண்ணகி பிற தெய்வத்தை வணங்க நினையா தொழிந்தாள்.

# அன்பின் ஆற்றல்

அன்பு தெய்விகத் தன்மை வாய்ந்தது. அன்பே இறைவன் வடிவமென்றும் அன்பு வேறு இறைவன் வேறு என்று கூறுதல் தவறு என்றும் ஆன்றோர் அறுதியிட்டுக் கூறினர். மனிதன் தன்னிடத்திலமைந்த அந்த அன்பென்னும் அருங்குணத்தை வளர்த்து, ஈற்றில் தெய்வமாகின்றான். தாய் தந்தையரிடத்தில் அந்த அன்பு சிறந்து காணப்படுதலாலேயே அவர் முன்னறி தெய்வமாக மதித்து வணங்கப்படுகின்றனர். இத்தகைய அன்பின் பெருமையை அநுபவத்திற்கண்ட நம் முன்னோர்களாகிய தமிழ் மக்கள் இல்லறத்தை இனிது நடாத்துதற்கும் இறைவனது திருவடியை எய்துதற்கும் அன்பினையே அருஞ்சாதனமாகக் கண்டனர்.

வள்ளுவர் அன்பினைப்பற்றி ஓர் அருமையான கருத்தை அறிவுறுத்துகின்றார். ''அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார், மறத்திற்கும் அஃதே துணை'' என்பது அவர் கூறிய குறள்-அறத்தைச் செய்தற்கே அன்பு துணையாகும் என்று கூறுவோர் அறிவில்லாதவர். அதற்கு மட்டுமன்று, மறத்தை நீக்குதற்கும் அந்த அன்பு துணையானதாகும். இறைவன் நஞ்சினை அமுதாக்கியவர் என்றும், கல்லைப்பிசைந்து கனி

யாக்கியவர் என்றும் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்கின்றார். இறைவனின் குணமான அன்பும் அத்தகைய அரிய செயல்களைச் செய்ய வல்லதே. நம்மோடு பகையானவரிடத்தும் நாம் தூயஅன்பினைச் செய்வோமாயின் அப் பகைவரின் நெஞ்சிலுறைந்துள்ள பகைமை யைக் கரைத்து அவர்களுக்கு நம்மிடத்தில் அன் புண்டாகுமாறு நமது தூய அன்பு செய்யவல்ல தாகும். இதனை அழுந்தி நின்று ஆராயாது மேலோட்டமாக எண்ணுவோமாயின், இது அசாத்தியமென்றே துணிந்துகூறுவோம். ஆயின், அன்பு நாம் கருதும் வகையில் எளியதொன் றன்று; அது வலியதில் வலியது; அரியதில் அரி யது; ஆற்றலில் பெரியது. இவ்வுண்மையைச் சிலம்பு தெற்றெனக் காட்டுகின்றதே!

தன்னை மணஞ் செய்து சில ஆண்டுகள் மட் டுமே சேர்ந்து வாழ்ந்து பின்னர்த் தன்னைப் பிரியவும், பிரிந்த கோவலன் மாதவியோடு காதல்பூண்டு மகிழ்ந்து வாழவும், தன்னிடத்தி லுள்ள செல்வம், அணிகலன் ஆகிய எல்லாம் மாதவியினிடத்துச் செல்லவும், கண்ணகி தன் கணவன்மேல் வைத்த அன்பில் சிறிதும் குன்றா தவளாய் இருந்தாள். கோவலனைப் பற்றியோ அவனது ஒழுக்கத்தைப் பற்றியோ குற்றம் நினையாமலும், உற்றாரோடாயினும் ஒரு வார்த் தையேனும் கூறாமலும் அப் பெண்ணணங்கு

வாழ்க்கை நடத்தினுள். அவ்வாறு அவள் ஓராண்டு ஈராண்டன்றிப் பல்லாண்டுகள் கழித்தாள். ஆண்டுகள் கழியுந்தோறும் அவளது அன்பும் வன்மையும் நன்மையும் சான்று விளங்கியது. கண்ணகியின் அன்பு அவளை மேன்மைப் படுத்தியதோடு அவளை மறந்திருந்த - ஆயினும் அவளால் நேசிக்கப்பட்ட அவளின் கணவனையும் திருத்தவும் திருப்பவும் வல்லதாகியது. நாம் ஒன்றினை வேண்டி நம் தெய்வத்தை வணங்குகின்றோம். நமக்கு வேண்டிய பொருளைத் தெய்வம் நாம் எதிர்பாராத வழியில் நன்மை பெருக்கத் தருகின்றது. இறைவன் நமக்கு அருளும் முறைமை நமது சிற்றறிவினுள் அடங்கி அறியத்தக்க தொன்றன்று. எல்லாம் அறிந்த பேரறிவினனான இறைவன் நமக்கு வேண்டியதை நாம் எய்துதற்குரிய காலத்தில் நாம் வியக்கத்தக்க வகையில் அருளி இன்புறுத்துகின்றார். அன்பு என்னும் தெய்வப்பண்பு தன் பயனைத் தரும் வகையில் வியக்கத்தக்க ஆற்றலையுடையதாகின்றது. மனையிலே அமைந்து வாழும் கண்ணகியின் மனத்தில் அடங்கி வளர்ந்த அவளது மாசற்ற அன்பு, கோவலனின் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் ஒருபெருந் திருப்பத்தை உண்டாக்கிற்று. அவள் கோவலனிடத்தில் தூதாக யாரையும் அனுப்பினுளல்லள். யாரையும் அனுப்ப விரும்பினுளுமல்லள். அத்தகைய உத்தமிக்கு அவளது அன்பே தூதாக ஆருமறியாமல் சென்றது.

கொடிறும் பேதையும் கொண்டது விடாதென்னும்படி கோவலனின் உள்ளமும் மாதவியை விடாது பற்றி நிற்கையில், அப்பிடியை - எவராலும் விடுவிக்க முடியாத பற்றினை - யாதோ ஒன்று முற்றாக விடுவித்துவிட்டது. எந்தவகையில் என்பதையும் எந்தச் சந்தர்ப்பத்தில் என்பதையும் இளங்கோவின் காப்பியத்தில் பார்ப்போம்.

இந்திர விழாவின் இறுதி நாளில் கடலாடுதற் பொருட்டு கோவலனும் மாதவியும் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் ஓர் கழிக்கானலில் கூடாரமிட்டுத் தங்கியுள்ளனர். இன்னிசை கூட்டி இன்பங்காணவிரும்புகின்றான் கோவலன். மாதவி யாழினைச் சுருதி கூட்டிக் கொடுப்ப அதனைக் கோவலன் வாங்கி அழகிய பொருள் பொதிந்த பாடலை அமைத்து யாழ் வாசிக்கின்றான். அவன் பாடிய பாடல்களிற் சில, காவிரியைப்பற்றியன; சில, கானல்வரிப் பாட்டுக்களாயுள்ளன. கானல் வரிப் பாட்டுக்களில் கோவலன் பாடியவை, ஒருத்திமேற் காதல் கொண்ட ஒருவன் அவளைப் பிரிந்து அவளை நினைந்து கூறியனவாய பொருளமைந்தவை. அவன் அவற்றைப் பாடிமுடித்ததும் மாதவி அவனிடத்தில் யாழை வாங்குகின்றாள். கோவலன் பாடிய பாடல்களின் பொருள் அவள்மனத்தினை அழுத்துகின்றது. மற்றொரு பெண்மேல் காதல்

கொண்டான் போல அவன் பாடியமைகண்டு தானும் மற்ருெருவன்மேல் காதல் கொண்டாள் போலப்பாட எண்ணுகின்ருள். உண்மையில் கோவலனையன்றிப் பிறரைத் தன் மனத்தகத்திலிருத்தாத குற்றமற்ற காதலுடையவளாயினும் மாதவி விளையாட்டாக அவ்வித பொருளமைந்த பாடலை யாழில் வாசிக்கத் தொடங்குகின்ருள். கோவலனேடு பல ஆண்டுகள் கூடி வாழ்ந்த வாழ்க்கையில் மாதவி அவனை எப்போதும் மகிழ்வித்தாளேயன்றி, விளையாட்டுக்காயினும் அவனைக் கவல்வித்தாளல்லள். மாதவி பரத்தையர் குலத்திற் பிறந்தவள் என்பதையோ, அவளது மனத்திலும் செயலிலும் மாசு இருக்கலாம் என்பதையோ அவன் எண்ணுதற்கிடமில்லாத வகையில் உயர்குலப் பெண்போல உள்ளத்தாற் பொய்யாது அன்பு செய்து அவனது பற்றுக்கும் பாராட்டுக்கும் உரியவளாய் விளங்கிய மாதவி இப்போது இவ்வாறுபாட எண்ணினளே! அவளது பாடல்கள் உயர்ந்த அன்பின் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன வாயினும், அவை கோவலனின் உறுதியான உள்ளத்தையே வேரோடு சாய்த்துவிடுகின்றன.

''தம்முடைய தண்ணளியும்
தாமுந்தம் மான்தேரும்
எம்மை நினையாது
விட்டனரேல் விட்டகல்க

அம்மென் இணர
அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை
நாம்மறக்க மாட்டேமால்''

''கைதைவேலிக் கழிவாய் வந்தெம்
பொய்தலழித்துப் போனார் ஒருவர்
பொய்தல் அழித்துப் போனார் அவர் நம்
மையல் மனம் விட்டகல்வார் அல்லர்''

கோவலன் இவற்றை வெறும் இசைப்பாடல்களாகக் கருதவில்லை. மாதவி தன் மனத்தில் மறைத்து வைத்திருந்த ஆசையின் வெளிப்பாடு என்றே எண்ணினான். எண்ணியதை, சிறிது பொறுமையுடன் இருந்து ஆராய்ந்து முடிவுசெய்தானல்லன் அவன் மனத்தில் அவளது குலம் குறுக்கே தோன்றி, அவனது எண்ணத்தைத் திண்ணமாக்கியது. மாதவியை அப்பொழுதே விட்டகன்றான். விளையாட்டுவினையாய் முடிந்தது.

எவர் நம்மீது ஐயங்கொள்ளின் எம்முடைய வாழ்வு, செல்வம், இன்பம் எல்லாம் கேடுறுமோ அவர் நம்மீது ஐயங் கொள்ளாத வகையில் நாம் விழிப்பாகவும் தூய்மையாகவும் ஒழுகல் வேண்டும். அவ்வாறு நடப்பது நாம் மிகவும் கருத்தோடு போற்றிச் செய்யத்தக்க செயலாகும்.

அவ்வாறு நடத்தலில் நாம் சிறிது பிழைவிடுவோமாயின் அப்பிழையால் வரும் பேரிழவினை நாம் எவ்வகையிலும் ஈடு செய்யவல்லவராக மாட்டோம், இந்த அரிய உண்மையை

''போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது''

என்று தமிழ்மறை உணர்த்துகின்றது. கோவலனின் மனத்தில் தன்னைப்பற்றித் தவருன எண்ணம் எழுமாயின் அதனை எவ்வாற்ருலும் அகற்றல் முடியாதுஎன்பதைமாதவியறியாளாயினள். அவ்வறியாமையினுலேயே கோவலன்பாடியமை போலத் தானும் காதற்பாட்டைப் பாடினள். காதலைக் குறித்த அக்கானல்வரிப்பாட்டு மாதவியோடிருந்த கோவலனின் உறவை அடியோடு அகழ்ந்தெடுத்துவிட்டது. பின்னர்அவள் வசந்தமாலையையும் கோசிகனையும் கோவலனிடத்திற்குத் தூதாக அனுப்புகிருள். அந்தச் சந்தர்ப்பங்களில் முதலில் மிக வெறுத்திருந்த கோவலன் ஈற்றில் மாதவி மேல் பிழையில்லை என்று வெறுப்பு நீங்கினனுயினும் அவளிடத்தில் மீண்டு சேரும் பற்றுச் சிறிதுமிலனுயினள்.

# கற்புடைக் கண்ணகியின் அற்புதச் செய்கை

ஒத்த அன்புடையராய தலைவனிடத்தும் தலைவியிடத்தும் நிகழும் அன்புச் செய்திகளைப் பலபட விரித்துக்கூறுவன சங்கச் சான்றோரால் செய்யப்பட்ட அகப்பொருள் நூல்களாகும். கூடுதல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என அச் செய்திகள் பிரித்துப் பேசப்படும். அறம், பொருள், இன்பம் என்பவை காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்த காலத்தில் அவள் ஆற்றியிருத்தல் அவளுக்குச் சிறந்த ஒழுக்கமாகும். அங்ஙனம் பிரியும் காலத்தில் இன்பங் காரணமாகத் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தையரிடத்துச் செல்லும் தலைவனைத் தலைவி எளிதில் வரவேற்பதில்லை. பரத்தையரிடத்துச் சென்றமையைப் பொறுக்காது தலைவி தலைவனோடு ஊடுவள். அவளது ஊடலை நீக்கி உள்ளத்தைச் சாந்தப்படுத்துதற்கு தலைவன் யாரையேனும் தூதாக அனுப்புவன். பாணர், கூத்தர் முதலியோருள் ஒருவர் தூதராய்ச் செல்வர். அவ்வாறு தூதராய்ச் செல்வோரைத் தலைவி எள்ளி நகையாடித் திருப்பி விடுதலும் உண்டு. தலைவி தன்னை மறுக்காமல் எதிர்கொள்ளற்பொருட்டுத் தலைவன் ஓர் உபாயத்தை மேற்கொள்வான். தலைவன் எத்துணைக்

குற்றம் செய்தானாயினும் விருந்தினரோடு தன் வீட்டுக்குச் செல்வானாயின், அவ் விருந்தினரை இனிய முகத்தோடு உபசரிக்கும் நிலையில், தலைவனையும் மறுக்காது ஏற்றுக் கொள்வள். இவ்வாறு பரத்தையரிடத்துச் சென்று மீளும் தலைவனை எதிர் கொள்ளாது தலைவி ஊடுதலும், தலைவியின் ஊடலைப்போக்கத் தலைவன் ஒவ்வோர் உபாயத்தைக் கையாளலும் சங்ககால அகப்பொருள் நூல்களில் காணக்கிடக்கின்றன. சங்க நூல்களிற் காணப்படும் தலைவியர் போலாகாது சிலம்புச் செல்வியாம் கண்ணகி பரத்தையிற் பிரிந்து மீளும் தன் கணவனை வரவேற்கும் செயலில் வியக்கத்தக்க உயர்குணம் படைத்தவளாய் விளங்குகின்றாள்.

உள்ளத்தூய்மை உள்ளவர்களது கனவில் எதிர்கால நிகழ்ச்சிகள் ஒருவாறு தோற்றமளிக்கும். இராமனைப் பிரிந்த சீதை அரக்கியர் மத்தியில் அல்லற்படுகின்றாள். இராமன் எப்போது தன்னைமீட்பான் என்று எண்ணி எண்ணி இரவும் பகலும் ஏங்கியவளாய்ச் சீதை கண்ணீர் வடிக்கின்றாள். அவளுக்கு ஆறுதல் கூறுபவளான திரிசடை அரக்கர் குலத்தில் பிறந்தவளாயினும் தெய்வக் குணம் படைத்தவள். அத்தகைய திரிசடை ஒரு சிறுபொழுது கண்ணயர்ந்தபோது இராவணனுக்கும் இலங்கைக்கும் எதிரே வரக்கடவ துன்ப நிகழ்ச்சிகளையும் சீதை

யிடத்து நிகழவிருக்கும் நற் செய்திகளையும் தன் கனவில் காணுகின்றாள். அதுபோலக் கணவன் பிரிவால் கலங்கியிருக்கும் கண்ணகி ஒரு கனவு காண்கின்றாள், தானும் கோவலனும் வேறுநாடு செல்லுதலும் கணவனுக்கோர் தீங்கு உண்டாதலும், தன்னால் அந்த நாட்டுக்கும் மன்னனுக்கும் கேடு நேர்தலும், தானும் கணவனும் எவரும் அடையாத பெருஞ்சிறப்படைதலும் அவள் கனவில் தோன்றுகின்றன. இக்கனவு நிகழ்ச்சியைக் கண்ணகி தன் தோழியாகிய தேவந்திகைக்குக் கூறுகின்றாள். இக்கனவு நிகழ்ச்சி ஆருயிர்க் காதலனைப் பிரிந்திருக்கும் அவளுக்கு ஆறுதலையும் இன்பத்தையும் அளிக்கவில்லை. அச்சத்தையும் துன்பத்தையுமே உண்டாக்கியது. ஈற்றில் தானும் தன் கணவனும் அடையவிருக்கும் நன்மை அவளுக்கு நகைப்பையே தந்தது. தன் பெருமையைத் தான் அறியாதவளாய், அடக்கமே அணிகலனாய்க் கொண்டு வாழ்ந்த கண்ணகி தனக்கு இறுதியில் ஏற்படவிருக்கும் உயர்வினைக் கனவிற் கண்டும் அதனை ஒரு பொருளாகக் கருதவிரும்பாளாய் இருந்தமையால் அதற்குமுன் நிகழ்வனவாய ஏனைய செய்திகளையும் உண்மையென்று எண்ணுதொழிந்தாள். எனவே, கனா நிகழ்ச்சி கணவனது வரவை அவளுக்கு உறுதிப்படுத்தி மகிழ்விக்காது அவள் கருத்தளவில் ஒரு பயனில் செய்தியாய்க் கழிந்தது. கோவலனும் மாதவியும் கூடி வாழ்ந்த இன்பவாழ்வையும் பின்னர் அவர்

களுக்கு ஏற்பட்ட துன்பவிளைவையும் கற்போர், இனிமேல் கண்ணகிக்கும் கோவலனுக்கும் எவ்வாறு வாழ்வு அமையுமென்பதை அறிய ஆவலுறுவர். கற்போரது உள்ளத்தில் எழும் அவ்வித ஆவலைப் பூர்த்திசெய்யும் வகையில் காப்பியப் புலவர்கள் ஒவ்வோர் உபாயத்தைக் கையாளுவர். கண்ணகியின் கனு நிகழ்ச்சியை உரைக்கும் வகையால் இளங்கோவடிகள் கதையின் பின் நிகழ்ச்சிகளைக் குறிப்பாலுணர்த்தி வைத்தார்.

மாதவியின் ஆடலிலும் பாடலிலும் மனத்தைப் பறிகொடுத்துக் கண்ணகியைப் பற்றிய எண்ணம் சிறிதுமின்றி பல ஆண்டுகளைக் கழித்த கோவலன், ஒருநாள் தன் இன்பவாழ்வு சிதைந்து தன் இதயத்திற்கேற்ற எழிலரசி என்று கருதிய மாதவியை இகழ்ந்து, தன் வாழ்க்கைத்துணையான கண்ணகி இருந்த மனையை நோக்கி விரைந்து வருகின்முன். கால்களின் விரைந்த நடைக்கேற்ப, அவனது கருத்திலும் பலப்பல எண்ணங்கள் விரைந்து தோன்றின. கண்ணகி எவ்வாறிருப்பாள் என்றும், பொருளும் புகழும் இழந்து வெறுமையாய் மீளும் தன்னை விரும்பி எதிர்கொள்வாளா என்றும், வேறு பலவாறும் அவன் எண்ணியவாறே மனையை அணுகினுன். அங்கு அவன் எண்ணுதது நடந்தது. கோவலனின் வரவை ஏவற்பெண்கள் கண்ணகிக்குணர்த்தினர். கோவலன் விள்ள முடியாத தனது உள்ளக்கவலையால் தன்னை வரவேற்பவர்

யார், எவர் என்று பாராதவனுய்ப் படுக்கை யறையை அடைந்தான். தன்பிரிவு காரணமாக ஊடியவளாகாது வாடியவளாய்நின்ற கண்ணகி யின் வருத்தத்தை உணர்ந்தான். முன்பு மாதவி யோடு வாழ்ந்த வாழ்வை எண்ணி வருந்தினுன். வாழ்வு மட்டுமன்றி மலைபோன்ற செல்வமெல் லாம் இழந்து வறியனுனமையை வாய்விட்டுக் கூறி இரங்கினுன்.

"சலம்புணர் கொள்கைச் சலதியொடாடிக்
குலந்தருவான் பொருட்குன்றம் தொலைந்தது
இலம்பாடு நாணுத்தரும்"

என்று அவன் கூறிய இரங்கற்சொற்கள் கண்ண கியின் உள்ளத்தில் வேறு விதமாகப் பொருள் தந்தன. அவள், கோவலன்மாதவியோடுவாழ்ந்த தைக்குற்றமாகக் கருதிக் கோபங் கொண்டிருந் தாளல்லள். வாழ்க்கையை அறத்தின் பொருட் டாகக் கழிக்காமல் இன்பத்தின் பொருட்டாகக் கழிக்கும் கோவலன் மேலும் பொருள் வேண்டி நிற்கின்ருன் என்றும் இன்பவேட்கை தணிந்திலன் என்றும் எண்ணியவளாய், கோவலனின் இன் பத்திற்குக் குறைவேற்படா திருத்தற்குத்தான் எவ்வகையில் உதவி புரியலாமென ஆராய்ந் தாள். தன்னிடமுள்ள ஆபரணங்களெல்லாம் முன்னரே கோவலனுற் கொண்டு செல்லப்பட் டன. அவனுக்குக் கொடுத்தற்கு எஞ்சியிருப்பன இரு சிலம்புகளே. அவைதாமும் அப்போது அவனுக்குக்கொடுத்து அவனைத் திருப்திப்படுத்

தற்குத் துணைக் காரணமாய் எஞ்சியிருப்பது அவளுக்கு மிக்க ஆனந்தத்தைத் தந்தது. வஞ்சனை நிறைந்த மங்கையோடு கூடி வாழ்வைக் கெடுத்தேன் என்றும், மலைபோன்ற செல்வத்தைத் தொலைத்தேன் என்றும் கோவலன் கூறிய சொற்கள் கற்புடைச் செல்வியான கண்ணகியின் மனத்தில் அவனது கடந்தகால வாழ்வைப் பற்றி வெறுப்பையோ இரக்கத்தையோ உண்டாக்கவில்லை. ''வறுமை எனக்கு நாணத்தைத் தருகின்றது'' என்ற சொற்களே அவளது மனத்தில் பதிந்தன; மாதவியிடத்துச் செல்லுதற்கு வறுமை தடுத்ததாக அவளது அன்புள்ளம் எண்ணியது. அப்போது சிலம்புகளின் நினைவு அவளுக்கு வந்தது. வாடிய கணவனை மகிழ்விக்கக் கருதி ''சிலம்புள கொண்மின்'' என்று மலர்ந்த முகத்துடன் அவற்றை அவன்முன் நீட்டினாள். பல்லாண்டுகளாக முகத்தையேபாராது கைவிட்டிருந்து பின் மனைக்கு வந்தபோதும், வாட்டத்தோடு மனக் கவலையைச் சொன்னபோதும் முகங்கோணாது தன்னை மகிழ்வித்தல் ஒன்றையே கருதிச் சிலம்பை ஈந்த கண்ணகியின் செய்கை கோவலனின் உள்ளத்தில் வியப்பையூட்டியது மட்டுமன்றி, வாட்டமெல்லாம் போக்கிப் புத்துணர்ச்சியையே உண்டாக்கியது, மாசற்ற அன்பானது தீயவரைக் தூயவராக்கவும் தாழ்ந்தவரை உயர்ந்தவராக்கவும் வல்லதன்றோ!

கண்ணகியின் அற்புதமான செய்கையைக் கண்டகோவலன் அவளைவியந்து வியந்து மகிழ்ந்தான். நயந்து நயந்து உள்ளம் பூரித்தான். ஆயினும் அவன் நெஞ்சம் அங்கு அரைக்கணமேனும் தங்க விரும்பவில்லை. வறுமையும், "வாழ்க்கையைக் கெடுத்தேனே" என்ற கழி விரக்கமும் கண்ணகியை அழைத்துக்கொண்டு வேறுநாடு செல்லக் கடிது தூண்டின. தன்னையும் தன்நிலைமையையும் ஊரவர்க்கு மட்டுமன்றி உற்றார்க்குத்தானும் அவன் காட்டிக்கொள்ள விரும்பானாய் விடிவதற்கு முன்பே புறப்பட முடிவு செய்தான். சிலம்பை முதலாகக் கொண்டு மதுரைக்குப் போய்ப் பொருள்தேட வேண்டும் என்றும், அக்கணமே தன்னோடு புறப்படுமாறும் கண்ணகிக்குக் கூறினன். அவன் கூறிமுடித்தற்கு முன்னரே, குறிப்பறிந்து நடக்கும் கோதிலாக் குணத்தாளாம் கண்ணகி புறப்பட்டுவிட்டாள் மாடங்கள் பலவற்ருேடு கூடிய அந்த மாளிகையையோ, ஏவலாட்டியரையோ, இனிய தோழியரையோ பிரிவதாய்க் கருதாது, மண்ணகமறியா வண்ணச்சீறடி புண்படுமே என எண்ணுது கணவனடியைக் கண்ணகி பின்தொடர்ந்து நடந்தாள்.

# உண்மையை அறிதலும் உவகை பெறுதலும்

இழந்த பொருளை மீளப் பெறும்போது உண்டாகும் இன்பம் அப்பொருளை முன்னே பெற்ற காலத்தில் அடைந்த இன்பத்திலும் பன்மடங்கு பெரிதாயிருக்கும். பொருளை மீளப் பெறும்போது அடையும் அவ்வித பேரின்பத்தைக் காட்டிலும் அப்பொருளின் பெருமையையும் அருமையையும் அறியும்போது உண்டாகும் இன்பம் மிகமிகப் பெரியதாயிருக்கும். கண்ணகி கோவலனை மீளப்பெற்றுக் களிப்புறுகின்றாள். கோவலன் தன் மனத்தாலும் புறத்தாலும் பிரிந்த கண்ணகியை மீளக் கூடப்பெறுதலோடு அவளது அருங்குணங்களை ஒவ்வொன்றாகக் கண்டும் கேட்டும் களி பேருவகை எய்துகின்றான். இவ்வாறு கோவலனும் கண்ணகியும் ஒருவரை ஒருவர் கூடப் பெற்றமையால் உள்ளத்தில் இன்பமும் புதிய உணர்ச்சியும் பெற்றவராகின்றனர்.

பூம்புகாரை விட்டு நீங்கும் கோவலனது உள்ளத்தில் பல்வேறு உணர்ச்சிகள் தோன்றி மறைகின்றன. கடந்த காலத்தை வீணாகக்கழித்தேன் என்னும் கழிவிரக்கம் ஒருகால் தோன்றுகின்றது. தளிர்போன்ற மெல்லடிகள் வருந்தக் கண்ணகி நடந்து வருதலைக் காணும்போது,

அவளை அழைத்துச் செல்லவேண்டிய தனது நிலை குறித்த துயரம் ஒரு புறம் தோன்றி வருத்துகின்றது. இவ்வாறு மாறிமாறித் தோன்றும் பலவித உணர்ச்சிகளுக்கிடையில் அவன் மனத்தை ஒரே ஒரு எண்ணம் ஊன்றுகோல் போன்று தாங்குகின்றது. எதிர்காலத்தில் கண்ணகியை விட்டுப் பிரிவதில்லையாதலால் அவள் துணையாக நல்வாழ்வு வாழலாம் என்ற நம்பிக்கை அவனது சோர்ந்த உள்ளத்துக்கு உயிர்கொடுத்திருந்தது. ஆயின், கண்ணகி தனது கடந்தகாலவாழ்வில் இரங்கத்தக்க செயல்யாதும் செய்திலளாகையால், அவள் மனம் எதிர்கால நல்வாழ்வொன்றையே எண்ணி, அவ்வெண்ணத்தால் ஊக்கம் பெற்று மலர்ந்தது. இவ்வாறு கோவலனும் கண்ணகியும் வருங்காலத்தில் தாம் உறுதியாகக் காணவிருக்கும் நல்வாழ்வில நம்பிக்கையுடையவராய், பூம்புகாரையும், பிறந்த பொன்னாட்டையும் திரும்பிப்பாராது மதுரைநோக்கி ஆவலோடு விரைந்து செல்கின்றனர்.

உடல்களைப் புற்றுச் சோர்ந்த வேளையில் தென்றலானது ஊக்கம் தருகின்றது. மனம் நொந்துமடிந்தநேரத்தில்சான்றோர்வாய்மொழி ஊன்றுகோலாகின்றது. பூம்புகாரில் வாழ்ந்த வாழ்விஞல் உள்ளம் தளர்ந்து, உணர்வுமாய்ந்திருந்த கோவலனுக்கும் கண்ணகிக்கும் ஒரு சான்றோரது உறவு கிடைக்கின்றது. கவுந்தி அடி

கள் என்ற சமணப் பெண்துறவி அவ்விருவர்க்கும் வழித்துணையாக வாய்க்கின்ருர். இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் இடமறிந்து அப்பாத்திரத்தைப் படைத்துள்ளார். கவுந்தியடிகள் தளர்ந்து மெலிந்தோர்க்கு நன்மொழி கூறி, அவர்களைப் புத்துணர்ச்சி பெறச் செய்யும் அருளுடையராதலோடு தகாதன செய்தாரைத் தண்டிக்க வல்ல தவவலிமையும் உடையவர். அத்தகைய பெருமை சான்ற அடிகளின் உறவினுல் கோவலனும் கண்ணகியும் தாம் சென்ற அரிய வழியை இனிதாகவும் இலகுவாகவும் கடந்தனர். அத்துடன் மாதவியையும் மாதவியோடு கழித்த வாழ்நாளையும் நினைத்து மனங் கசந்திருந்த கோவலன் உண்மை வாழ்வையும் உண்மைஇன்பத்தையும் அடிகளின் உறுதிமொழி வாயிலாக அறிந்து ஒரு புதுமனிதன் ஆனுன். கோவலன் அடிகளிடத்தில் பெற்ற புத்துணர்ச்சியானது வழிச் செலவில் கண்ட பல்வேறு அநுபவங்களினுல் உறுதிபெற்று நிலைத்து விட்டது.

மலைக்குகைகளிலே தங்கி மனத்தை அடக்கித் தவஞ் செய்கின்ருர்கள் முனிவர்கள். மனையிலே அடங்கியிருந்து அன்பு நெறியிலே அறக்கடன்களை ஆற்றுகின்ருர்கள் கற்புடை மகளிர்கள். வனத்து வாழும் முனிவர்களுடைய தவவலிமையையும் மனையிலே அடங்கிவாழும் மகளி

ரின் கற்பு மேம்பாட்டையும் உலகம் அறிவ தில்லை ஆயினும் ஒருகாலத்தில் அவ்விருசாரா ரது ஆற்றலும் பெருமையும் உலகம் அறியவும் அறிந்து உய்யவும் வாய்ப்பு ஏற்படாமல் போவ தில்லை. புகழையோ பொருளையோ விரும்பாத அவர்தம்பெருமையை இறைவன் உலகறியச் செய்து விடுகிருன். கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் நாடும்காடும் பலகடந்து ஐயை கோட்டமொன்றினை அடைகின்றனர். அக் கோயிலிலுள்ள தெய்வத்திற்கு வேட்டுவர் வழி பாடு செய்கின்றனர் அப்பொழுது வேட்டுவ முதியாள் ஒருத்திமீது கொற்றவையாகிய அத் தெய்வம் ஆவேசித்து நின்று, அக்கோயிலின் ஒருபுறத்தே ஒதுங்கியிருந்த மூவரில் கண்ணகி யைச் சுட்டிக்காட்டி, எல்லோருக்கும் அவளது உண்மைச் சிறப்பை எடுத்துக்கூறுகின்றது.

"கணவனோடிருந்த மணமலி கூந்தலை
இவளோ, கொங்கச்செல்வி குடமலையாட்டி
செந்தமிழ்ப்பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமாமணியாய் உலகிற்கோங்கிய
திருமாமணி"

என்று கூறிய தெய்வவாக்கு, கோவலனுக்கும் கவுந்தியடிகளுக்கும் கண்ணகியைப்பற்றிய உண் மைத் தன்மையை உணர்த்துகின்றது. ஆனுல், கண்ணகிக்கு அவ்வார்த்தைகள் நகைவிளைக்கின் றன. "பேதுறவு மொழிந்தனள் மூதறவாட்டி"

என்று கூறி நாணத்தால் கணவன் புறத்தில் ஒதுங்குகின்றாள். கோவலன் தன் வாழ்க்கைத் துணையான கண்ணகியின் சிறப்பினை அறிந்து உள்ளம் பூரிக்கிறான். அதேசமயத்தில் மாதவி குறித்து அவன் கொண்ட எண்ணமும் மாறு கின்றது. கவுந்தியடிகளின் உபதேச மொழி களும் கண்ணகியின் பெருமைக் குணங்களும் கோவலன் மனத்தைத் திருத்திச் செம்மைப் படுத்தின. முன்பு, மாதவி தன்காதலையெல்லாம் எழுதிய ஓலையை வசந்தமாலை என்னும் தோழி யிடம் கொடுத்தனுப்ப, அவ்வோலையை வாசித்த கோவலன் மாதவியை நாடகமகளாகவும் அவ ளது வார்த்தைகளை வஞ்சகச் சூழ்ச்சியாகவும் இவ்வோலையிற் கண்டான். பின்னர், கண்ணகி யோடும் கவுந்தியடிகளோடும் மதுரை நோக்கி வழிச்செல்லும்போது மதுரைக் கணித்தாயுள்ள மலர்ச் சோலையில் தங்கியிருக்கையில், கோசிகன் மூலமாக மாதவியனுப்பிய மற்றொரு கடிதத் தைக் கண்டான். ஆயின், அப்போது அவன மனக்கண்முன் மாதவி நாடகமகளல்லள். அவ ளது கடிதம் வஞ்சகக் கடிதமுமன்று. தந்தையி னிடத்து ஒரு மைந்தன் வைக்கும் அன்பினையும் பணிவினையும் மாதவியினிடத்திற் கண்டான். ''அவள் தீதிலள்'' என அவனுள்ளம் கூறியது. மாதவி தனக்கு எழுதியனுப்பிய கடிதத்தை வாசகம் மாற்றுமல் அவன் தன் தந்தைக்குக் கொடுக்குமாறு அனுப்பினன். எனவே, தீயநெறி

யிலே சென்று அழுந்தி நின்ற கோவலனை அத்தீய நெறியினின்றும் விலக்கி அவன் உள்ளத்தையும் உயர்ந்த நெறியை நாடவும் விரும்பவும் செய்தது யாது? கோவலன் மாதவியை வெறுக்காமல் பொதுநோக்கோடு காணத்தக்கவாறும், கண்ணகியின் உண்மைப் பண்பை உவந்து காணத்தக்கவாறும் அவனது உள்ளக்கண்களைத் திறந்தது யாது? அது கண்ணகியின் கற்புள்ளமே யாகும்.

சமணர்கள் துறவு வாழ்க்கையையே விரும்புவார்கள்; மேன்மையானதெனவும் கூறுவார்கள். இல்லற வாழ்க்கையை அவர்கள் இகழ்ந்து விலக்குபவர்கள். சமண நெறியில் துறவியாய் வாழ்ந்து சபிக்கவும் அருளவும் வல்லவராய் விளங்கிய கவுந்தியடிகள் கண்ணகியை நினைந்து நினைந்து வணங்குபவர் போல் உள்ளம் குழைகின்றார். அவளது தெய்வ இயல்பைப் பிறர்க்கு வெளியாகக் கூறவும் அவர் பின்னிற்கவில்லை. மதுரையில் மாதரி என்னும் இடையமுது மகளிடம் அடைக்கலமாகக் கொடுக்கும்போது கவுந்தியடிகள் கண்ணகியைப்பற்றிச் சொல்வன அவரது மதிப்புமிக்க கருத்தினை எடுத்துக்காட்டுகின்றன.

"இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம்யாம் கண்டிலமால்"

கண்ணகியைப் பெண்மக ளல்லளெனவும் கண்கண்ட தெய்வமெனவும் கவுந்தியடிகளாகிய துறவியரின் வாக்கால் இளங்கோவடிகள் உணர்த்துவதன் மூலம் இல்லறத்தின் பெருமையையும், இலலறத்தை நல்லறமாக்கும் மங்கையரின் மாண்பையும் உலகறியத் தக்கவாறு குன்றின் மீதிட்ட விளக்காக்கிஞர்.

## காதலர் கண்ட கடைநாள் இன்பம்

யார் ஒருவர் உலகத்தில் ஒருநாளாவது பழிச்சொல்லைக் கேளாதவர்? யார் ஒருவர் உலகத்தில் ஒருநாளாவது நல்வாழ்வு வாழாதவர்? துன்பமும் இன்பமும் மாறி மாறி வருவனவே. "கடந்த காலம் முழுவதும் நல்வாழ்வு காணுதை நாம் இனியாவது எய்தமாட்டோமா?" என்ற எண்ணத்தோடும், அவ் வெண்ணத்திலிருந்து பிறந்த உறுதியான நம்பிக்கையோடும் கோவலனும் கண்ணகியும் மதுரையை அடுத்து வந்தணைந்துள்ளார்கள். அவ்விருவர்க்கும் புகலிடங் கொடுத்த இடைய முதுமகளாகிய மாதரி என்பாள் மாண்பு மிக்க குணம் பல படைத்தவள். தன்னை வந்தடைந்த விருந்தினராகிய கோவலனும் கண்ணகியும் தங்குவதற்கு ஒருபுதுமனையை உவந்து உதவிஞள். வேற்றிடமாதலால் கண்ணகி தனித்த நிலையில் தளர்வாள் என்று கருதி, மாதரி தன் மகளான ஐயையைத் தோழியாய் நின்று பணிபுரியுமாறு விட்டனள்.

வழிநடந்த களைப்புத் தீரக் கண்ணகியை நீராட்டிக் கோலஞ் செய்தாள். சமைத்தற்கு வேண்டிய பாத்திரங்களைப் புதியனவாய்த் தேடிக் கொடுத்தாள். செந்நெல்லரிசி, பலாப் பழம், மாங்கனி, வாழைக்கனி, வெள்வரிக்காய், பால், நெய் முதலியனவாய உணவுக்குரிய பொருள்களை உதவினுள் புதிய இடத்தில் புகுந்து, புதிய முகத்தினரிடை வாழநேரிடின் எதனைக் கேட்பது, எதனைப் பெறுவது என்ற நாணத்தால் கண்ணகியின் உள்ளம் கலங்கு மென்பதனை நன்கு தெளிந்து அவளுக்கு வேண்டு வனவற்றை அவள் கூருமலே குறிப்பாலறிந்து அவளது உள்ளம் மகிழக்கொடுத்த மாதரியின் சீரியசெயலைநோக்குங்கால்,பண்டைத்தமிழ்நாட் டில் செல்வம் மிக்காரேயன்றிச் சிறியவாழ்க்கை யையுடையோரும் விருந்தோம்பும் அறத்தில் எவ்வளவு மேம்பட்டிருந்தார்கள் என்பது புலப் படும். இளங்கோவடிகள் பாடிய சிலப்பதிகாரத் தில் இரண்டாவதாய் அமைந்துள்ள மதுரைக் காண்டத்திற்கு மாதரியின் செய்கையைக் கூறும் இப்பகுதியே நாட்டுச் சிறப்பாய் அமைந் துள்ளது.

'புதிய நாட்டிற்கு வந்தோம்; புதிய வாழ்வு காண்போம்' என்றஆவலோடிருக்கும் கண்ணகி, தனக்கு மாதரி கொடுத்த பொருள்களை மகிழ்வு டன் ஏற்ருள். பல்லாண்டுகளாகக் கணவனுக் குத் தன் கையால் உணவருத்தாத அவள் அன்று அடைந்த இன்பத்திற் களவேயில்லை. தன் கைத்

திறனையெல்லாம் காட்டுவாள் போல, கிடைத்த சில பொருள்களையே கொண்டு கிடைக்க முடியாத அமுதத்தை ஆக்கினுள். பனையோலையால் அழகுறச் செய்த தடுக்கில் கணவனை இருத்தி, அவன் கால்களைக் கழுவி, நன்னீரால் நிலத்திற் தெளித்து மெழுகியபின், குலையீனுத வாழையின் குருத்தினை விரித்துவைத்து, உணவைப் படைத்தாள். கண்ணகி இவ்வாறு தன் கணவனுக்கு அன்போடு உணவளித்தலையும், அவன் மகிழ்ந்து உண்ணுதலையும் மாதரியும் மகளும் கண்டுகண்டு இன்பம் மலிகின்றனர். தங்கள் வீட்டுக்கு விருந்தினராய் வந்திருப்பவர் சோழநாட்டு வணிகனும் மனைவியும் அல்லர், கண்ணபிரானும் நப்பின்னைப் பிராட்டியுமல்லவா அவர்கள்! இவ்வாறு மாதரியும் மகளும் எண்ணும்போது அவர்களது மனமகிழ்ச்சி மேலும் பொங்குகின்றது. ''இருந்து, ஓம்பி, இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்ற தமிழ்மறைக் கருத்தினை இலட்சியமாகக் கொண்டவர் என்பது உண்மையே.

கோவலன் மாதவியைவிட்டு நீங்கி தன் வீட்டுக்குத் தளர்வோடு வந்தபோது கண்ணகி அவனை உபசரித்த செய்தி முதலாகக் கண்ணகியின் செயல்களும் அவளைப்பற்றித் தெய்வமும் அடிகளும் கூறியனவும் ஆகியவையெல்லாம், அவனது மனத்தில் ஒருவித விழிப்புணர்ச்சியையும், கண்ணகிபால் பெருமதிப்பையும் ஏற்படுத்தி

விட்டன. அவன் மனம் கரைகாணு உவகையில் திளைத்தது இவ்வுவகைக்கிடையில் கண்ணகியின் உள்ளக் கிடக்கையையும், அவளுக்கு உவப்பாயினவற்றையும் அறியும் ஆவல் முளைத்தெழுந்தது. தன்னன்மையைப் பொருட்படுத்தாது பிறர் நன்மையை அறிந்து செய்து மகிழ்தலே அன்பின் இயல்பாதலால், கண்ணகிபால் பேரன்பு பூண்டவனான கோவலன் அவளது விருப்பத்தையும் மனக் கருத்துக்களையும் அறிய விரும்புவதில் வியப்பில்லையல்லவா? அவ்விருப்பம் அவன் மனத்தில் முன்னரே ஏற்பட்டிருப்பினும் அறியும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்பொழுது உணவுண்டு மகிழ்ந்த கோவலன் கண்ணகியை அருகழைத்து, தான் செய்த தவறுகளையெல்லாம் கூறி இரங்கியவனாய்,

"வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டு
எழுகென எழுந்தாய் என் செய்தனை"

என வினவினான். அப்பொழுதவள்,

"அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும்
துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்தேன்"

என்றும்,

"போற்ரு ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்ரு உள்ள வாழ்க்கையேனாதலின்
ஏற்றெழுந்தனன்"

என்று கூறிய சொற்கள் அவன் அவளிடத்தில் வைத்த மதிப்பினை மேலும் உயர்த்தி உறுதிப் படுத்தின. அப்பொழுது அவனுள்ளத்தில் எழுந்த உவகை பின்வரும் பாராட்டுரையாக மலர்ந்தது.

''குடிமுதற் சுற்றமும் குற்றிளையோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந் துணையாக
என்னோடு போந்திங்கு என் துயர்களைந்த
பொன்னே கொடியே புனை பூங்கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கனியே பொற்பின் செல்வி''

என்பன அவன் கூறிய பாராட்டுக்கள்.

கோவலன் கண்ணகியை மணந்த அந்நாளில் அவளது உடலழகினைக் கண்டு ஐம்புலன்களுக்கும் இன்பம் பெற்றவனாய்,

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே''

என அவன் புகழ்ந்தான். அப்பொழுது அவன் அவளுடலழகில் பொன்னின் ஒளியைக் கண்டான். இப்பொழுது சுடச் சுடரும் பொன் போலக் கண்ணகியிடத்தில் துன்பஞ்சுடச்சுடக்

கற்பானது ஒளிவிடும் தன்மையைக் காண்கின்ருன் ஆதலால் ''பொன்னே'' என்கின்ருன். கொடியானது கொழுகொம்பில்லாமல் வாழ்வெய்தமாட்டாமை போலக் கணவனையின்றி வாழமாட்டாத தன்மையை யுடைமையால் அவளை "கொடியே" என்றும் புகழ்ந்தான். மாலையிலே பலவித வண்ண மலர்களும் கலந்து தொடுக்கப்பட்டிருத்தல் போல கண்ணகியினிடத்தும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலாம் அருங்குணங்கள் பலவும் அமைந்து சிறந்திருத்தலால் ''புனைபூங்கோதாய்'' என்கின்ருன். பெண்களுக்கு உயிரினும் சிறந்தது நாணம். அந்த நாணத்தைப் பெருங்குணமாகவுடைய பாவைபோல்வாளே என்கின்ருன். விளக்கானது தான் ஒளியுடையதாயிருத்தலோடு தன்னைச்சூழவுள்ள இடத்தையும் ஒளியுடையதாக்கும். அதுபோலக் கண்ணகியும் தன்னருங் குணங்களால் தான் புகழப்படுதலோடு தான் பிறந்த வீட்டாரும் புகுந்த வீட்டாரும் புகழப்படத்தக்கவாறு மேம்பட்டிருத்தலால், "நீள்நில விளக்கே" எனப் போற்றுகின்ருன். கண்ணகி காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த காலத்தில் சுற்றத்தினர், குற்றிளையோர், அடித்தொண்டு செய்வோர், தோழியர் எனப்பலர் துணையாய் இருந்தனர். கணவன் மதுரைக்குச் செல்லப் புறப்படுமாறு கூறிய போது கண்ணகி, சுற்றத்தினர் முதலாகிய துணையாளரைத் துறந்துவிட்டு, நாணம், மடம், நல்ல

வர் கூறும் புகழ், கற்பு என்பனவற்றையே துணையாகக் கொண்டு கோவலனுடன் தொடர்ந்து சென்றாள். இவற்றையெல்லாம் நோக்கும்போது கோவலனின் உள்ளத்தைத் திருத்தி அவனுக்கு உயர்வளித்த அவளது பெண்மைப் பண்பிற்கு நிகராவன யாவும் இல்லை. அவளுக்கு நிகராவாரும் யாரும் இல்லை. இச்சந்தர்ப்பத்தில்,

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்''

என்று வள்ளுவர் கூறின வாய்மை நன்கு புலனாகின்றதல்லவா?

## சிலம்பு செய்த தீங்கு

உலகில் அதிசயிக்கத்தக்க பொருள்கள் எங்கேனும் இருப்பின் அவை இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று அவற்றைக் காண ஆசைப்படுவோர் பலர் உளர். அதிசயிக்கத்தக்க பொருள்களை நாம் அறியவிரும்பின் வேறு எங்கேனும் செல்ல வேண்டியதில்லை. கூர்ந்து நோக்கினால் நமது வாழ்க்கையும் நம் வாழ்க்கையில் அவ்வப்போது நிகழும் சில நிகழ்ச்சிகளும் மிக மிக விந்தையானவையாய் காணப்படும். நமக்கு இனியவர் என்று நாம் அன்பு பாராட்டும் ஒருவரே நம் நெஞ்சம் வருந்தத் தக்கவாறு பெரிய தீமையைச் செய்துவிடுகின்றனர். நாம் சிறிதும்

நம்பாத கொடிய இயல்புடைய பகைவர் ஒருவரது செய்கை நாம் கதியற்றுக் கண்ணீர் விட்டு நிற்கையில் எதிர்பாராத வழியில் நமக்குப்பெரு நன்மையாய் விடுகிறது. அவ்வாறே நல்ல பொருள் நஞ்சாதலையும் தீய பொருள் சீரிய மருந்தாதலையும் நாம் ஒவ்வொருபோது காண்கின்றோம்.

கண்ணகி அணிந்த ஆபரணங்களில் மாதவி வீட்டுக்குக் கொண்டு செல்லப்படாமல் எஞ்சியிருந்தன இரண்டு சிலம்புகளே. மாதவியோடு வாழ்ந்த வாழ்க்கையிற் கசப்பு உண்டாகி மனம் நொந்துவந்த கோவலனுக்கு மகிழ்ச்சியையும், வருங் காலத்தில் நல்வாழ்வுண்டு என்ற நம்பிக்கையையும் தந்தன அந்தச் சிலம்புகளே. அல்லாமலும், கோவலனின் வருத்தத்தை மாற்றுவதற்கு உதவியாகக் கண்ணகியின் கைவசம் இருந்து அவனைக் களிப்பூட்டியனவும் அந்தச் சிலம்புகளே. இவ்வாறு கண்ணகியிடத்தில் எஞ்சியிருந்த சிலம்புகளே, அவ்விருவர்க்கும் வருங்கால நல்வாழ்விற்கு முதற் பொருளாகி, மனத்துணையாகி, அவர்களை மதுரைமாநகர்க்கு அழைத்து வந்துள்ளன. இச் சிலம்புகள் இல்லையாயின் கோவலன் கண்ணகி என்னும் இருவரது வாழ்க்கை என்னுகியிருக்கும்? கப்பல் மூழ்கியதால் கடலில் தத்தளிக்கும் ஒருவனுக்கு ஒரு மிதப்புக்கட்டை கிடைப்பின் எத்தனை மகிழ்ச்சி ஏற்படும்! அதுபோல, கைப்பொருள் ஒரு சிறி

தும் இன்றிக் கலங்கியிருந்த கோவலனுக்குச் சிலம்புகள் இருந்தமை ஒருபெரும்பலமாயீற்று. அச்சிலம்புகளில் ஒன்றினைக் கண்ணகியிடம் வாங்கிக்கொண்டு கோவலன் வாழ்வுக்கு வழி காண மதுரை வீதியுள் புகுகிறான். கையில் இருந்த அந்த ஒற்றைச் சிலம்பு அவனது சிந்தனையில் வருங்காலத்தைப்பற்றிய பலப்பல திட்டங்களை உருவாக்கியிருத்தல் வேண்டும். அல்லது, காவிரிப்பூம் பட்டினத்தில் தோழியரும் ஏவலாட்டியரும் துணையாகத் தனிமை என்பதையே அறியாதிருந்த கண்ணகி மதுரைக்கு வந்து புதிய மனையிலே தனிமையாக இருக்கவிட்டுத் தான் வருகின்ற செய்கை அவன் மனத்தை வருத்தியிருத்தல் வேண்டும். இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்து செல்லும் கோவலன் தீய சகுனமாகக் காளைமாடு ஒன்று தன்னை எதிர்த்து வந்ததையும் பொருட்படுத்ாதவனாய் மதுரை வீதியுள் நுழைகிறான். சிலம்பை விலையாகக் கொடுத்துச் செல்வம் தேடலாம் என்ற நினைவோடு செல்லும் கோவலன் ஒரு பொற்கொல்லனை எதிரே காண்கின்றான். நினைத்த கருமம் விரைவில் நிறைவேற வாய்ப்புக் கிட்டியது என்று அவன் மனம் மகிழ்கின்றது. பொற்கொல்லனை அணுகி, ''அரசன் மனைவிக்கு உரிய அணிகலனை விலை மதிக்கவல்லாயோ?'' எனக்கோவலன் வினவுகின்றான்.

கண்ணகியின் மனையில் எல்லா ஆபரணங்களும் போயொழியச் சிலம்பு மட்டுமே தனித்

துக்கிடந்தது. அதேவேளையில் பாண்டியன் மனைவியின் எல்லா ஆபரணங்களுமிருப்பச் சிலம்பே மறைந்தது. சோழநாட்டுச் சிலம்பும் பாண்டிய நாட்டுச் சிலம்பும் முறையே இருந்ததும் மறைந்ததும் ஒரு விந்தையே! சோழநாட்டுச் சிலம்பு கோவலன் கொண்டு செல்லாமையால் மனையில் கிடந்தது. பாண்டியநாட்டுச் சிலம்பு பொற்கொல்லன் களவு செய்தமையால் மறைந்தது. கண்ணகியின் கையிலணிந்த வளையலோ கழுத்திலணிந்த மணிமாலையோ வீட்டில் கிடக்கச் சிலம்புகள் மாதவியின் மனைக்குக் கொண்டு செல்லப்படலாமே! அவ்வாறே பாண்டிமாதேவியின் பிற அணிகள் களவு போயிருக்கலாமே! இரண்டு சிலம்பும் ஒருங்கு சேர்ந்து இருந்தும் மறைந்தும் நாடகம் நடத்துகின்றன போலும்!

பொற்கொல்லன் கோவலனிடமிருந்து சிலம்பைப் பெற்றான். கோவலனை அயலிலே உள்ள சிறுகுடிசையில் இருத்திவிட்டுப் பொற்கொல்லன் அச்சிலம்பை மன்னனுக்குக் காட்டி விலை மதித்து வருவான்போற் கொலைமதித்து நடந்து அரசனை அணுகினான். பொற்கொல்லன் அரண்மனையை அணுகியவேளை, தன்தேவியின் பிணக்கினைத் தீர்த்தற்கு அரசன் ஆவலோடு செல்லும் நேரமாயிருந்தது. அந்நிலையில் பொற்கொல்லன் அரசனை வணங்கி, தேவியின் சிலம்பைக் களவில் கொண்டதிருடன் தன்மனையில் உள்ளான் எனக்

கூறினன். தேவியின் நினைவாய் நின்ற மன்னன் சிந்தனை செய்யாது, "அக்கள்வனைக் கொல்வதற்கு அந்தச் சிலம்போடு அவனை இங்கே கொண்டுவருக" என்று கூறவேண்டியவன், "அவனைக் கொன்று அச்சிலம்பை இங்கே கொண்டுவருக" என்று காவலாளருக்குக் கட்டளையிட்டான். பொற்கொல்லனும் காவலாளர்களும் கோவலன் இருக்குமிடத்தை அடைந்தனர். பொற்கொல்லன் கோவலனைக் காவலர்க்குக்காட்டி, சிலம்பு கவர்ந்த கள்வன் இவனே என்று கூற, அக்காவலாளர் கோவலனது தோற்றத்தைக் கண்டு அவனைக் கள்வனென நம்பாதொழிந்தனர். பொற்கொல்லன் கோவலன் கள்வனே என்பதை நிரூபிப்பதற் பொருட்டுக் கள்வர்க்குரிய அதிசயமான செய்கைகளையும் குணங்களையும் விரித்துரைத்தான். அவ்வார்த்தைகள் எல்லாவற்றையும் கேட்டும் அக்காவலரில் பலரும் அவன் சொல்லை நம்பாதொழிந்தனர். ஆயினும், அவருள் கல்வியறிவில்லாதவனும் கள்ளுண்டான் போல மயங்கிய புத்தியுடையவனுமான ஒரு தீயவன் பொற் கொல்லன் சொல்லை நம்பிப் பொல்லாதது செய்தனன். கோவலன் உடல் வெட்டுண்டு கீழே விழுந்தது.

மதயானையின் கையில் அகப்பட்டு அதனாற் கொல்லப்படவிருந்த அந்தணனைத் தாவிச் சென்று மீட்டு, அந்த யானையை அடக்கிய அருஞ்

குணமிக் வீரனுக்கா இந்தமுடிவு! பிள்ளையென வளர்த்த கீரியைக் கொன்றமையால் கணவனால் தள்ளி விலக்கப்பட்ட அந்தணப் பெண்ணின் அருந்துயர் நீக்கி, அப்பெண்ணை அவள் கணவனோடு சேர்த்து, அவ்விருவர்க்கும் வேண்டும் பொருள் கொடுத்துதவிய மேலான செல்வனு வெட்டுண்டு இறக்கவேண்டும்! தீயவர்களைத் தன் பாசத்தினுற் பிடித்து அடித்துக் கொல்லும் பூதமொன்றின் கையில் மகன் அகப்பட்டதைக் கண்டதாய் அப்பூதத்தின் முன்னின்று புலம்பி அழுதலைப் பார்த்து, அகம்மிக நெகிழ்ந்திரங்கியவனுய் அத்தாயின் துயரைத்தீர்க்கும் பொருட்டாகத் தன்னைப் பலிகொடுத்து அம்மகனைக் காக்கமுயன்றபோது அப்பூதம் அதற்கு இசையாது அம்மகனைக் கொல்ல, பின்னர் அத்தாயை அழைத்துக்கொண்டு வந்து மனையில் சேர்த்து அவளுக்கும் அவளுடைய உறவினர்களுக்கும் வேண்டிய செல்வங் கொடுத்து இன்பமாக வாழச் செய்த அந்த ஏழைப்பங்காளனு கள்வனென்று கொல்லப்பட வேண்டும்! இவ்வாறு இப்பிறப்பிலே நாமறியக் கோவலன் செய்தன நல்வினைகளல்லவோ? பிறர்க்குத் துன்பங்களை முற்பகல் செய்தாலன்ரூ தமக்குத்துன்பம் பிற்பகல் வரும்? வாழ்க்கைக்கு முதலாகக் கொண்டு வந்த சிலம்பு மரணத்திற்கு முதலாய்விட்டதே! கண்ணகியையும் கோவலனையும்சேர்த்துமதுரை வரை அழைத்துவந்த சிலம்பு, கண்ணகியையும்

கோவலனையும் பிரித்துவிட்டது! நல்லசிலம்பு, நமக்கு வாழ்வளிக்கும் சிலம்பு என்று இருவரும் நம்பியிருந்த சிலம்பின் மூலமாகத் தீயஊழ்வினை செயலாற்றியது. கருணையுள்ளம் படைத்த கோவலனைக் கள்வனெனக் கூறுமாறு செய்து அவனது உயிரைக் குடித்ததோடு சிலம்புசெய்த தீங்கு நிற்கவில்லை, அரசனதுஆருயிரையும் அது கவர்ந்து விடுகின்றது!

## மாசு நீக்கிய மங்கையும், நீதியை நிறுத்திய மன்னனும்.

சிலம்போடு சென்ற கணவன் செல்வத் தோடு மீள்வானென்றும், மதுரைமா நகரிலே தாமிருவரும் மகிழ்வோடு வாழலாம் என்றும் கண்ணகியின் மனம் வருங் காலத்தைப் பற்றி நினைந்தவாறிருந்தது. ஆர்வத்தோடு சமைத்த அறுசுவை உணவை அவன் பெருமகிழ்வோடுண் டமையையும், பின்னர் அன்போடுதன்னை அருகி லிருத்தி மனந்திறந்து அவன் பேசியவற்றையும் கண்ணகி எண்ணியவாறே இன்பத்திலாழ்ந்தாள். தன் கணவனது உள்ளம் திருந்திவிட்டதென்றும் தாம் இருவரும் அறவாழ்வு நடத்தி இன்பம் எய் துதற்கு இனி யாதும் தடையில்லையென்றும் அப்பெண்ணணங்கு ஆசைக் கனவு கண்டாள். சென்ற கோவலன் திரும்பி வரும் வழிபார்த்து

ஆவலோடிருக்கும் கண்ணகிக்கு ஒரு கணம் ஒரு யுகமாகக் கழிகின்றது. வெகு தூரத்திலேதானும் அவளுக்கு அவனது உருவம் தெரிவதாயில்லை. அவள் மனத்திலே யாதோ ஒன்று பாரமாய் அழுத்துகின்றது. காரணமொன்றுமில்லாமலே கவலையானது மனத்திலே கவிந்து நிற்கின்றது.

இவள் இவ்வாறிருப்ப, பக்கத்திலேயுள்ள மாதரியின் மனையிலே பெண்கள் பலர்கூடி நிற்கின்றார்கள். அங்கு நிகழ்ந்த துர்ச் சகுனங்களை அவர்கள் ஒருவருக்கொருவர் கூறுவதைப்பார்க்கும்போது அத்தகைய தீய சகுனங்கள் முன்னென்றுமே நடந்ததில்லை என்பது தெளிவாகின்றது. குடத்தில் வைத்த பால் உறையவில்லை! காளைமாட்டின் கண்களிலிருந்து நீர் சொரிகின்றது! உறியில் வைத்த வெண்ணெய் உருக்க உருகவில்லை! ஆட்டுக்குட்டிகள் துள்ளி விளையாடாது சோர்ந்து கிடக்கின்றன! பசுக்கள் மெய் நடுங்கி அரற்றுகின்றன! பசுக்களின் கழுத்தில் கட்டிய பெரிய மணிகள் அறுந்து விழுகின்றன! தீய சகுனங்களான இவற்றைக் கண்ட மாதரி திருமாலின் அருளை வேண்டிக் குரவைக் கூத்தொன்றினை நடத்துகின்றாள். குரவையின் முடிவிலே ஆற்றிற்குக் குளிக்கச் சென்ற மகளிருள் ஒருத்தி கொடிய செய்தியொன்று கேட்டு, மாதரி இருந்த மனையை நோக்கி விரைந்து வருகின்றாள். கோவலன் கொலையுண்டான் என்ற

செய்தி மதுரைநகர் முழுவதும் பரவி, புறத்திலேயுள்ள இடையர் சேரிக்கும் எட்டிவிடுகின்றது. இச்செய்தியைக் கேட்ட மாதரியும் மற்றுமுள்ள மகளிரும் செய்வதறியாது திகைக்கின்றனர். கண்ணகியை மகிழ்ச்சியோடு வரவேற்ற மாதரி கணவன்கொலையுண்ட செய்தியை அவளுக்கு எவ்வாறு கூறுவாள்?

காரணமறியாது உள்ளம் சோர்ந்திருந்த கண்ணகி, மாதரி முதலாம் இடைய மகளிரது வாட்டத்தையும் அவர்கள் சொல்ல அறியாது கண்ணீர் சொரிதலையுங் கண்டாள். அவள் அவர்களை அணுகி, கவலையின் காரணத்தைக் கேட்டாள். தன் கணவனுக்குற்றதை அறியத்துடித்தாள். கணவன் கொல்லப்பட்டான் என்ற செய்தி அவளதுஉள்ளத்தைத்துளைத்தது. ஆயின், சிலம்பு கவர்ந்த கள்வன் என்று கொல்லப்பட்டான் என்பதோ அவளது உயிரையும் ஊசலாடச் செய்தது. வாழ்வுகாண அழைத்து வந்த கணவன் மாண்டான் என்பதிலும் தன் உயிரினுமினியனை அவன் தகாத பழிச்சொல் எய்தினன் என்பது அவளது உயிரை அணுவணுவாகத் தின்றது. தன்னையும் தன் கணவனையும் முகமலர்ந்து உபசரித்த மாதரியும் அவள் மகளும் தன் கணவனைப்பற்றி யாது நினைப்பார்களென ஏங்கினள். அங்குக் கூடிநின்ற இடைமகளிர் கோவலனைப்பற்றி யாது கூறுவார்களென எண்ணி வாடினள். மாதரியும் மற்றுமுள்ள மக

ளிரும் கேட்க, சூரியனைப்பார்த்து "காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?" என்று வினவினாள். "கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்! ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்" என அசரீரியாய் ஒரு குரல் வானத்தில் எழுந்தது.

காவிரிப்பூம் பட்டினத்தில் மனையை விட்டு வெளியே அடியெடுத்து வையாமலும், உற்றார் உறவினரோடன்றி அயலாரோடு பேசியறியாமலும் அடக்கமே அணிகலமாகக் கொண்டு வாழ்ந்தகண்ணகி, கணவன் கள்வனெனக் கொலப்பட்டான் என்றதைக் கேட்டதும் தன்னை மறந்தாள், தன் முன்னைய அடக்கத்தைத் துறந்தாள்! ஒற்றைச் சிலம்பினைக் கையினில் ஏந்திய வாறு கொற்றவைபோல் நடந்தாள். மதுரை வீதியில் நின்ற மகளிர் கண்ணகியின் தோற்றத்தையும் நடையையும் கண்டு அச்சமும் இரக்கமும் கொள்கின்றனர். மாண்டுபோன தன்கணவனின் வாய்ச்சொல்லைத்தான் கேட்பாள் என்று, கண்ணகிகூறக்கேட்டுமதுரையிலுள்ளார் "இவள் பெண்ணல்லள்; இந்நகருக்குக்கேடுசெய்யவந்த புதியதோர் தெய்வமே" என்று மயங்கினர். கண்ணகி தனது சொல்லின்படியே சென்று கணவன் கிடந்த இடத்தையடந்தாள். பொன்போலும் அவனது மேனி புழுதியிற் கிடத்தலைக் கண்டு பொறுக்கலாற்றாளாயினள். காலையில் தன்னைத் தழுவிப் பிரிந்த உடல் மாலையில் வெட்டுண்டு கிடத்தலைக் கண்டதும் உயிர் சோர்ந்து வீழ்ந்

தாள். ''மதுரைமாநகரில் பெண்டிரும் உள்ள னரோ?'' என்றும் ''சான்றோரும் இருக்கின்றார் களா?'' என்றும் "தெய்வம் உண்டோ?" என்றும் புலம்பியழுதாள். கண்ணீர் கவுளலைப்பக் கதறி யழும் கண்ணகியின் துயர மொழிகள் கல்லையும் கனிவிக்க வல்லன. மாண்ட கோவலனின் உயிர் மீண்டும் புகுந்தது. வீழ்ந்த கோவலன் எழுந்து நின்றான்; கண்ணகியின் கண்ணீரைத் துடைத் தான். கண்ணகி அவன் அடிகளில் வீழ்ந்து, கை யால் பற்றியணைத்தாள். ''மலர் விழியாளே, இங்கே இரு'' என்று கூறி, தெய்வ உருவில் சென்று மறைந்தான். கணவனின் வாய்மொழி கேட்ட கண்ணகி, கணவனுக்கு மன்னன் சுமத் திய மாசினை நீக்க எழுந்தாள்.

பாண்டியன் மரபு நீதியின் நிலைக்களம். பாண்டியன் நெடுஞ்செழியனே நீதியின் புகலி டம். திங்களிலே நிலவுதான் பிறக்கும். குளிர்ந்த நிலவினைத்தரும் திங்களிலே கொடிய நெருப்புப் பிறந்தது போல நீதியின் பிறப்பிடமான பாண் டியன் நெடுஞ்செழியனது ஆட்சியில் அநீதி விளைந்துவிட்டது. அதன் பயனாக, அம்மன்னன் வாசலிலே ஒரு பெண்ணுருவம் ஒற்றைச் சிலம் புடன் நிற்கின்றது. விரித்த கூந்தலும், வெட் டுண்டிறந்த கணவனுடலைத் தழுவியமையால் இரத்தம்படிந்த கோலமும், கண்டாரைக் கலங் கச் செய்யும் பார்வையும், கேட்டாரை மெய் நடுங்கச்செய்யும் சொல்லும் உடைய இப்பெண்

ணைக் கண்ட வாயில் காவலர் இவள் கொற்ற வையோ காளியோ என ஐயுற்றுக் குடர் நடுங்கு கின்றனர். அவள் அக் காவலரைப் பார்த்து, "ஒற்றைச் சிலம்பு ஏந்திய கையள், கணவனை யிழந்தாள், கடையகத்தாள்" என மன்னனுக்கு அறிவிக்குமாறு ஆணையிட்டனள். மங்கை இவ் வாறு கூறியது காதில் விழுந்தது விழாமுன்னரே வாயிலாளன் பாண்டியனை அணுகிக்கூற, காட் சிக் கெளியனான அம் மன்னன் கண்ணகியை உடனே வரவிடுமாறு கட்டளையிட்டனன். கண் ணகி. அஞ்சத்தக்க கோலத்துடன் காவலன் முன்பு சென்று நின்றதும், அப் பாண்டியனுக்கு அவளது காளிக்கோலம் புலனாகவில்லை; கண் ணீர் சொரிந்த கோலமே கண்ணுக்குப் புலப் பட்டது. நெடுஞ்செழியனது நீண்ட ஆட்சிக்கா லத்தில் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீ ரோடு யாரும் அவன்முன் வந்தாரில்லை. கண்ணீ ரை அறியாதது அவன் காக்கும்நாடு. அத்தகைய மன்னன் கண்ணகியின் முகத்திற் கண்ணீரைக் கண்டதும் கலங்கினான். "நீர்வார் கண்ணை, என் முன் வந்தோய், யாரையோ நீ? மடக்கொடி" என அவன் மிக்க பரிவோடு வினவினான். அங்ங னம் வினவிய அரசனுக்கு அவள் தன் பெய ரையோ தன் குறையையோ கூறிமுடித்தாளல் லள். கருணையையும் நீதியையும் அறியாத அர சன் இவன் என்றும், ஆகவே அவற்றின் அருமை யையும் பெருமையையும் அறிவுறுத்தல்வேண்

டும் என்றும் கருதியவளாய், சிபிச்சக்கரவர்த்தி, மனுநீதிகண்ட சோழன் என்போர் செய்த செயலை நினைவுபடுத்திச் சோழநாட்டின் புகழைக் கூறுகின்றாள். பின்னர், தானும் கணவனும் மதுரைக்கு வந்த வரலாற்றை எடுத்துரைக்கின்றாள். இதெல்லாவற்றையும் கேட்டபின்னரும் தான் செய்தது தவறென மன்னன் எண்ணவில்லை. எனவே அவன் ''கள்வனைக் கோல்லல் கடுங்கோலன்று'' எனத் தான் செய்தமை நீதியே என நிறுவுகின்றான். சோழநாட்டில் உதித்த சுடர்க்கொடி துணிவு கொண்டாள். மன்னன் சிலம்பு முத்துடையது, கண்ணகி சிலம்போ மாணிக்கத்தை உடையது. ஆகவே, மன்னனின் மதியைத் தெளிவிக்கக் கருதியவளாய்க் கண்ணகி தன் சிலம்பை மன்னன் முன்னே உடைத்தாள். மாணிக்கம் தெறித்தது. கோவலன் கள்வன் என்ற மாசும் நீங்கியது.

பிழையைப் பிழை என்றுணர்வார் அரியர். அங்ஙனம் உணர்ந்தார் உளரேனும் அவ்வாறே ஒளியாது உரைப்பார் அவரினும் அரியர். அங்ஙனம் உரைப்பதோடு நில்லாது தாம் செய்த தவறு பொறுக்காது உயிரை விடுவார் மிகமிக அரியர். மன்னன் தான் செய்த தவறினை உணர்ந்தான். ''பொன்செய் கொல்லன் தன் சொற் கேட்ட யானோ அரசன்'' என்று கூறிய தோடமையாது "யானே கள்வன்" எனத் தன்

பழியைத் தானே பறைசாற்றினான். "கெடுக என் ஆயுள்" என்று கூறி உயிர் துறந்தான். பாண்டியனது ஆட்சியில் ஊழ்வினையால் நீதி சாய்ந்தது. சாய்ந்த நீதியை அம்மன்னன் தன் உயிர் கொடுத்து நிலைநிறுத்தினான்.

## தீ பரந்தது, சினம் தணிந்தது

அருள், நிறை, பொறை, சாந்தம் முதலிய அருங்குணங்களாலும் அறிவாலும் சாதனையாலும் அனுபவத்தாலும் முதிர்ந்து வளர்ச்சியடையப்பெற்ற முனிவர்களிடத்தில் கோபம் பிறத்தல் ஒருகாலும் இல்லை. தம்பொருட்டாகவன்றி பிறர்பொருட்டாகவே அத்தகைய முனிவர்களிடத்தில் ஒருகால் கோபம் எழுமாயின் அக்கோபமும் ஒரு கணப்பொழுதிற்கு மேலாக நிற்பதில்லை. அவ்வாறே ஒரு சிறு கணப்பொழுதளவே நிற்பதான அம்முனிவரது கோபத்தினைத் தடுத்துக் காக்க வல்லார் இப்பூவுலகில் யாரும் இலர். வனத்திலும் மலைக்குகையிலும் இருந்து ஐம்பொறிகளையும் அவற்றின் வழியாகப் பிறக்கும் அவாவினையும் அடக்கி நோற்றலினால் ஆற்றலினைப் பெற்று, தெய்வமென மதிக்கத்தக்க சீரிய உயர்நிலையடைந்த முனிவர்களினும் மேலான திறன் படைத்தவர்கள் மனையிலிருந்து அடங்கிவாழும் மங்கையர்கள் அன்பு, அடக்கம், நிறை, பொறை என்னும் பொதுக்

குணங்களையும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் சிறப்புக் குணங்களையும் வளர்த்துக் கற்பென்னும் பொற்பு விளங்க வாழும் நற்குல மங்கையர் தோற்றத்தால் மெல்லியரேயாயினும், ஆற்றலால் தேவரும் அஞ்சும் வலியரேயாவர். கண்ணகி தனது மனைவாழ்க்கையில் கணவனைப் பிரிந்த நிலையில் பல்லாண்டுகள் கழித்தாள். அறத்தையோ பொருளின் பயனையோ இன்ப அனுபவத்தையோ காணாது அவளது அரிய வாழ்நாள் கழிந்தது. ஆயினும் அவளது உள்ளம் நற்பண்புகளாலும் கற்பொழுக்கத்தாலும் நாளும் நாளும் தூய்மையும் உயர்வும் பெற்றுத் துலங்கியது. அத்தகைய உத்தமிக்கு முன்னென்றும் வராத துன்பம்வந்து விட்டது. தனக்கு வந்த கோடிக்கணக்கான துன்பங்களையெல்லாம் பூமியைப்போற் பொறுத்த அந் நங்கைக்குத் தாங்கவியலாத துன்பமொன்று வந்தது. தன்னுயிர்க்கு வந்த பெருந் துன்பங்களையெல்லாம் துரும்பாக மதித்த அவள் தன் உயிரினும் சிறந்த கோவலனுக்கேற்பட்ட துன்பத்தை ஒருகணமும் பொறுக்கலாற்றுளாயினள்: மன்னன் முன்னிலையில் தன் கணவன் கள்வனல்லன் என்று உண்மையை நிலைபெறச்செய்த பின்னரும் கண்ணகியின் கவலையும் சினமும் தணியவில்லை.

வேல், வாள் முதலிய ஆயுதங்கள் உடலைச் சிதைத்து உயிரைப் போக்கவல்ல கொடுமை பொருந்தியன. அவ்வாயுதங்களிலும் கொடியது ஏழை அழுத கண்ணீர் அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண்ணீர் எவ்வகையில் எதிரியைக் கெடுக்கும் என்று சொல்லல் இயலாது. அந்தச் சிறு நீர்த் துளிகள் அரசர் வாழ்வையும் அழிக்கவல்லன. இம்மையோடு நில்லாது மறுமையும் தொடர்ந்து சென்று வருத்தவல்லன அக் கண்ணீர்த் துளிகள் சீதை அசோகவனத்தில் இருந்து உள்ளம் நைந்து நொந்து அழுத கண்ணீர் வீணுகிப் போய்விடவில்லை. இலங்கை நகரத்தையே எரித்தது. அவள் அழுத கண்ணீர் அவ்வாருயின், அவள் ஆற்ருது சினங்கொண்டு கூறும் சொல் எவ்வாருகும்? ஆனுல் அவள் அவ்வாறு யாதும் கூறிவிடவில்லை. கணவன் இருக்கின்ருன் என்று அவ்வெண்ணத்தைக் கைவிட்டாள். கணவனை இழந்த கண்ணகி தன் கணவனுக்கு மாசுகற்பித்துக் கொலைசெய்தொழித்த ஊரைக் காணுந்தோறும் கனன்ருள். அவள் மனத்தில் கற்புடைய மகளிர் எழுவரது வாழ்க்கை ஒரு கணம் ஓடி மறைந்தது.

சோழநாடு கற்புடை மகளிர் வாழ்ந்தமையாற் சிறப்பெய்திய நாடு. அந்நாட்டில் ஒருகற்புடைப் பெண்ணுக்கு வன்னிமரமும் மடைப்பள்ளியும் சாட்சிகூறின. மற்ருெரு நங்கை விளை

யாடும் பருவத்தினளாய் இருக்கும் காலத்தில் அவளுடைய தோழியர்கள் காவிரி ஆற்றங் கரையில் அவள் விளையாடிய மணற் பாவை யைக் காட்டி அது அவள் கணவன் என்று கூற, அச்சொல்லையேகொண்டு தன் தோழியரோடு திரும்பி வீட்டுக்குச் செல்லாது அவள் அவ்வி டத்தே நிற்ப, அவ் ஆறு அவளிருக்குமிடத்தை மட்டும் விட்டு ஏனைய இடத்தைத் திரையால் மூடிச் சென்றது. சோழன் கரிகாலனுடைய மகள் ஆதிமந்தியானவள் தன் கணவன் ஆற்றுநீரா லிழுக்கப்பட்டுச் செல்ல, தானும் அவனை அழைத்தவாறு ஆற்றின் கரைவழியே சென்று கழிமுகத்தையடைந்தபோது, கடலானது அவள் கணவனை மீட்டுக் கொடுப்ப, கணவனோடு மீண் டாள். மற்றுமோர் வணிகர்குலப் பெண் தன் கணவன் பொருள் தேடுதற் பொருட்டாய்க் கப் பலிற் செல்ல, அவள் கடற்கரையிலே கப்பல் வரும் வழியைப் பார்த்தவாறே தன் கணவன் வரும் வரையும் கல்லாய் நின்று பின், தன் கண வன் வந்ததும் கல்லுருவம் நீங்கினாள். மற்று மொரு கற்புடைய மகள் தன் சக்களத்தியினது குழந்தை கிணற்றில் விழத் தானும் தன் குழந் தையைக் கிணற்றில் வீழ்த்திப் பின் இருகுழந் தைகளையும் கிணற்றிலிருந்து மீட்டெடுத்தாள். வேறோர் கற்புடையாள் தன் கணவன் தன்னைப் பிரிந்த காலத்தில் ஒரு காமுகன் விருப்பத் தோடு தன்னைப் பார்த்தலைக் கண்டு, தன் முகத்

தைக் குரங்கு முகமாக்கிப் பின் தன் கணவன் மீண்டு வந்ததும் குரங்கு முகத்தை நீக்கினாள். தன் தாய் விளையாட்டாகச் சொன்ன சொல்லை மெய்யாகப் பேணி, தனக்குக் குறித்த ஆடவனைக் காதலித்து, தாய் தந்தையர் முயற்சிக்கு முன்னாகவே தானே அணியணிந்து மணமகளாய்ச் சென்று தன் காதலனைக் கூடினாள். மற்றொருத்தி இவ்வாறு வாய்மை, அன்பு, நேர்மை என்னும் குணங்களில் வழுவாது நின்று கற்பொழுக்கத்தைத் தம் உயிரினும் மேலாகப் பேணிய மங்கையர் திலகங்கள் வாழ்ந்த நாடு காவிரி பாயும் சோழவள நாடு. அந்நாட்டில் அம் மங்கையர்போல் கற்புக்கடம் பூண்ட கண்ணகிக்கு, மன்னன் முன் வழக்குரைத்துக் கணவனின் மாசினைத் துடைத்ததோடு மனம் அமைதி பெறவில்லை.

விருந்தினரைப் புறத்திலிருத்திவிட்டு தாம் மாத்திரம் தனித்துண்ணுதலை விரும்பாத நாடு தமிழ் நாடு. விருந்தினரைப் பேணுதலே இல் வாழ்க்கையின் இலட்சியம் எனக் கொண்டவர் தமிழ் மக்கள். தமிழ்ப் பண்பாடு தொன்று தொட்டுத் தழைத்திருந்த பாண்டி நாட்டில் விருந்து புறந்தரும் மேலாம் பண்பு நன்கு வேர் ஓடியிருந்தது ஆயினும் ஆங்காங்கு அப் பண்புக்கு அழிவுக்குறிகள் காணப்பட்டன. மதுரைப்

புறஞ்சேரியிலே இடையர் மனையிலே இனிது காணப்பட்ட விருந்தோம்பும் பண்பு மாடமதுரையிலே மெல்ல மறையலாயிற்று. பாண்டிநாட்டிற்கும் மதுரை மூதூர்க்கும் முற்றும் புதியராய் வந்த கோவலனும் கண்ணகியும் மாதரி அளித்த உபசாரத்தால், மதுரையில் வாழலாம் என நம்பினர்கள். வாழ்வுக்கு வழிகாணச் சென்ற கோவலனை மதுரைமாநகர் புதியவனென்று கண்டு உபசாரமோ உதவியோ செய்தலை விட்டு, கள்வனென்ற பழியைச் சுமத்தியது. விருந்தினனை கோவலனைக் கள்வன் என்றதோடமையாது கொலையும் செய்துவிட்டது. மதுரைமாநகரிலே ஆங்காங்கு மறைந்திருந்த தீயபண்பு பொற்கொல்லன் வடிவில் கொடுமை புரிந்தது. முன்னே நல்லவர்கட்குச் செய்த தீமை முப்புரங்களை எரித்தது. பின்னே கற்புடை மகளுக்குச் செய்த கொடுமை இலங்காபுரியை எரித்தது. இப்போது ஒரு தீமை கண்ணகியின் கற்புள்ளத்தைக் கனலச் செய்து அவளால் மதுரைமாநகரை எரித்துவிடுகின்றது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். ஆயின் மேன்மக்களுக்குச் செய்யுந் தீமை அப்பகலே விளையும்! தீமை தீயாகப் பரவியது. கண்ணகியின் கருணையால் அக்கற்பரசியின் நீதி நிறைந்த நெஞ்சினல் அந்தணர்,

அறவோர், பசு, கற்புடை மகளிர், முதியோர், குழவி என்னும் இவர்களை விலக்கித் தீயானது மதுரையின் எப்பக்கமும் பரவியது. மாண்பு மிக்க மதுரைக்கு வழு உண்டாக்கிய தீயோர் அழிந்தனர். பழம்பெரும் நகரான மதுரையின் மாசு கழுவப்பட்டது. மங்கையும் சினந் தணிந் தாள்.

## சேரநாடு சேர்ந்த தெய்வம்

கோவலனுக்குத் தீமைபுரிந்த கூடல்மா நகரில் கொடியோர் வாழும் இடங்களெல்லாம் எரிந்தொழிந்தன. அங்ஙனமாயினும் கண்ணகியின் கவலை தீரவில்லை. அவளுக்குண்டான கவலையைக் கேட்டறிந்து அவளுக்கு ஆறுதல் கூறுவாரும் அம் மதுரைமா நகரில் யாரும் இலர். முன்னே அவள் தன்னுடைய கணவன் வெட்டுண்டிறந்தமை கேட்டு வீதியிலே புலம்பிச் சென்றபொழுது அம்மதுரையில் உள்ளோர் ஆங்காங்கு நின்று அச்சத்தோடும், இரக்கத் தோடும் பார்த்து நின்றனரேயன்றி அவளருகில் வந்து அவளது துன்பத்தைத் துடைக்க எண்ணினார் ஆரும் இல்லை. இப்பொழுதும், அவள் செய்வதறியாது வீதியிலே கலங்கிச் செல்லுகையிலும் அவளுக்கிரங்கி அயலே வருவார் யாரும் இல்லை. ஆயினும் அவளுடைய மனக்கவலையை மாற்றத் தெய்வமாவது அங்கே இருந்தது! உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என்று ஒருவர்க்

குத் துணையான மக்களெல்லாம் கைவிட்டாலும், மறந்தாலும் தெய்வம் ஒருபோதும் கைவிடுவதும் மறப்பதும் இல்லையல்லவா? மதுராபதித் தெய்வம் ஓர் அழகிய மானிடப் பெண் வடிவில் வந்தது. கண்ணகியின் முன்னே செல்வதற்கு அஞ்சி அத் தெய்வம் அவள் பின்னே தொடர்ந்து சென்றது. கணவனையிழந்து நெருப்பைப்போலக் கனன்று மாட மதுரையையும் எரித்துவிட்டு, கணவனை எவ்வாறடைவது என்ற கவலையோடு செல்லும் கற்பரசியோடு யாது சொல்லிப் பேச்சுத் தொடர்வது? இந்த விதமான அச்சத்தோடு சென்ற மதுராபுரித்தெய்வம் ஒருவாறு மனத் தைரியத்துடன் பேசத் தொடங்கியது. ''நங்காய், என் குறையைக் கேட்பாயா?'' என்ற சொற்கள் காதில் விழுந்ததும் கண்ணகி சற்றே தன் முகத்தை வளைத்து பின்புறம் பார்த்தாள். பார்த்தவள் தன்னைத் தொடர்ந்து ஒரு பெண் வருதலைக் கண்டு, "என் பின்னே வரும் பெண்ணே, நீ யார்? யான் அடைந்த துன்பத்தை நீ அறிவாயா?" என்றாள். அதைக் கேட்ட அப் பெண் தெய்வம் தான் யார் என்று கூறி, கண்ணகியின் கணவன் இறந்தமை குறித்துத் தான்பட்ட கவலையையும் தெரிவித்தது. பின்னர், பாண்டியர் மரபின் பெருமையையும், அவ்வரசர் செய்துவந்த ஆட்சிச் சிறப்பையும் எடுத்துரைத்தது. இறுதியாக, கோவலன் இறந்தமைக்குக் காரணமான ஊழ்வினைச் செய்தியையும் கூறியது.

முற்காலத்தில் சிங்கபுரத்தரசனுக்கும் கபில புரத்தரசனுக்கும் பெரும்போர் மூண்டது. அப் போர் காரணமாக அவ்விரு நாட்டுக்கும் இடை யிலே உள்ள நிலப்பகுதியில் யாரும் செல்ல அஞ்சினர். கபிலபுரத்து வாணிகன் ஒருவன் சங்கமன் என்னும் பெயரினை உடையவன். அவன் தன் மனைவியோடு மாறு வேடத்தில் விலைமதித்தற்கரிய பொருள்களைக் கொண்டு சென்று சிங்கபுரத்துக் கடை வீதியில் விற்றான். சிங்கபுரத்தரசனுக்கு ஏவல் செய்யும் பரதன் என்பவன் அக்கடை வீதியில் பொருள் விற்றுக் கொண்டிருந்த சங்கமனைச் சிங்கபுரத்தரசனது ஒற்றன் என்று குற்றஞ் சுமத்தி அரசனாற் கொல் லுவித்தான். கொல்லப்பட்ட சங்கமனின் மனை வியாகிய நீலி என்பவள் தன் கணவன் இறந்த செய்தி கேட்டுத் துடிதுடித்து, வீதியிலும், மன் றங்களிலும் முறையிட்டுப் புலம்பி அழுதவ ளாகி, பதினான்கு நாள்கள் கழித்து இறுதியில் மலைமேலேறி உயிர் விடுபவள், தனக்கு அவ்வித கொடிய துன்பத்தை விளைவித்தோர் மறுமை யில் அவ்வித துன்பம் அடைவார்களாக என்று கூறிச் சாபமிட்டு இறந்தாள். அந்தச் சாபப் பயனே கோவலனுக்கு நிகழ்ந்தது. மதுராபதித் தெய்வம் இவ்வாறு கோவலனுக்கேற்பட்ட கொலையின் காரணத்தையும், பதினான்கு நாள் கள் கழித்து கண்ணகி தன் கணவனைத் தேவர் வடிவில் கண்டு அடைவாள் என்பதையும் கூறி அவளை ஆற்றியது.

தன் கணவனை மீண்டும் தான் அடையலாம் என்பதை அறிந்ததும் கண்ணகியின் கால்கள் மதுரையில் சிறிதும் தரித்துநிற்கப் பொறுக்க வில்லை. தன் கணவனைத் தான் கைப்பிடித்தற்குக் காரணமாய்த் தான் பிறந்த பொன்னுடான காவிரிப்பூம் பட்டினம்தானும் கண்ணகி நல் வாழ்வு வாழ வழிசெய்யவில்லை. தானும் கணவ னும் சரணடைந்த மதுரைமாநகர்தானும் கண் ணகிக்கு இம்மை நல்வாழ்வளிக்கவில்லை. எனவே தன் இம்மை வாழ்விற்கு இன்பஞ் செய்யாத பிறந்த நாட்டையோ புகுந்த நாடான மதுரை யையோ விரும்பாது அவள் உவர்த்து வெறுத் தாள். அவள் கால்கள் மேற்குத் திசை நோக்கி நடந்தன. மதுரையின் கீழை வாயிலை முன்னே அடைந்தபொழுது கணவனைக் கைப் பிடித்து நுழைந்தவள் மதுரையின் மேலை வாயிலை விட்டு வெளியேறும்போது கணவனையின்றித் தனியே சென்ருள். கணவனேடு சேர்ந்துவந்த தன்னைப் பிரித்துத் தனியே செலுத்தும் மதுரையின் இயல்பை நினைந்து மனம் நொந்த கண்ணகி மதுரைக்குச் செய்யும் இறுதி 'மரியாதை'யாகத் தன் சங்க வளையல்களைக் கழற்றி மதுரை மேற்கு வாயிலில் உடைத்தாள். காவிரிப்பூம்பட் டினத்திலிருந்து இராவேளையில் புறப்பட்ட காலத்தில் நாணத்தையும், மடத்தையும் துறந்து கற்பினையே துணையாகக்கொண்டு கணவனேடு

வந்தவள், மதுரையிலிருந்து வெளியேறும்போதும் நாணமும் மடமும் முதலாகிய பெண்மைக் குணங்களெல்லாவற்றையும் துறந்து, கணவனை அடையவேண்டும் என்னும் ஆர்வமே பற்றுக்கோடாக நடந்தாள். அவளுடைய கால்களுக்கு மேடு பள்ளங்களோ கற்களுமோ முட்களுமோ பொருளல்ல. அவள் மனத்திற்கு காடும் நாடுமோ இரவும் பகலுமோ பொருளல்ல. வைகையாற்றின் கரைவழியே சென்ற அவள் சேர நாட்டிலுள்ளதும் முருகனது திருத்தலங்களில் ஒன்றானதுமான திருச்செங்கோடு என்னும் மலையில் ஏறினாள்.

அதனுச்சியில் உள்ள வேங்கை மரத்தின் கீழ்த்தங்கித் தன் வினையை நொந்தவாறிருந்தாள். அங்ஙனம் இருந்து, பதினான்காம் நாளிலே அவளது அன்பு நெஞ்சம் இன்பம் பொங்க அவள் கருதியது கைகூடப்பெற்றது. அவள் முன்னாக ஒரு தேவ விமானம் வந்திறங்கியது. அவ்விமானத்தில் இருந்ததேவர்கள் தேவவடிவில் இருந்த கோவலனைக் கண்ணகிக்குக் காட்டி அவளை அழைத்தனர். வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, கணவனிடத்துக் கொண்ட அன்பென்னும் நீரினால் கற்பென்னும் பயிரை வளர்த்த கண்ணகி தெய்விக வாழ்வென்னும் விளைவை அனுபவித்

தற்பொருட்டுத் தேவவடிவு பெற்றுக் கணவனோடு சென்றாள். இவ்வரிய காட்சியைக் காணக் கொடுத்து வைத்தவர்களும் அம்மலையில் இருந்தார்கள். மலையிலே தினையை விளைவித்து, அருவி நீரிலே நீராடி மகிழ்ந்து, இயற்கையோடமைந்த இன்ப வாழ்வு நடத்தும் குறவர்கள் தம் நாட்டுக்கு ஒரு மங்கை நல்லாள் தனித்து வந்து தெய்வமான காட்சியைக் கண்ணாரக் கண்டார்கள். கண்டதும், என்றும் நடவாத இந்த அற்புதம் தங்கள் குலம் செய்த தவப் பயன் என்று ஆனந்தம் கொண்டார்கள். அவ் ஆனந்தத்தால், தங்கள் குலதெய்வமாகிய முருகனைப் பரவுமுகமாக குரவைக் கூத்தாடி இன்புற்றார்கள்.

மண்ணிலே தோன்றுகின்ற பொன், பொன் வினைஞர்களது கைத்திறனால் நன்மையடைந்து மன்னர்களதும் செல்வர்களதும் உடம்பில் அணியாகும் மதிப்பைப் பெறுகின்றது. பொன்னினது அந்த மதிப்பு அதனைத் தோற்றுவித்த மண்ணுக்குக் கிடைப்பதில்லை. சோழநாடு கண்ணகிக்குப் பிறப்பிடமாயிருந்தது. பாண்டிய நாடு அவளது அன்புக்கும் கற்புக்கும் சோதனைக் களமாயிருந்தது. சேரநாடு அவள் தெய்விக நிலை அடைதற்கு இடமாகும் பெருமை பெற்றது. கண்ணகியைத் தோற்றுவித்த நாட்டுக்கும் அவளது அன்பையும் கற்பையும் உலகறியச் செய்தற்குக் காரணமாயிருந்த பாண்

டினுயட்டுக்கும் கிடைக்காத பெருமையும் பேறும் அவள் இறுதியில் சென்றடைந்த சேர ஞட்டுக்கு எய்திவிட்டன. கண்ணகி சேரனுட்டை அடைந்ததனுல், தான் தெய்வமான சிறப்பைப் பெற்றதுமட்டுமன்றிச் சேரனுட்டின் பண்பும் புகழும் உயருதற்குரிய வாய்ப்பையும் அளித்துவிட்டாள்.

## சேரமன்னனின் சீரிய பண்பு

சேரர் மரபில் உதித்தவராகிய இளங்கோ வடிகள் தாம்பாடிய சிலப்பதிகாரத்தினை மூவேந்தர்க்கும் உரிய வகையில் பாடியுள்ளார். முதற்கண் அமைந்த புகார்க் காண்டத்தில் சோழ ஞட்டின் சிறப்புக்களும் சோழ மன்னரின் மாண்புகளும் பலபட விரித்துரைக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாயுள்ள மதுரைக் காண்டத்தில் மதுரைமாநகரின் வளமும் பாண்டிய மன்னரின் தொன்றுதொட்ட உயரிய பண்புகளும் விளக்கப்பட்டுள்ளன. இவற்றைப் படிக்கும் போது, சோழரைப் பற்றியும் பாண்டியரைப் பற்றியும் சேரர்குலத்தவரான ஒரு புலவர் எத்தகைய உயர்ந்த உள்ளப்பாங்கோடு பாடியிருக்கின்ருர் என்ற வியப்புத்தோன்ருமல் இருக்காது. சோழனுட்டினையும் சோழ மன்னரையும் சோழ ஞட்டிற் பிறந்தானெருவன் எவ்வாறு அன்பும் ஆர்வமும் இன்பமும் பொங்கப் பேசுவானே

அதுபோலவும், பாண்டிநாட்டினையும் பாண்டியர் மரபினையும் அப்பாண்டிநாட்டில் பிறந்தாரொருவன் எவ்வாறு தன் ஆராமை தீராது அகமகிழ்ந்து கூறுவானே அதுபோலவும் அவ்விரு நாட்டுக்கும் இணையான சேரநாட்டில் அவ்விரு நாட்டு மன்னர்க்கும் ஈடான சேரர்குலத்தில் தோன்றிய இளங்கோ, மனத்துக்கண் மாசின்றிவாயாரப் புகழ்ந்து பாடிய திறத்தினை நோக்கும்போது அவரது புலமையின் சிறப்பும் துறவின் தூய்மையும் நன்கு புலனாகின்றன. மேலும் அச்சேரர்குலத்துச் செந்தமிழ்ப்புலவர் தம் நாட்டினையும் தம்மரபினையும் தமது தமையனை செங்குட்டுவனின் செய்திகளையும் வாய்மை பிறழாமலும் வரம்பு கடவாமலும் கூறிச் செல்வதைக் காணும்போது அவரது உள்ளத்தின் செம்மை பன்மடங்குஉயர்ந்து தோன்றுகின்றது.

இனிநாம், கண்ணகி தெய்வவாழ்வு பெற்ற சேரநாட்டுக்குவருவோம். சேரன் செங்குட்டுவன் தன் மனையாளோடும் பரிவாரங்களோடும் மலை வளங்காணப் புறப்படுகின்றான். அவனுடன் இளங்கோவடிகளும் மதுரைச்சாத்தனார் என்ற தமிழ்ப் புலவரும் செல்கின்றனர். அனைவரும் பேராறு என்னும் ஆற்றின் கரையில் மணல் நிறைந்த இடத்தில் தங்கியிருக்கின்றனர். அப்போது அம்மலைப் பகுதியில் வாழும் குறவர்கள் மலைபடுபொருள்கள் பலவற்றை ஏந்திவந்து

செங்குட்டுவன் முன்னர்வைத்துத் தாம் அன்று மலைமீதுகண்ட அற்புதக்காட்சியை எடுத்துரைக்கின்றனர் ஒருபெண் சேரநாட்டு மலையொன்றின் மீதேறித் தெய்வ உருவில் வானுலகடைந்த செய்தி செங்குட்டுவன் மனத்தில் வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றது. அப்போது அம்மன்னன் அருகில் இருந்த தமிழ்ப் புலவராகிய சாத்தனார், கண்ணகியின் வரலாற்றைக் கூறியதும் உண்மையெல்லாம் அறிந்து உவக்கின்றான். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நேர்ந்த மாசினைக் கேட்டதும் சேரன் மனங்கலங்குகின்றான். அவன் உயிர்நீத்தான் என்றதை அறிந்ததும் ''வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது'' என்று கூறிச் செங்குட்டுவன் மனச்சாந்தி கொள்கின்றான். செங்குட்டுவன் மனத்தில் ஓர் ஐயம் எழுகின்றது. பாண்டியனின் மனைவி தன் கணவன் இறந்ததும் தரியாது தானும் உயிர்விட்டாள். கண்ணகி தன் கணவனுடன் இறவாது பின்னர் தெய்வஉருப்பெற்றாள். இவ்விருவரில் போற்றத் தக்கவர் யாவர்? இந்த ஐயத்தைச் செங்குட்டுவன் தன்தேவியைப் பார்த்து வினவுகின்றான். சேரன் தேவி சேரநாடமைந்த தெய்வத்தையே மேலாக மதிக்கின்றாள். பத்தினிக்கடவுளைப் பரவித்துதிக்கவேண்டுமென்று ஆசைப்படுகின்றாள் அதன் பின்னர், கண்ணகியின் உரு அமைத்தற்குக் கல் எங்கிருந்து கொண்டுவருவது என்றவினு

எழுகின்றது. பொதிய மலையிலிருந்தாயினும் இமயமலையிலிருந்தாயினும் கற் கொண்டு வரலாம். ஆயின் வீரமரபில் உதித்த சேரமன்னனுக்கு இமயத்திலிருந்து கற் கொண்டுவருவதே தகுதி. ஆகவே இமயமலைக்குச் சென்று கற் கொண்டு வருவதற்கு மன்னனும் மற்றுள்ளோரும் துணிகின்றனர். அவ்வளவில் செங்குட்டுவனும் அவன் பாங்காயினுரும் கண்ணகிக்குக்கற் கொணர்ந்து விழாக்காணும் வீரஉள்ளத்தோடு ஆற்றங்கரையை விட்டுநீங்கி அரசமாளிகையை அடைகின்றனர்.

வடக்கேயுள்ள இமயமலை ஆரிய மன்னரது ஆட்சிக்குட்பட்டதாயினும் அது தமிழ்மன்னர்க்கும் அவரது வீரத்திற்கும் எட்டாதகாவதத்தில் உள்ளதன்று. அப்பெருமலை தமிழ் மன்னர்கள் பலரது தாக்குதலைப் பெற்றது மட்டுமன்றி, தமிழ் மன்னரது தனி வெற்றிக் கடையாளமாக சோழ பாண்டிய சேர மன்னர்களால் முறையே புலியும் மீனும் வில்லும் அதன்முதுகில் பொறிக்கவும் பட்டது. ஆகவே சேரன் செங்குட்டுவன் வடநாடு செல்வது ஒரு புதிய வீரமுயற்சியன்று ஆனுலும், இப்போது செங்குட்டுவன் கற் கொணர்வதற்காக இமயம் செல்வது ஒரு வீர முயற்சியாகும் வாய்ப்பும் வந்தது. சேரன் செங்குட்டுவன் ஒருநாள் தன் அவைக்களத்தில் மந்திரிகள் முதலானேருடன் வீற்றிருந்தபோது சில

முனிவர் அவ்வவைக்கண் வந்து, வடநாட்டு மன்னர்களான கனகனும் விஜயனும் பல மன்னர்கள் கூடிய திருமண நிகழ்ச்சியில் தமிழ் மன்னர்களைப் பழித்து நகையாடிய செய்தியைக் கூறினர். அச்செய்தியைக் கேட்ட செங்குட்டுவன், தன்னைப் பழிக்காவிடினும் தமிழ் மன்னர்களைப் பழித்தமையைத் தன்னைப் பழித்ததாகக் கருதி, பொறுக்காது உள்ளம் கொதித்தான். கண்ணகிக்கு விழாவெடுக்கக் கற்கொணருவதாயிருந்த செங்குட்டுவன் வடநாட்டு மன்னர்களான கனகவிஜயரைத் தோற்கடித்து, அவர்கள் அக்கல்லைத் தலையிற் சுமந்து கொண்டுவரச் செய்யாவிடின் தான் குடிகளை வருத்தும் கொடுங்கோலன் ஆகுக என வஞ்சினம் கூறினன். அவனது வீரமொழிகேட்ட அவைக் களத்தோர்அஞ்சினர். செங்குட்டுவன் அக்கணமே வடநாட்டுச் செலவுகுறித்துத் தனது வாளையும் குடையையும் புறவீடு செய்தான். முரசங்கள் போர் போர் என்று முழங்கின. வீரர்கள் தோள் கொட்டி ஆரவாரித்தெழுந்தனர். யானைகள் எழுந்தன. தானைகள் எல்லாம் அணியணியாய் நடந்தன. செங்குட்டுவன் தான் வழிபடும் தெய்வமான சிவனைத் தலையார வணங்கித் தன் பட்டத்து யானைமீதேறினன். அப்பொழுது சிலர் சேரனாட்டிலுள்ள ஆடக மாடத்தில் அறிதுயில் கொள்ளும் திருமாலுக்கு அர்ச்சித்த செழுமலர்களைச் செங்குட்டுவன் முன்பு கொடுத்தனர்.

சிவனையன்றிப் பிறதெய்வத்தை முழுமுதற்கடவுளாக வணங்காத சீரிய சைவனான அச்செங்குட்டுவன் அத்திருமால் பிரசாதத்தைத் தன் தலையில் அணியாது தோள்மேல் அணிந்து, தனது வடநாட்டுச் செலவைத் தொடங்கினான். யானைமேற் செல்லும் அவன் ஐராவதத்தின் மேற்செல்லும் இந்திரனபோற் காட்சியளித்தான். அவனோடு செல்லும் படைகள் தமிழ்நாடு முழுவதுமே செல்வதுபோல் பரந்து நிரந்து தரை நெளிய நடந்தன.

## மாதவிபாடிய கானற்பாட்டு கனகவிசயர்தம் முடித்தலை நெரித்தது

வீரமன்னனான சேரன் செங்குட்டுவன் வடநாடு நோக்கி வருகின்றான் என்பதை அறிந்த மன்னர் பலா அவன் செல்லும் வழியில் அவனை எதிர்கொண்டு வரவேற்றனர். அவர்களுள் நூற்றுவர் கன்னர் என்னும் ஒரு கூட்டத்தார் செங்குட்டுவனிடத்துத் தூதனுப்பி, கண்ணகிக்குக் கற்கொண்டு வருதற் பொருட்டுச் செங்குட்டுவன் வடநாடு செல்லும் சிரமங்கொள்ள வேண்டியதில்லை, என்றும் தாமே அக்கல்லை இமயத்திலிருந்து கொணர்ந்து சேரனிடம் சேர்ப்பார்கள் என்றும் தெரிவித்தார்கள். அதனைக் கேட்ட செங்குட்டுவன் மனமகிழ்ந்து தான் வடநாடு

செல்வது தமிழ்ப்படையின் ஆற்றலே கனகன், விசயன் முதலான வடநாட்டு அரசற்குக் காட்டு தற்பொருட்டே என்று கூறி, தானும் தன் பரிவாரங்களும் கங்கையைக் கடத்தற்கு வேண்டியவற்றை நிறைவேற்றுமாறு நூற்றுவர் கன்னர்க்குச் சொல்லியனுப்பினான்.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டுக்கு வந்துள்ளான் என்பதை அறிந்த கனகனும் விசயனும் வேறு பல அரசர்களைத் துணையாகக் கொண்டு போருக்கெழுந்தனர். யானைக்கூட்டத்தைக் கண்ட சிங்கம்போலச் செங்குட்டுவன் சீறி எழுந்தான். போரும்வீரமும் சேரமன்னர்களின் முதுசொம் அல்லவா? வட நாட்டரசன்படையோ உண்மையை ஆராயாது வந்தபடை; தமிழ் மன்னர்களின் தகுதியை எண்ணமல் எழுந்த படைதானே. சேரன் அத்தகைய வடவ[illegible]படையைத் தாக்கி வாகைசூட நாழிகை பல கழியவில்லை. ஆதிநாளில் நடந்த தேவாசுர யுத்தம் முடிவுற பதினெட்டு ஆண்டுகள் வேண்டியிருந்தன. இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதத்தில் முடிவுற்றது. பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளில் நிகழ்ந்தது. செங்குட்டுவன் கனகவிசயரைப் பதினெட்டு நாழிகையில் புறங்கண்டான். சேரன் செய்த போருக்கு ஆற்ருத கனகனும் விசயனும் அவ்விருவரைச் சார்ந்தோரும் மாறுவேடம் தாங்கி ஓடத் தலைப்பட்ட

னர். சிலர் காவியுடை தரித்தும், சிலர் நீற்றினைப் பரவப் பூசியும், சிலர் யாழ், குழல் முதலிய இசைக் கருவிகளைத் தாங்கியும், மற்றும் சிலர் மாயவித்தை காட்டுவோர் வேடம் தாங்கியும் போர்க்களத்தினை விட்டகல்தலைக் கண்ட சேர மன்னன், அவருள் கனகனையும் விசயனையும் தப்பிச் செல்லாதவாறு பிடித்துவரச் செய்தான். பின்னர், செங்குட்டுவன் இமயத்தை அடைந்து கண்ணகியின் உருச் சமைத்தற்குரிய கல்லைத் தெரிந்தெடுத்து, அதனைக் கனகன் விசயன் ஆகிய இருவரது தலையில் சுமத்தி, கங்கையை அடைந்து அக்கல்லை நீராட்டுவித்தான். கங்கைக் கரையை அடைந்த தமிழ் மன்னன் தங்குவதற்கு, அங்குள்ள மன்னர்களால் ஓர் பாடிவீடு ஒரு பெரிய நகரமேபோல எல்லாவிதமான இன்ப சாதனங்களும் நிரப்பப்பெற்றது, அதன் கண் இனிது வீற்றிருந்த செங்குட்டுவன், தன் படை வீரர்களில் யார்யார்சிறந்தமுறையில்போர்புரிந்தார்களோ அன்னார்க்கெல்லாம் பொன்னாற் செய்த வெற்றிப் பரிசினை அளித்து மகிழ்வித்தான்.

சேரன் இவ்வாறு போர் வென்று, கண்ணகிக்கு வேண்டும் கல்லெடுத்து, கங்கையில் நீராட்டி இனிது தங்கியிருக்கும் வேளையில், "சேரன் வாழ்க, தீரன் வாழ்க, நாவலந் தீவகம் முழுவதும் போற்றும் காவலன் வாழ்க" என்ற தமிழ்க்குரல் தென் காற்றோடு வந்து அவன் செவியில் புகுந்தது. தன்னை இவ்வாறு வடநாட்

டில் வந்தும் வாழ்த்தும் தமிழ்ச் சான்றோன் யார் என்று ஆவலோடு பார்த்திருக்கையில், "வாழ்க எங்கோ! மாதவி மடந்தை கானற்பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது!" என்று கூறியவாறு மாடலன் என்னும் மறையோன் சேரன் முன் வந்து வணங்கிநின்றான். கங்கையில் நீராடக்கருதி அவன் தமிழ்நாட்டிலிருந்து அங்குவந்தவன். அவன் வடநாட்டில் வாகை சூடிய சேரனுக்குத் தமிழ் நாட்டில் நிகழ்ந்த செய்திகளை எல்லாம் தெரிவித்தான். கோவலன் இறந்தமை கேட்ட அவன் தந்தை துறவுபூண்டதும், அவன் தாய் இறந்தமையும், அவ்வாறே கண்ணகியின் தந்தை துறந்தமையும் தாய் இறந்தமையும், மாதவி தான் துறவு பூண்டதோடமையாது தன் மகளாகிய மணிமேகலையைத் துறவு நெறியில் சேர்த்தமையும், மதுரையில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் இடமளித்த மாதரி என்னும் இடைய முதுமகள் தான் அடைக்கலமளித்த கோவலனுக்கும் கண்ணகிக்கும் உற்ற செய்தியைக் கேட்டுநெருப்பில்வீழ்ந்திறந்தமையும், பாண்டிய மன்னனுக்கு நேர்ந்த பழியையும் அவன் இறந்தமையையும் கண்ணகியின் துயரையும் கேட்ட வெற்றிவேற்செழியன் என்பான் தன் நகராகிய கொற்கையில் ஆயிரம் பொற்கொல்லரைப் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குப் பலியிட்டதும் ஆகிய பலவேறு தமிழ்நாட்டுச் செய்தி

களையும் செங்குட்டுவன் மாடலன் வாயிலாகக் கேட்டறிந்தான். பின்னர் செங்குட்டுவன் தன்னூற் சிறைப் பிடிக்கப்பட்ட கனகவிசயரை ஏனைத்தமிழ் மன்னராகிய சோழனுக்கும் பாண்டியனுக்கும் கூட்டிச்சென்று காட்டுமாறு தூதரிடம் கூறி, தான் தன் பரிவாரங்களுடன் வடநாட்டை விட்டு நீங்கி வஞ்சிமாநகரம் வந்து சேர்ந்தான்.

செங்குட்டுவன் வடநாட்டரசர்களது இகழ்ச்சிச் சொல்லைக் கேட்டுப் பொறுக்காத இயல்பும், தமிழர்களைப் பழித்தது தன்னைப் பழித்ததெனக் கருதிய தகைமைசான்ற மானமும், அவன் வடநாட்டில் எளிதில் ஆற்றிய போர்த்திறனும் ஆகிய எல்லாம் தமிழர்களாலும் தமிழ்ப்புலவர்களாலும் ஒருங்கு உயர்வாகப் பாராட்டத்தக்க பண்புகளேயாகும். இப்பண்புகளையெல்லாம் கற்போர் நெஞ்சம் களிக்கும் வகையில் எடுத்துரைத்தஇளங்கோவடிகள், சேரன் வடநாட்டரசரோடு ஆற்றிய போரில் ஏற்பட்ட சிறுமை ஒன்றினையும் தெரியத்தந்துள்ளார். சேரன் செங்குட்டுவன் தான் சிறைப்பிடித்த கனகவிசயரைப் பாண்டிய சோழமன்னர்க்குக்காட்டிவருமாறுநீலன் என்னும் படைத்தலைவனிடத்தில் ஏவியிருந்தான். அவன் அவ்வாறே அவ்விருவர்களையும் அழைத்துச் சென்று சோழன் பேரவையை அடைந்தபோது அத்

தமிழ் மன்னன் செங்குட்டுவனின் வீரத்தைக் கண்டு வியந்தானல்லன். ''வாளும் குடையும் மறக்களத் தொழித்துக், கொல்லாக் கோலத்து உயிர்உய்ந்தோரை, வெல்போர்க்கோடல் வெற்றம் அன்று'' என்று சோழன் கூறியது செங்குட்டுவன் செய்த பழியை அம்பலப்படுத்தியது. அவ்வாறே பாண்டிய மன்னனும் ஆரியமன்னரைக் கண்டதும் ''சேரனின் வெற்றி புதுமையாயிருக்கிறதே!'' என எள்ளியுரைத்தான். தமிழர்கள் வீரத்தில் மற்றைநாட்டு மன்னர் எவரைக் காட்டிலும் சிறந்து விளங்கியவர்கள். பகைவனோடு ஆற்றும் போர்ச் செயலிலாயினும் பார்ப்போர் அஞ்சும் மறச்செயலிலாயினும் எச்செயலிலும் அறத்தையே குறிக்கோளாகச் கொண்டவர் சேர சோழ பாண்டிய மன்னர்கள்! அத்தகைய அறநெறி பிழையா முடிமன்னர்கள் தம்மோடு போர்செய்ய இயலாது புறங்காட்டிய பகைவரைச்சிறைப்பிடிக்கக் கனவிலும் கருதார். புறங்காட்டியவன் மீது அம்பு விடுத்தலைப் போலவே தன்னுயிரைக் காக்கக் கருதித் தப்பி ஓடும் அவனைச் சிறைப்பிடித்தல் ஒரு வெற்றியாகக் கருதப்படாது, இழிந்த செயலாகவே எண்ணப்படும். சேரன் செங்குட்டுவன் ஒரு பெருவீரன் என்பதில் ஐயமில்லை எனினும் அவனும் சாதாரண மக்களுள் ஒருவனே. ஒப்பாரும் மிக்காரும் இல்லாது உயர்ந்த குணத்தையுடையவனெனினும் முக்குண வசத்தால் முறை திறம்

புதல், அரிதாய் அவனிடத்திலும் உண்டு தன்னைப் பழித்தவர்களைப் பொறுத்து விடுமியல்புடைய சேரன் தமிழரைப் பழித்த கனகவிசயர் மீது உணர்ச்சி பொங்கத்தாக்கி, அவ்விருவர் இவர் என ஏனைய தமிழ் மன்னர்க்குக் காட்டப் பிடித்துவந்த செயல், அவனது மான உணர்ச்சியின் மாண்பினைக் காட்டுவதாயினும் மறத்தில் சிறியதோர் இழுக்கை விளைத்துவிட்டது. இன்பம், துன்பம், வீரம் என்னும் பண்புகளை முறையே புகார்க் காண்டத்திலும் மதுரைக் காண்டத்திலும் வஞ்சிக காண்டத்திலும் நுட்பமாய் விரித்துப்பேசிய இளங்கோவடிகள் வீரத்தின் விழுமிய பண்புகளைத் தமது நூலின் இறுதிக் காண்டத்தில் விளங்கப் பாடியுள்ளார். எனவே, அவர், தம் தமையனின் வீரத்தைப் பாடாது தமிழ்மக்களின் அறனிழுக்கா மறத்தினைப் பாடி[illegible] என்று கொள்வதே தக்கதாகும்.

## வாழ்த்தும் வரமும்

சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கொண்டுவந்த கல்லில் பத்தினித் தெய்வத்தின் உருவம் அமைப்பித்தான். சிற்பநூல் வல்லாரைக் கொண்டு சிறந்ததோர் கோயில் நிருமித்தான். நல்லதொரு நாளிலே பிரதிட்டை செய்யப்பட்டது. செங்குட்டுவன் அவ்வளவிலமையாது பத்தினித் தெய்வத்திற்கு அணியத்தகும்

பொன்னாபரணங்களும் இரத்தினாபரணங்களும் அளித்ததோடன்றி நாள் தோறும் வழிபாடு குறைவின்றி நடத்தற்கு வேண்டும் பொருள்களும் விளைநிலங்களும் கொடுத்தான். கண்ணகி கோயிலில் நாட்பூசையும் விழாக்களும் சிறப்புற நடைபெறலாயின.

காவிரிப்பூம் பட்டினத்தில் கண்ணகிக்குத் தோழியாயிருந்த தேவந்திஎன்னும் பார்ப்பனப் பெண்ணும், செவிலித்தாயும், அடித்தோழியும், மதுரையிலிருந்த இடைய முதுமகளான மாதரியின் மகளாகிய ஐயையும் ஆகிய நால்வரும் கண்ணகியைக் காணப் புறப்பட்டு வையைக் கரைவழியே சேரநாட்டுக்கு வந்து கண்ணகியின் கோயிலுள் புக்கனர். தங்களது அன்பிற்குரியாளாய்த் தங்களோடு வாழ்ந்த கண்ணகி தங்களுக்கு ஒரு வார்த்தையேனும் கூறாது கணவனோடு சேர்ந்துகாடும் நாடும்கடந்து மதுரையை அடைந்து, அங்கு நிகழாத துன்பம் நிகழப் பெற்று, ஈற்றில் சேரநாட்டையடைந்து தெய்வமாய் நின்றமையைக் கண்டு, அவர்கள் விம்மிதமெய்தினர், சிறிது காலத்திற்கு முன் தம்மைப் போல் ஒரு மானிடமகளாய்த் தம்மைப்போல் உண்டும் உடுத்தும் தம்மோடுதானும் ஒருத்தியாய் வாழ்ந்த கண்ணகி, சேரநாட்டில் மன்னனால் கோயிலில் இருத்தி வழிபாடும் சிறப்பும் செய்யப்படுதலைக் கண்டு அப்பெண்கள் அற்புத

முற்றனர். மானிடப் பெண்ணாகி மாநாய்கன் மகளாகியிருந்த காலத்தில் தம்மோடு அகங் கனிந்து முகம் மலர்ந்தும் உரையாடியும் மகிழ் வித்த அக்கண்ணகி, சேய்மையிலிருந்து தேடி வந்த தங்களோடு வாய் திறந்து இன்மொழி கூறுது வாளாநிற்றலைக் கண்டு, அவர்கள் அவ ளோடு தமக்குள்ள பழைய உறவை நினைவூட்டு வார் போல ஆசையோடு பேசினர்.

"செய்தவம் இல்லாதேன் தீக்கனாக் கேட்டநாள்
எய்த உணராதிருந்தேன் மற்று என் செய்தேன்
மொய்குழல் மங்கை, முலைப் பூசல் கேட்டநாள்
அவ்வையுயிர் வீவும் கேட்டாயோ தோழி
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழி''

என்று தேவந்தி அரற்றினாள். இவ்வாறு செவி லித்தாயும், அடித்தோழியும் முறையே மாசாத் துவான் மாநாய்கன் ஆகியோரது துறவினையும், மாதவி மணிமேகலையாகியோரது துறவினையும், கண்ணகிக்குக் கூறினர்.

பின்னர், தேவந்தி தன் பக்கத்தே நின்ற ஐயையைக் கண்ணகிக்குக் காட்டி மாதவியின் மரணத்தையும் ஐயை மணமாகாது இருத்தலை யும் அறியச் செய்தாள். அவ்வேளையில் அங்கு நின்ற செங்குட்டுவன் ஓர் அற்புதங் கண்டான். பொற்சிலம்பும் மேகலையும் பூண்டு, விளங்கும் வயிரத்தோடணிந்து, மின்னற்கொடிதோன்றிய

தென்னுமாறு வானத்திலே கண்ணகி காட்சியளித்தாள். அத் தெய்வம் செங்குட்டுவனையும் அங்குக்கூடியிருந்த தன்முன்னைத்தோழியர் முதலானோரையும் பார்த்து அருள் மொழியால் அகமகிழ்வித்தது. "பாண்டியன் நெடுஞ்செழியன் குற்றமற்றவன். அவன் இந்திரனுக்கு இனிய விருந்தாளியாயினன். அப்பாண்டியன் செய்கையால் யானும் தேவஉருப் பெற்றமையால் அவனுக்கு யான் மகளாயினேன். முருகப்பெருமானுக்குரிய திருச்செங்கோடு என்னும் மலையில் என் அருள் விளையாடல் நிகழும். தோழியீர் எல்லீரும் அங்கு வாருங்கள்." இந்தத் தெய்வக்குரலைச் செவிமடுத்தவராய் அங்கு நின்ற மங்கையரெல்லாம் பத்தினித் தெய்வத்தின் அருளை வியந்து வாழ்த்துப் பாடியும், அம்மானை இசைத்தும், ஊசல் பாடியும், வள்ளைபாடி மகிழ்ந்தும் துதித்தனர்.

சேரன் செங்குட்டுவன் அங்கு நிகழ்ந்த செய்திகளையெல்லாம் கண்டும் கேட்டும் அற்புதமெய்தியிருக்கையில் தேவந்தியினிடத்தே ஒரு தெய்வம் ஆவேசித்தது. தேவந்தியை முன்பு மணந்து விட்டு நீங்கியதான சாத்தன் என்ற தெய்வம் அங்குநின்றோர் கேட்பத் தேவந்தியினிடமாக நின்று பின்வருமாறு கூறியது. "இங்குக் கூடியுள்ள மக்களிடையே மூன்று சிறுமியர் உள்ளனர். அவர்களில் இருவர் இவ் வஞ்சிமாநகரத்திலுள்ள அரட்டன் செட்டியின் இரட்டை

மகளிர். மற்றைச்சிறுமி திருவனந்தபுரத்திலுள்ள திருமாலுக்குப் பணிபுரியும் சேடக்குடும்பி என்னும் அந்தணனின் மகள். மாடல் மறையோனிடத்தில் யான் கொடுத்த நீரை இம் மூவர்மேலும் தெளித்தால் இச்சிறுமியர் தமது பழம் பிறப்பினை உணர்வர். இதனைக் கேட்ட செங்குட்டுவன் தெய்வம் கூறிய செய்திபற்றி மாடலனை வினவினன். அம்மாடலன் தன்னிடத்தில் ஒரு பார்ப்பன இளைஞன் வந்து நீர் நிறைந்த கரகமொன்றினைத் தந்தமையைக்கூறினன். அத்துடன், சாத்தன் என்ற தெய்வம் முன்பு தேவந்திகையை மணந்தமை, பின் அவளைவிட்டு நீங்கியமை ஆகிய வரலாறுகளையும் எடுத்துரைத்தான். அதனைக்கேட்ட சேரமன்னன் தெய்வம் கூறிய செய்தியின் உண்மையை அறியுமுகமாக அச்சிறுமியர்மீது நீர் தெளிக்குமாறு மாடலனுக்குப் பணித்தான். மாடலன் அவ்வாறு நீர் தெளித்ததும், அரட்டன் செட்டியின் மகளிருள் ஒருத்தி, கண்ணகி பிரிவால் முற்பிறப்பில் தான் உற்ற துயரையும் கூறிப் புலம்பினள். மற்றச் சிறுமி தன் முன்னைப்பிறப்பினை உணர்ந்து, தான் கோவலனின் தாயென்பதையும், தான் கோவலன் கண்ணகி என்னும் இருவரது பிரிவால் முன்புற்ற துன்பத்தையும் உரைத்துப் புலம்பினள். மூன்றாவது பெண்ணான அந்தணச் சிறுமி முன்னைய பிறவியில் தான்மாதரி என்பதையும் தான் அடைக்கலமளித்த கண்ணகிக்கு விளைந்த கொடு

மையைக் கேட்டு வருந்திய செய்தியையும் சொல்லிப் புலம்பினள்.

இவை யெல்லாவற்றையும் கேட்டிருந்த சேரமன்னனுக்கு உள்ளம் விம்மிதமுற்றது. தன் முன்னேர்களாயினும், தன்னையொத்த ஏனைய மன்னர்களாயினும் கண்டும் கேட்டும் அறியாத புதியதோர் அனுபவத்தைப் பெற்றமை குறித்து உள்ளம் பூரித்தான். அந்நிலையில் மாடலன் மன்னனைப் பார்த்து, அறத்தின் மேன்மையையும் அதனுல் ஒருவர் மறுமையில் எய்தும் பெரும் பேற்றினையும் விளக்கிக் கூறினுன். கண்ணகியும் கோவலனும் மண்ணக வாழ்வில் முறையே தவமும், தருமமும் புரிந்தனர். தவம் புரிந்த கண்ணகி தரையிலுள்ளோர்க்கு அருள் புரியும் தெய்வமானுள். தருமம் புரிந்த கோவலன் அத்தருமப் பயனை-இன்பத்தை நுகர்தற்குரிய வகையில் தேவஉருப் பெற்ருன். கண்ணகியின் தாயும், கோவலனின் தாயும், மாதரியும் அத்தகைய பேரறமோ பெருந்தவமோ செய்யாமையால் மீண்டும் மக்கட் பிறப்பினை எடுத்தனர். இவ்விதம் தவத்தின் பெருமையையும், தர்மத்தின் சிறப்பினையும் கண்கூடாகக் காணும் பேறு பெற்ருன் செங்குட்டுவன் மாத்திரம் அல்லன். அங்குக் கூடியிருந்த குடகநாட்டு வேந்தரும், மாளுவநாட்டு மன்னரும், கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும் மற்றும் பலருமாவர். செங்குட்டுவனுக்குப் பத்தினிக் கடவுள் அருள் புரிந்

தமை போலவே தங்கள்நாட்டிலும் எழுந்தருளி வரம் தந்து வாழ்வழிக்க வேண்டுமென்று அம் மன்னர்கள் பத்தினித் தெய்வத்தை வேண்டி னர். அவர்களது அன்பு வேண்டுதல் உடனே அருளப்பட்டது. அனைவரும் கேட்ப, "தந்தேன் வரம்" என்ற அருட்குரல் வானத்தில் எழுந்தது.

மக்கள் எல்லோரும் பிறப்பினால் ஒரு தன் மையரே ஆயினும் பின்செய்யும் செயலினால் உயர்வடைவோரும் உளர். சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் மக்கள் செய்தி கூறப்படுகின் றது. திருமணம், இல்லறம், இன்பவாழ்வு என மக்கள் வாழ்வு அமைகின்றது. மக்களுக்குள்ள மங்கலச் செய்திகளுடன் தொடங்கிய சிலம்பு தெய்வச் செயலுடன் நிறைவுறுகின்றது. வரந் தரு காதை சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதை. நாடகங்களை மேனாட்டார் துன்பியல், இன்பியல் என இருபிரிவில் அடக்குவர். துன்ப முடிவினை யுடையது துன்பியல். இன்பமுடிவினை யுடையது இன்பியல். தமிழில் எழுந்த இச்சிலம்பு துன்பிய தும் ஆகாது. இன்பியலும் ஆகாது. அவ்விரண் டுக்கும் அப்பாலாய் நின்ற தெய்விகமாய் நிறை கின்றது. இது சிலம்பின் தனிச் சிறப்பு மட்டுமின்றித் தமிழர் வாழ்வுக்கே உரிய தனிச் சிறப்புமாகும்.

# சிலம்பிற் காணும் இசைச் சிறப்பு.

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை இசையோடு கலந்து விளங்கிய இயல்பினதா யிருந்தது. அம்மக்கள் எத்திறத்தவராயினும் எத்தொழிலினராயினும் அவர் தம் வாழ்விலும் தாழ்விலும், இன்பிலும் துன்பிலும் இன்னிசை சிறப்பான இடம் பெற்றது. அந்த இசையா னது அவர்களது இன்பசாதனமாய் மட்டும் அமையாது இன்றியமையாத எழிற்கலையாயும் திகழ்ந்தது. கலைஞர்களுக்கு மட்டும் உரிமைப் பொருளாகாமல் பாமரமக்களின் நாவினிலும் அது பயின்று வழங்கியது. மன்னர் அதனை மதித்துக் காத்தனர். அதனில் வல்ல கலைஞர்க்கு அவைக்களத்தில் முதலிடம் கொடுத்தனர்! இக் காலத்திற்போலன்றி அக்காலத்தில் இசைக்கலை மிக விரிந்த அளவில் ஆராயப்பட்டது. வட நாட்டில் வழங்கிய இசைக்கலைக்கு வேறுபட்ட தாய், தமிழ்நாட்டு இசைக்கலை தனித்தன்மை பெற்று மிளிர்ந்தது. சிற்பம் முதலிய பிற கலை களெல்லாம் இருப்ப, தமிழ்மக்கள் இசை நாட கம் என்ற இவற்றின்மேல் வைத்த தனிவிருப் பம் காரணமாக இவற்றைத் தனியாக எடுத் தாராய்ந்து இலக்கண இலக்கிய நூல்கள் எண் ணிறந்தன இயற்றி, இயல் இசை நாடகம் என முத்தமிழாக வழங்கினர். பழந்தமிழ் மக் களது பண்பட்ட வாழ்க்கையின் ஒப்பற்ற படப்

பிடிப்பாக முதற்கண் காப்பியம் பாடிய இளங்கோ அடிகள் தமது காப்பியத்தில் அம் மக்களது அன்றாட வாழ்விற் கலந்து நின்ற இசைக்கலையினையும் ஆங்காங்கு எடுத்துக்காட்டிச் சென்றுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களுள்ளன. அவற்றில் முதற் கண்ணதாகிய புகார்க்காண்டம் சோழ மன்னனின் சிறப்புக்களையும் சோழநாட்டின் மேம்பாட்டினையும் விரித்துக்கூறுகின்றது. அவ்வாறே மதுரைக் காண்டம் வஞ்சிக்காண்டம் என்பனவும் முறையே பாண்டிய மன்னனதும் அவன் நாட்டினதும் பெருமைகளையும், சேரமன்னனதும் அவன் நாட்டினதும் மாண்புகளையும் எடுத்துக் கா[illegible]கின்றன. இளங்கோவடிகள் இவ்வாறு தாம் பாடிய நூலில் முடியுடைமூவேந்தர்க்கும் முறைபிறழாது இடமளித்தது போல முத்தமிழ்த்துறைகளையும் வித்தகமாக வைத்துள்ளார். புகார்க்காண்டத்தில் அறனும் மறமும் முதலாகிய இயற்றமிழும், திணை நிலைவரி, இணைநிலைவரி முதலாகிய இசைத்தமிழும், அரங்கும் ஆடலும் பாரதி விருத்தியும் முதலாகிய நாடகத்தமிழும் இருத்தல் போலவே, மதுரைக் காண்டத்தில் அறனும் மறனும் முதலாகிய இயலும், வேட்டுவவரி முதலாகிய இசையும், ஆரபடிசாத்துவதி முதலாகிய நாடகமும், வஞ்

சிக்காண்டத்தில் சேர மன்னனது அறனும் மற னும் ஆற்றலும் என்னும் இயலும், வாழ்த்து முத லாகிய இசையும், குரவை முதலாகிய நாடக மும் ஒத்தவகையில் அமைந்திருத்தல் உணரத் தக்கதாகும். எனவே ஆசிரியர், கற்பின் செல்வி யாகிய கண்ணகியின் பொற்பமைந்த வாழ்க் கைச் செய்தியை அற்புதமான காப்பியமாகப் புனைந்து, அதனிடை மூன்று உண்மைகளை—அர சியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும் என்பவற்றை— உள்ளுறுத்தி உணரவைத்ததோடல்லாமல், தம் நூலில் முத்தமிழும் ஒத்து முழங்கவும் வேண் டியவாறு இடமளித்தார். தமிழில் எழுந்த பிற் காலக் காப்பியங்களெல்லாம் இயற்றமிழினையே மொழிவனவாய் உள்ளன. சிலப்பதிகாரம் ஒன்றே, தன்னை ஒப்பது பிறிதின்றி, முத்தமிழ்க் காப்பியமாய் முதன்மைபெற்றுத் திகழ்கின்றது. தொன்மைமிக்க இந்நூல் அவ்வாறு முத்தமி ழினையும் மொழியும் இயல்பினதாய்இருத்தலால் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் கலைச்சிறப்போடு வாழ்ந்த நம் மூதாதையரின் இசை நாடகம் என்னும் இனிய கலைகளை இன்று நாம் அறிய அருந்துணை புரியும் சாதனமாயும் திகழ்கின்றது. சிலப்பதிகாரத்தின் துணைக்கொண்டு பண்டைக் கால இசையினதும் நாடகத்தினதும் வளர்ச்சி யையும் வனப்பினையும் அறிதலோடு, பிற்காலத்

தில் அவை எவ்வாறு வேறுபட்டும் மாறுபட்டும் வழங்கலாயின என்பதையும் நாம் உணர முடியும். அவ்வாறு நாம் பழந்தமிழிசையை அறிவது நமக்குப் பெருமை தருவதாயும் இக்காலத்தில் அதனை நன்கு வளர்க்க ஊக்கம் தருவதாயும் இருக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்களிலும் காணப்படும் இசையினை இரண்டு வகையில் அடக்கலாம். ஒன்று தனிக் கலையாக அமைந்த இசை எனவும் மற்றையது நாடகம் அல்லது கூத்துடன் அமைந்த இசை எனவும் அவற்றைக் கூறுபடுத்தலாம். இப்பாகுபாடும் ஒருவகையில் இசைக்கலையின் இயல்பினையே புலப்படுத்துகின்றது. அஃதாவது மக்கள் வாழ்க்கையில் இசையானது தனித்தும் ஆளப்பட்டது; நாடகக்கலையுடன் சேர்த்தும் வளர்க்கப்பட்டது என்பதாகும். இவ்வாறு தமிழிசை இருதுறையில் வழங்கப்படினும் அதன் இலக்கணங்களும் அதனைப்பயின்றோர் இலக்கணக்களும் வேறுபடுதலில்லை. தமிழில் இசைக்கலையானது தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என ஐவகைக்கருவிகளின் துணைகொண்டு விருத்திசெய்து, விரிந்து பரந்த நுண்கலையாக மேம்படுத்தப்பட்டது. இளங்கோவடிகள் ஏற்ற இடங்களில் இசைக்

கலைஞர்களின் இலக்கணத்தினையும் அக்கலையின் அரிய செய்திகளையும் அழகாகவும் விரிவாகவும் நமக்குக் காட்டுகின்றார்.

கலை என்று கூறப்படுவன எல்லாம் செயலால் விளக்கம் பெறுவனவே. இசைக்கலைஞன் என்பவனும் இசைக்கலையைக் கற்று அறிந்த அளவில் நில்லாமல், தான் கற்றதனைச் செயலில் திறம்பட விளக்கிக்காட்டுதலிலும் வல்லனாதல் வேண்டும், அவ்வல்லமை உடையவனே இசைக்கலைஞன் என்ற பெயருக்குத் தகுதியுடையவன். சிலம்பில் காணும் இசையாசிரியன் இசையின் நுட்பங்கள் எல்லாவற்றையும் அறிந்ததோடு மட்டுமன்றி அந்நுட்பச் செய்திகளைச் செயலில் காட்டவும் வல்லவன். தன்மிடற்றினால் இனிமையுறப் பாடவும், யாழ், குழல், மத்தளம் என்னும் கருவிகளை நன்கு இசைக்கவும் தேர்ச்சிபெற்றவன். அகக்கூத்துப் புறக்கூத்து முதலிய கூத்துவகைகளில் திறமையுற்றவன். பாடல்களுக்கு அவ்வவற்றுக்கேற்ற இசையை அமைக்கப் பயின்றவன். தமிழ்மொழி மட்டுமன்றிப் பிறபிற திசைமொழிகளையும் பெருகக் கற்று, அவற்றிலுள்ள இசைப்பாடல்களையும் அவற்றின் மரபு தவறாமல் பாடத்தெரிந்தவன். இவ்வாறு பண்டைக்கால இசையாசிரியன் இசையோடு தொடர்புடைய பலகலைகளையும் கற்று, பரந்த நூற்கேள்வியும் உடையவனாய் இருந்தான்.

இசையாசிரியன் மேற்கூறியவாறு இசை பற்றிய எல்லாத் துறைகளிலும் ஓரளவு வல்லவனாய் இருப்ப, இசைக்கருவிகளில் ஒவ்வொன்றில் மாத்திரம் மிக்க தேர்ச்சிபெற்ற கலைஞர்களும் அக்காலத்தில் திகழ்ந்தனர். ஐவகைக் கருவிகளுள் தோற்கருவி என்பது பலவகைப் பட்டதாயிருந்தது. அகமுழவு, புறமுழவு, அகப்புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமைமுழவு, நாள்முழவு, காலைமுழவு என அது எழுவகைப் படும். மத்தளம், பேரிகை முதலாய உத்தமமான தோற்கருவிகள் அகமுழவு எனவும், தண்ணுமை முதலான மத்திமமான கருவிகள் அகப்புறமுழவு எனவும், கணப்பறை முதலான அதமமான கருவிகள் புறமுழவு எனவும், சாப்பறை புறப்புறமுழவு எனவும், வீரமுரசு பண்ணமை முழவு எனவும், காலத்தை உணர்த்தும் நாழிகைப் பறை நாண்முழவு எனவும், துடி என்பது காலை முழவு எனவும் பெயர் பெறும். தோற்கருவிகள் எல்லாம் காலப்பிரமாணத்தின் வழி நின்று இசைக்கப்படுவன, அதாவது தாளம் தூக்கு என்னுமிரண்டின் நெறிபிறழாமையை அவற்றின் இசை இலக்கணமாகவுடையது. எனவே, மத்தளம் முதலிய கருவிகளை இசைப்பவன் தாளம், தூக்கு என்பன கற்றுவல்லனாய் இருத்தல் வேண்டும். சிலப்பதிகாரத்திற் கூறப்படும் தண்ணுமை யாசிரியன் மேற்கூறியவற்றோடு கூத்து, பாட்டு என்பனவும். இயற்சொல்,

திரிசொல், திசைச்சொல் வடசொல் என்னும் நால்வகைச் சொல்லும் தேர்ந்தவனாய்க் காணப் படுகின்றான். ஓர் இசை நிகழ்ச்சியில் தண்ணுமை இசைப்போனுடைய திறமையே அந்நிகழ்ச்சி யின் சிறப்புக்குக்காரணமாகின்றது. யாழொலி குழலொலி, கண்டத்தொலி என்ற மூன்றன் தன் மைக்கும் இசைய தண்ணுமைஇசை அமைய வேண்டும். அன்றியும் பிறகருவிகளின் குறையை நிரப்புதலும், மிகுதியை அடக்குதலும் தண் ணுமை இசைப்போனது கலைத்திறனிலேயே தங்கியுள்ளன,

இசைக் கருவிகளில் இனிமை மிகுந்தது குழ லிசை: குழலானது பழங்காலத்தில் மூங்கில், சந் தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என் னுமிவற்றுள் ஒன்றினால் செய்யப்[illegible]து. அது இருபது அங்குல நீளமும், நாலரை அங்குலச்சுற் றும் கொண்டதாய், இடப்பக்கவாய் வெண் கலத்தால் அடைக்கப்பட்டு, வலப்பக்கவாய் வெளியாக விடப்பட்டு, இடையிலே ஒவ்வோர் அங்குல இடைவெளியுள்ள எட்டுத்துளைகள் அமைந்திருக்கும். அதிலுள்ள ஏழு துளைகள் சரிகமபதநி என்ற ஏழு சுரங்களுக்குரியன வாகும். வேய்ங்குழல் வல்ல கலைஞன் இசை நூற் புலமைமிக்கவனாய், குழலினை இசைக்கும் போது சித்திரப் புணர்ப்பு, வஞ்சனைப் புணர்ப்பு என் னும் இருவகைப் புணர்ப்பும் புணர்க்கவல்லனாய்

ஆரோகண அவரோகண முறைப்படி நூற்று மூன்று பண்ணீர்மைகளையும் காட்ட வல்லனாய் இருப்பன்.

குழலிசையைப் போலவே யாழிசையும் இனிமை வாய்ந்தது. ஆயினும் குழலினைப்பற்றிய செய்தியைக் காட்டினும் யாழினைப்பற்றிய செய்திகளே தமிழ் இலக்கியங்களில் பல படப் பேசப்பட்டுள்ளன. குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்கட்கும் உரிய பண்கள் குறிஞ்சியாழ் மருதயாழ் என யாழ் என்ற சொல்லால் குறிக்கப்படுவதால், குறிஞ்சி நிலம் முதலிய பலவேறு நிலத்து மக்களும் யாழ் என்ற இசைக்கருவியையே மிகவும் பயின்றிருந்தனர் என்பது ஊகிக்கத்தக்கது. பண்டைக் காலத்தில் நான்கு வகையான யாழ்கள் இருந்தன. அவை பேரியாழ், மகரயாழ், சகோட யாழ். செங்கோட்டு யாழ் என்பன, பேரியாழ் இருபத்தொரு நரம்பினையும் மகரயாழ் பத்தொன்பது நரம்பினையும் சகோட யாழ் பதினான்கு நரம்பினையும் செங்கோட்டு யாழ் ஏழு நரம்பினையும் உடையது. யாழில் கோடு, ஆணி, பத்தர், மாடகம், தந்திரி எனப் பல உறுப்புக்கள் உள்ளன. யாழினை இசைப்போன் அவ்யாழில் குரல் துத்தம் முதலிய ஏழு சுரங்களையும் தானம் பிறழாதவாறு கண்டு, செம்பாலை முதலிய ஏழுபாலையினையும் இணைநரம்பு தொடுத்து நிறுத்திக்காட்டி, அதனால் நூற்று

மூன்று பண்களிலும் துறைபோயவனாய், வலிவு, மெலிவு, சமன் என்னும் தானங்களையுடைய இசையின் கூறுபாடுகளுக்கெல்லாம் பண்ணீர்மை குறையாதவாறு அவ்வவற்றுக்குரிய எழுத்துக்களையறிந்து இசைக்க வல்லவனாய் உள்ளவனேயாவன்.

சிலம்பிற்காணும் இசைத்தமிழ்பற்றிய செய்திகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன இசைப்பாடல்களேயாகும். அவ்விசைப்பாடல்களை முன்புகூறியவாறு இருவகைப்படுத்தலாம். ஒன்று தனித்து வருபவை; மற்றையது கூத்தினிடையே வருபவை. இவ்வாறு அவை இருதிறத்தனவாயினும் இயல்பினால் ஒத்ததன்மையனவே. சிலப்பதிகாரத்தில் இசைப்பாடல்க[illegible]சிரியர் அமைத்த முறையை உற்றுநோக்குமிடத்துச் சிறப்பான மூன்று இயல்புகள் அப்பாடல்கள் எல்லாவற்றிலும் அறியக்கிடக்கின்றன. முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது: இசைப்பாடல்களெல்லாம் தமக்கு முன்னாக உரை நடையைக் கொண்டுள்ளன என்பது. இசைப்பாடல்கள் காதையின் முதற்கண் அமைவனவாயினும் இடையில் அமைவனவாயினும் அவையெல்லாம் உரைப்பாட்டு மடையையோ, கட்டுரையையோ முதற்கண் வைத்தே கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, கானல்வரி என்னும் இசைப்பாட்டின்முன்

"சித்திரப்படத்துள் புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து, மைத்தடங்கள் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி... ... ..."

என்று தொடங்கும் கட்டுரை உள்ளது, ஆய்ச்சியர் குரவையில்

'கயல் எழுதிய இமய நெற்றியில் அயலெழுதிய புலியும் வில்லும், நாவலந் தண்பொழில் மன்னர் ஏவல்கேட்ப. . ..."

என்று தொடங்கும் உரைப்பாட்டு முதற்கண் உள்ளது. இவ்வாறு இசைப்பாடல் வருமிடமெல்லாம் உரை நடை முதற்கண் அமைந்திருத்தலால், இயற்றமிழ்ச்செய்யுளால் யாக்கப்படும் காப்பியத்தின்கண் இசைப்பாடல்கள் இடையிடையே அமைக்கப்படுமாயின் அவற்றின்வேற்றுமையைப்புலப்படுத்துமுகமாகஉரைநடையை முதற்கண் வைத்து இசைப்பாடலைப் பின்னர்த் தொடுத்தல் மரபு என்பது ஊகிக்கக் கிடக்கின்றது.

சிலப்பதிகாரத்திற் காணப்படும் இசைப் பாடல்களில் குறிப்பிடத்தக்கவாறு அமைந்த மற்றொரு பண்பும் ஈண்டு நோக்கத்தக்கது. இந் நூலில் கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை என்னுமிவற்றில் இசைப்பாடல்கள் உள்ளன. இவையெல்லாம் ஒரே தன்மையனவாய் ஈற்றிலே அரசனை வாழ்த்தும் வாழ்த்துடன் முடிவுறுகின்றன. ஒரு நாட்

டில் வாழும் மக்கள் இன்பம் பொருளாக வேனும் இறைவனை வழுத்துதல் பொருளாக வேனும், பிறபொருளாகவேனும் இசைப் பாடல்களைப் பாடுமிடத்து, இறுதியிலே தங்கள் நாட்டுமன்னனை வாழ்த்தி முடிப்பது பண்டைக் காலத் தமிழ் மக்களது வழக்கம்போற் காணப் படுகின்றது. சோழநாட்டு மக்களது இசைப் பாடலின் இறுதியில் சோழ மன்னனைப்பற்றிய வாழ்த்தும். பாண்டிய நாட்டு மக்களது பாட லில் பாண்டிய மன்னனைப்பற்றிய வாழ்த்தும், சேரநாட்டு மக்களது பாடலில் சேர மன்னனைப் பற்றிய வாழ்த்தும் அமைந்திருக்கும். முதற் கண்ணதாகிய கானல்வரியில் அவ்வரசவாழ்த்து இசைப்பாடலின் ஓர் உறுப்பாய் அமையாது, கானல்வரியைப் பாடிய காதலர்களின் செய்தி யைக்கூறிமுடிக்கும் போது ஆசிரியர் அந்தக் காதையின் இறுதியிலே கூறிய கூற்றாய் உள்ளது.

"... ... ... ...கோவலன்றான் போனபின்னர்த் தாதவிழ் மலர்ச்சோலை ஓதையாயத் தொலிய விந்துக் கையற்ற நெஞ்சினளாய் வையத்தினுள் புக்குக் காதலனுடனன்றியே மாதவிதன் மனை புக்காள் ஆங்கு,

மாயிரு ஞாலத்தரசு தலைவணக்கும்
சூழி யானைச் சுடர்வாட் செம்பியன்
மாலை வெண் குடைகவிப்ப
ஆழிமால் வரை அகவை யான்எனவே"

என்னும் இந்த இறுதி அடிகளில், 'சோழ மன்னனது குடை சக்கரவாள கிரியையும் தன்னுளகப் படுத்தி நிழல் செய்வதாகுக' என்று மாதவி கூறித் தன்மனை புக்காள் என ஆசிரியர் கூறி முடிக்கின்றார். வேட்டுவ வரியில் அமைந்த இசைப் பாடலில்,

''மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறை யுயர் பொதியிற் பொருப்பன் பிறநாட்டு
கட்சியும் கரந்தையும் பாழ்பட
வெட்சிசூடுக விறல் வெய்யோனே.'' என

பாண்டிய நாட்டு மக்களாகிய வேட்டுவர்கள் கொற்றவையைத் துதிக்கும்போது, தம் நாட்டு மன்னன் பிறர் நாட்டு மன்னரைக் கரந்தைப் போரில் வென்று வெட்சிப் பூவைச் சூடுவானாக என வாழ்த்தி முடிக்கின்றனர். வேட்டுவர்கள் பாண்டிய மன்னனுக்குரிய பிறமேம்பாடுகளைக் குறித்து வாழ்த்தாது தமது தொழிலாகிய பசுக் கவர்தலைச் சுட்டி, அந்தப்போரிலே வெற்றிபெறுவானாக எனவாழ்த்துவது, அவர்களது நிலஇயல் போடும் குல இயல்போடும் ஒத்து விளங்குவது உணரத்தக்கது. பாண்டிய நாட்டிலுள்ள மற்றொரு குடிமக்களாகிய ஆய்ச்சியர்கள் தமது வழிபடு தெய்வமாகிய திருமாலைக்குறித்துக் குரவையாடித் துதிக்குமிடத்து.

"என்று யாம்

கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம்நம்
ஆத்தலைப் பட்டதுயர் தீர்க்க; வேத்தர்
மருள் வைகல் வைகல் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்து
இடிப்படை வானவன் முடித்தலை உடைத்து
தொடித்தோட் தென்னவன் கடிப்பிகுமுரசே'

என, இந்திரனது முடியை உடைத்த பாண்டிய மன்னனது முரசு பகையரசர் திகைக்கத்தக்க' வாறு நாளும் வெற்றியை விளைவிப்பதாகுகஎன. தம்நாட்டு மன்னனை வாழ்த்தி முடிக்கின்றனர். இவ்வாறே, சேரநாட்டு மக்களாகிய குறவர்கள் தமது குரவைக் கூத்தில்,

என்று யாம்

கொண்டுநிலை பாடியாடும் குரவையைக்
கண்டுநம் காதலர் கைவந்தா ரானது
உண்டுமகிழ்ந்து ஆனா வைகலும் வாழியர்
வில்லெழுதிய இமயத்தொடு
கொல்லி யாண்ட குடவர்கோவே" என,

சேரமன்னன் வீரபானத்தை உண்டு மகிழ்ந்து நாடோறும் வாழ்வானாக என்று தம் மன்னனை வாழ்த்தும் வாழ்த்து இறுதியில் அமைந்துள்ளது. ஏனைய வாழ்த்துக்களிற் போலன்றி இவ்வாழ்த்தில் சேரமன்னனது இன்ப நுகர்ச்சியைக் குறித்து வாழ்த்தியமை நோக்கத்தக்கது.

இக்காலத்திலுள்ள இசைப்பாடல்களிற் பல கர்நாடக இசையைத்தழுவி யமைந்தன. வேறு சில,வடநாட்டு இசையைத்தழுவியன. இவற்றில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மூன்றுஉறுப்புக்கள் உள்ளன. இவ்வுறுப்புக்களின்றி வேறு வகையில் அமைந்த பாடல்களும் சில உள்ளன. இவ்விசைப் பாடல்களுக்கும் பண்டைக்காலத்திலே தமிழில் அமைந்த இசைப்பாடலுக்கும் வேறுபாடுகள் பல உள. அவ்வேறுபாட்டினை இலகுவில் நாம் அறியத்தருவன சிலப்பதிகாரத்திற்காணப்படும்இசைப்பாடல்களேயாகும். முற்காலத்தில் வழங்கிய இசைப்பாடல்களில் வரிப்பாட்டு என்பது ஒரு வகை. அந்த வரிப்பாட்டு ஆற்றுவரி, சார்த்துவரி, நிலைவரி, கானல்வரி, தி[illegible]நிலைவரி எனவும், முகமுடைவரி, முகமில்வரி, படை[illegible]னவும் பல்வகையினையுடையது. இப்பெய[illegible]கள் சொல்லமைப்பாலன்றிப் பொருளமைப்பாலே அவற்றுக்கு உண்டாயின. உதாரணமாக, ஆற்றுவரி என்பது, ஆற்றினைப் பற்றிப் பாடிய இசைப்பாட்டு. சார்த்துவரி என்பது, அரசனுடைய பெயரையும் அவனது ஊர்ப் பெயரையும் அமைத்துப் பாடும் இசைப்பாட்டு. கானல்வரி என்பது, கடற்கரைச் சோலையை அமைத்துப்பாடும் இசைப்பாட்டு. சிலப்பதிகாரத்தில் கானல்வரி என்ற தலைப்பினையுடையபகுதியில் மேற்கூறப்பட்ட பல்வகைப் பாடல்களும் வந்துள்ளன. ஆயினும் அவ்வரிப்பாட்டுக்களில்

ஒன்ருகிய 'கானல்வரி'என்ற பெயரையே ஆசிரியர் அந்தக் கதைப்பகுதிக்குப் பெயராக இட்டுள்ளார். இவ்விதமான வரிப் பாட்டுக்களேயன்றி அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி என விளையாட்டுப் பொருளாகிய வரிகளும், வள்ளைப் பாட்டு முதலிய பாடல்களும் வந்துள்ளன. இவ்விசைப் பாடல்கள் இயற்றமிழிலுள்ள அகப் பொருட்டுறைகளையும்—தலைவன் தலைவி தோழி, செவிலி முதலியோர் கூறுவனவாயபொருளையும் —புறப்பொருள் பற்றிய செய்திகளையும், கடவுளிடத்து வைத்த அன்பினையும் பொருளாகக் கொண்டுள்ளன. எனவே அவை ஓசைச் சிறப்பினுல் செவிக்கினியனவாயும், பொருட் சிறப்பினுல் கருந்துக்கினியனவாயும் இருக்கின்[illegible]. சிலப்பதிகாரத்தில் வழங்கி[illegible] பாடல்கள் அக்கால இயற்றமிழ்ப் பாடல்களினின்றும் அதிகம் வேறுபட்டிருக்கவில்லை. இயற்றமிழுக்குரிய நால்வகைப் பாக்களில் கலிப்பாவும், பாவினங்களில் தாழிசையுமே இசைப் பாடலுருக்களுக்குக் கருவியாய் இருந்தன. பிற்காலத்தில் தாழிசையேயன்றித் துறை விருத்தங்களும் இசைப் பாடலாகப் பெரிதும் வழங்கப்பட்டன என்பது தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தப் பாடல்கள், திருப்புகழ் என்பவற்ருல் அறியக் கிடக்கின்றது.

இவ்வெல்லாவற்றையும் நோக்குமிடத்துச் சிலப்பதிகாரகாலத்தில் இசைத்தமிழ்மிக்கசீரும் சிறப்பும்பெற்று மக்களது வாழ்வில் பிரிக்கப் படாத நிலையில் பிணைந்திருந்ததென்பதும், இக் காலத்தில் போலன்றி அக்காலத்தில் அது தமிழ் மக்களது அறிவுத் திறனையும் நுகர்ச்சித் திறனை யும் எடுத்துக் காட்டத்தக்க கண்ணாடி போல் அமைந்திருந்த தென்பதும் அறியத் தக்கனவா யுள்ளன.

***

## சிலம்பிற் காணும் நாடகச் சிறப்பு

பண்டைத் தமிழ் மக்களின் பண்பட்ட [illegible]ாழ்க்கையைச் சித்திரித்துக்காட்டும் சிலப்பதி [illegible]க்தில் ந[illegible]் தமிழைப்பற்றிய செய்திகள் பலப்பல உ[illegible] தமிழ் [illegible]க்கள் அந் நாளில் நாடகத்தினை ஓர் இன்ப சாதனமாக மட்டும் கொள்ளாது, தமது வாழ்க்கையில் அமைந்த இன்றியமையாச் சாதனமாகவும் மதித்துப் போற்றினர், இசைக்கலை எவ்வாறு மக்கள் வாழ்க்கையில் இன்பத்திலும் துன்பத்திலும் இடம்பெற்று நின்றதோ அவ்வாறே நாடகக் கலையும் மக்கள் வாழ்க்கையின் எல்லாத்துறை களிலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தது. மலை நாட்டில்வாழும் மக்கள், தமக்கு ஓர் குறைபாடு ஏற்பட்டதாயின், முருகனுக்குவழிபாடுசெய்து, அம்முருகனை அருச்சிக்கும் வேலனைக் கொண்டு

வெறியாட்டு நிகழ்த்தி, தம் துயர்க்காரணத்தை அறிந்து, அதனைத் தக்கவழியால் நீக்கி இன்பம் காணுவர். முல்லை நிலமக்கள் அவ்வாறே தமக் குற்றதுன்பவேளையில், குரவைக் கூத்தாடித் திரு மாலைத் துதித்து இன்புறுவர். இக்கலையானது ஒரு சாரார்க்கு மட்டுமன்றி, எல்லாமக்களுக்கும் உரியதும் இனியதுமான பொதுச் சொத்தாய் முற்காலத்தில் விளங்கிற்று.

நாடகத் தமிழ் என்பது மிக விரிந்ததும் பல துறைப்பட்டதுமானது. நாடகத் தமிழ் என்றதில் உள்ள நாடகம் என்பது கூத்துக்கள் பலவற்றில் கதை தழுவி வரும் கூத்திற்கு உரிய பெயராகும். அது ஏனைய கூத்துக்களை விடச் சிறந்தமையால் அப்பெயரே தமிழு[illegible]கும் அடை[illegible]ழி யாயிற்று. கூத்துக்[illegible] என இரு வகைப்படும். அகக்கூத்துவேத்தி[illegible]ல் என்றும், புறக்கூத்து பொதுவியல் என்றும் பெயர்பெறும். அரசர் முன்னே ஆடப்படுவது வேத்தியல். ஏனைய இடத்தில் ஆடப்படுவது பொதுவியல். இவை சாந்திக்கூத்து விநோதக்கூத்து என இரண்டு வகைப்படும். சாந்திக்கூத்து சுத்த நிருத்தம், மெய்க்கூத்து, அவிநயக்கூத்து, நாடகம் என நான்கு வகைப்படும், அவற்றுள் சுத்த நிருத்தம் என்பது தாளத்தை ஆதாரமாக உடையது. மெய்க்கூத்து நகை, அழுகை முதலிய மெய்ப் பாட்டினை ஆதாரமாகக் கொண்டது. அவிநயக் கூத்து ஒருபாடலின் பொருளுக்கியைய அவிநயம்

பிடித்து ஆடும் கூத்து. நாடகம் என்பது கதை தழுவிய கூத்து. விநோதக் கூத்தானது குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற் பாவை, வெறியாட்டு என ஏழு வகைப்படும் என்பர். இவற்றுள் குரவை என்பது காதலையே னும் வெற்றியையேனும் பொருளாகக்கொண்டு குரவைப் பாட்டினைப்பாடி, ஏழுபேராயினும் எட்டுப்பேராயினும் கைகோத்து நின்று ஆடும் கூத்து. கலிநடம் என்பது மூங்கிற் கழிமேல் நின்று ஆடும் கூத்து. குடக்கூத்து என்பது தயிர்க் குடத்தைத் தலையில் வைத்து ஆடுவதுபோல ஆடும் கூத்து. இக்கூத்தினைக் கண்ணன் ஆடினான் எனக் கதையுண்டு. கரணம் என்பது படிந்த ஆடல். நோக்கு என்பது பாரமும் நுண்மையும் [illegible]யமும் மு[illegible]லாயினவற்றையுடையது. தோற் பா[illegible]லாற்பாவை செய்து ஆட்டு தல். வெறியா[illegible]டு என்பது முருகனுக்குப்பூசை செய்வோன் வேலைக் கையிலேந்தி முருகனை ஆவேசித்து நின்று ஆடும்கூத்து.

நாடகக்கலை அதனைப் பயிலும் மக்களின் வாழ்க்கை நிலைக்கேற்ப வேறு வேறு தரத்ததாய் இருந்தது. குறவர், ஆயர் முதலிய நிலமக்களது கூத்திற்கும், அக்கலையையே தமது வாழ்க்கைச் சாதனமாகக் கொண்ட கலைஞர்களின் கூத்திற் கும் உள்ள கலை நுட்பம் மிகவிரிந்து பரந்ததாய் இருந்தது. கூத்தினைத் தமது சாதனமாகக் கொண்ட மக்கள் கூத்தர், பொருநர் எனவும்

கூத்தியர், விறலியர் எனவும் அவ்வவ்வாண்களும்பெண்களும் வழங்கப்பட்டனர். அங்ஙனம் நாடகத்தினை நன்குபயின்ற பரம்பரையில்வந்த மங்கையே மாதவியாவள். அவள் அக்காலநாடக மகளின் இலக்கணத்தினை இனிது எடுத்துக்காட்டத்தக்க உதாரணமாகத் திகழ்கின்றாள். இசை நாடகம் முதலிய கலைகளைப் பயில்வோர் மிக்க இளம் பருவத்திலேயே பயிலுதல் வேண்டும், சிலம்பிற் காணும் மாதவி தனது ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையில் நாடகக் கலையைப் பயின்றனளெனக் குறிக்கப்படுகின்றாள். நாடகக்கலை மட்டுமன்றி இசைக்கலை, ஒப்பனைக்கலை முதலியவாய் மகளிர்க்குச் சிறந்தன எனக்கூறத்தக்க பிறகலைகளையும் திறமைபெற அவள் தேர்ந்திருந்தாள். மாதவி இவ்வாறு [illegible]ன் பயின்ற நாடகக்கலைத் தி[illegible]வா[illegible] முன்னிலையில் ஆடிக்காட்டி, தி[illegible] ஆடி மன்னனுலும் மன்னனது அவைக்களத்தினராலும் நன்கு பாராட்டப்பட்டமைக்குச் சான்றாக அக்கால வழக்கப்படி அளிக்கப்படும் பட்டமாகிய 'தலைக்கோலி' என்னும் பட்டத்தினையும் பெற்றனள். இப்பட்டத்துடன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும் அவள் பரிசாகப் பெற்றாள் என்று சிலம்பு கூறுகின்றது.

நாடகக் கலையினை அரசன் முன்னிலையில் ஆடிக்காட்டிஅரங்கேற்றுதற்குரிய அரங்குஅதற்கெனச்சிறப்பாக அமைக்கப்பட்டதொன்றாகும்.

அவ்வரங்கினை இளங்கோவடிகள் விவரித்துக் கூறுவதிலிருந்து பண்டைத்தமிழகத்தில் நாடக மேடை எவ்வாறு அமைந்திருந்தது என்பதை நாம் இனிது அறிதல் இயலும். முதற்கண், அரங்கம் அமைத்தற்குரிய இடத்தை அளத்தற்கு வேண்டப்படும் கோல் ஆராய்ந்து தெரிந்து எடுக்கப்படுகின்றது. அதாவது, பொதியமலை முதலிய புனிதமலைகளில் வளர்ந்ததும், ஒருகணு விற்கும் மற்றொரு கணுவிற்கும் இடையில் ஒரு சாண் நீளமுள்ளதுமாகிய உயர்ந்த மூங்கிலைத் தெரிந்து, அதில் இருபத்து நான்கு அங்குல அளவினதாகிய கோல் ஒன்று வெட்டி எடுக்கப்படும். அக்கோல் கொண்டு, தூய்மையானதும் ஊருக்கு நடுவிலுள் [illegible] ரிய வீதியைத் தன்க்கு முன்னாகக் கொ[illegible]டுள்ளதுமாகிய நிலத்தில், ஏழு கோல்அகலமும்எட்டுக்கோல்நீளமுமுள்ளஇடம் அளந்து குறிக்கப்படும். அவ்விடத்தில் ஒருகோல் உயரத்தில் பலகையால் மேடையமைக்கப்படும். மேடையின் தளத்திற்கும் மேலுள்ள உத்தரத்திற்கும் இடைப்பட்ட உயரம் நான்கு கோல் அளவினதாயிருக்கும். மேடையின் இருபக்கத்திலும் ஒவ்வொரு வாயில் உண்டு. ஒருவாயில் மேடையினுள் வருவதற்கு வழியாயுள்ளது. மற்றொன்று, ஆடுவோர் மேடையின் புறத்தேசெல்வதற்குவழி. மேடையின் மேலேயுள்ள விதானத்தில் நால்வகைப் பூதர்களின் உருவம் எழுதப்

பட்டிருக்கும். அவை நான்கு வருணத்தாரது தொழில், தோற்றம் முதலியவற்றைக் குறிப் பனவாய் உள்ளன. மேடையின் முன்பக்கத்தி லுள்ள இரண்டு தூண்களிலும் ஒளிமிக்க இரண்டு விளக்குக்கள் நிறுத்தி வைக்கப்படும். அங்ஙனம் நிறுத்தி வைக்கும் போது, தூணின் நிழல் முன் னுள்ள சபையிலும், தலைவர்கள் இருக்கும் இடத் திலும் படாதபடி வைக்கப்படும். இவற்றைவிட, மேடையிலே மூன்று திரைகள் கட்டப்பட்டிருக் கும். ஒன்று, ஒருமுக எழினி என்பது. அது இடப் பக்கத்தூணையடுத்துக் கட்டப்படும். மற்ருென்று பொருமுக எழினி. இது வலப்பக்கத்துத் தூண் இரண்டிலும் கட்டப்படும். மூன்[illegible]வது, கரந்து வரல் எழினி. இது, மேலே கட்டப்படும். இவை களெல்லாம் மிக்க தொழிற்[illegible]டன் அ[illegible]ந் தவை. மேடையின் மே[illegible]விதமா கத் தொடுக்கப்பட்ட முத்துமாலைகள் தொங்க விடப்படும்.

நாடகக்கலையினைப் பாராட்டத்தக்க வகை யில்அரங்கேற்றிய பெண்ணுக்கு அக்காலத்தில் வழங்கியபட்டம் 'தலைக்கோலி' என்பது முன்னே கூறப்பட்டது. அந்தப் பட்டத்திற் காணப்படும் 'தலைக்கோல்' என்பது, அக்காலத்தில் மிக மதிக் கப்பட்டதொரு கோலினைக் குறிக்கும் சொல்லா கும், தலைக்கோல் என்பது அரசன் பகைவரை வென்றகாலத்தில் கவர்ந்து வந்த அப்பகையரச ருடைய கொற்றக்குடையின் காம்பிஞலேனும்,

அப்பகையரசருடைய அரணிடத்தில் வளர்ந்ததாகி வெற்றிபெற்ற மன்னனால் வெட்டிக் கொண்டுவரப்பட்ட மூங்கிலினாலேனும், ஆக்கப்பட்டதொரு கோலாகும். இக்கோல் அரசனது அரண்மனையில் புனிதமானதோரிடத்தில் வைக்கப்பட்டு, இந்திரனுடையமகனாகிய சயந்தனாகப் பாவித்து வழிபடப்படும். அவ்வாறு வழிபடப்படும் தலைக்கோல், நாடகமகளிரது அரங்கேற்ற நாளில், புண்ணிய நீரினால் நீராட்டி, மாலை சூட்டி, பட்டத்து யானையின்மேலேற்றி வந்து, வீதியிலே தேரின்மேல் நின்ற கவிஞனது கையில் கொடுக்கப்படும். அக்கவிஞன் தலைக்கோலினைத் தன்கையில் தாங்கிய வண்ணம் தேரிலே ஊர்வலம் வருவான். அங்ஙனம் வந்தபின் அரங்கேற்[illegible] நிகழு[illegible]டையின் முன்னாக அக்கோல் வைக்கப்படு[illegible]

தலைக்கோல் மேடையின் முன்னாக வைக்கப்பட்டபின்னர், அரசரும் பிறதலைவரும் அவ்வவர்க்குரிய இடத்திலும், ஏனைய மக்கள் தமக்குரிய இடத்திலும் அவையில் அமர்வர். மேடையில் நிகழும் கூத்திற்கு, மூன்று கோலளவினதாகிய இடம்விடப்படும். ஏனைய இடத்தில் ஆடலாசிரியன், கவிஞன் பாடுவோர், யாழாசிரியன், குழலாசிரியன், தண்ணுமையாசிரியன் என்போர் ஒவ்வொருகோல் அளவினவாகிய இடங்களில் நிற்பர். ஆடலை அரங்கேற்றுதற்குரிய நடிகை மேடையில் வந்து தோன்றும்போது வலக்காலை

முதலில் வைத்து ஏறி, மேடையின் வலப்பக்கத் தூணைச் சேர்வள். ஆடும்மகளுக்குத்துணையாகப் பாடுவோர் யாவரெனில், இளமையில் ஆடி முதிர்ந்த மகளிராவர். அவர்கள் மேடையி லுள்ள இடப்பக்கத்துத் தூணிடத்தே நின்று பாடுவர். பாடுவாரது இசைக்குஏற்றவாறு யாழ் முதலிய கருவிகள் இசைக்கும். அக்கருவிகளின் இசையைத் தொடர்ந்து நடனமகள் பல்வேறு வகை ஆடற்றிறன்களை யெல்லாம் அவை யோர்க்கு ஆடிக்காட்டுவள்.

இவ்வாறு நுண்ணிய இயல்பினவாய கூத்து வகைகளேயன்றி, சதாரண மக்களது அறிவுக் கும் திறனுக்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறு அமைந்த கூத்துக்களும் சிலப்பதிகாரத்தில் காணக்கிடக்கின்றன. அவற்றுள் ஒன்று, மதுரை யின் புறத்தேயுள்ள இ[illegible]சேரியில் நிகழ்த் திய குரவைக் கூத்து. ஆசிரியர் அதனை மிக விளக்கமாக எடுத்துக்காட்டுகின்றார். மாதரியின் புதுமனையில் விருந்தினராய் உபசரிக்கப்பட்ட கோவலன், கண்ணகியின் காற்சிலம்பொன் றினை விற்றுப் பொருள் பெறும் நோக்கமாக மதுரை நகருள் சென்றான். புதியவனாய் அங்குப் புகுந்த அவன், விதிவசத்தால் கொலைசெய்யப் பட்டான். அக்கொலை நிகழ்ச்சியின் உற்பாத மாக மாதரியின் மனையில் முன்னென்றும் கண்டி ராத துன்பநிகழ்ச்சிகள் காணப்பட்டன. அத் துன்ப நிகழ்ச்சிகள் எத்தீங்கினை உணர்த்து

வனவோ என்று அறியாத மாதரி, அதற்குச் சாந்தியாகத் தன் குலத்தலைவரின் வழிபடு தெய்வமாகிய திருமாலைக் குறித்துக் குரவைக் கூத்து ஆடித்துதித்தனள். இடையர் சேரியிலே அன்று நிகழ்ந்த குரவை, தமிழ்நாட்டில் அக்கூத்து எவ்வாறு ஆடப்பெற்றது என்பதைத் தெற்றென அறிவுறுத்துகின்றது. அந்தக்குரவையின் இயல்பை நாம் அறியுமுன் அக்கால இசையின் இலக்கணத்தை ஒரளவு தெரிதல் ஆவசியகம். இக்காலத்தில் இசையில் அமைந்த ஏழு சுரங்களும் சட்சமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற சொற்களால் குறிக்கப்படுவன. அக்காலத்தில் அவை [illegible]ல், துத்த[illegible], கைக்கிளை, உழை, இளி, விளரி, த[illegible] என்[illegible]ளால் குறிக்கப்பட்டன, ஆயின், சட்ச[illegible] கு[illegible]லையும், ரிஷபம் துத்தத்தையும் ஒத்தனவல்ல. இக்காலத்துச் சட்சமம் என்பவற்றின் வைப்பு முறைக்கேற்ப அக்காலச் சொற்களைக்கூறுவதானால்அவை இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழைஎன அமையும். இக்காலத்தார் வடநூல் முறைப்படி சட்சமத்தை ஆரம்ப சுரமாகக் கொள்கின்றனர். அக்காலத் தமிழ்மக்கள் மத்திமத்தை, அதாவது, குரலை ஆரம்ப சுரமாகக் கொண்டனர். இனி, இன்னசுரத்தில் இன்னசுரம் தோன்றியதெனவும் தமிழிசை வல்லார் பண்டுகுறித்திருந்தனர். அதாவது, எல்லாச் சுரங்கட்கும் முதலிற்தோன்

றியது தாரம் எனவும், தாரத்திலிருந்து அதன் ஐந்தாவது சுரமாகிய உழையும், உழையிலிருந்து குரலும், குரலிலிருந்து இளியும், இளியிலிருந்து துத்தமும், துத்தத்திலிருந்து விளரியும் விளரியிலிருந்து கைக்கிளையும் தோன்றின எனவும் இசை இலக்கண நூல் கூறும். குரவைக் கூத்து நிகழ்த்து முன் ஏழு மகளிர் வரிசையாய் நிற்பர். ஏழு மகளிரும் ஏழுசுரத்தின் பெயரால் குறிக்கப்படுவர். முதலில் நிற்கும் மகள் குரல் என்ற பெயரையும், இரண்டாவதுமகள் அக்குரலிலிருந்து தோன்றிய சுரத்தின் பெயரான இளி என்னும் பெயரையும் மூன்றாவது மகள் துத்தம் என்ற பெயரையும் நான்காவது மகள் விளரி என்ற பெயரையும், ஐந்தாவது மகள் கைக்கிளை என்ற பெயரையும் ஆறாவது மகள் தாரம் என்ற [illegible]ரையும், [illegible] வது மகள் உழை [illegible] பெறுவர். இம்மகளிர் நிற்றற்குரிய இடமாக ஒரு சாண் இடைத்தூரமுள்ள பன்னிரண்டு வட்டங்கள் இட்டு அவற்றிற்கு முறையாகவே மேடம், இடபம் முதலிய பன்னிரண்டு இராசிகளின் பெயர் குறிக்கப்படும். அப்பன்னிரண்டு இராசி வட்டங்களில் ஏழு மகளிரும் நிற்றற்கு ஏழு இராசி வட்டங்களே வேண்டப்படுவன. ஆதலால், அவற்றில் இடபம், கடகம், சிங்கம், துலாம், தனு, கும்பம், மீனம் என்னும் இராசி வட்டங்களில் முன்னே குரல், இளி என்னும் பெயரினைச் சூட்டிய மகளிர் நிறுத்தப்படுவர். அங்ஙனம் அவ்வரை நிறுத்துதற்

கும் ஒரு முறையுண்டு. குரல் என்னும் பெயர் கொண்ட பெண்ணுக்கு மாயவன் என்ற ஒரு புதிய பெயரைச்சூட்டி முதலில் அவள் நிறுத்தப் படுவள். அவளையடுத்து, துத்தம் என்னும் பெயரினையுடைய பெண் நப்பின்னை என்னும் புதிய பெயர் தாங்கி நிற்பள். அவளையடுத்துத் தாரம் என்ற பெயர் பெற்ற பெண் நிற்பள். அவளையடுத்து இளி என்ற பெயர் தாங்கிய பெண் பலராமன்என்னும் புதிய பெயர் சூடி நிற்பள். அவளையடுத்து உழை, விளரி, கைக்கிளை என்னும் மகளிர் நிற்பர். இவ்வேழு மகளிரும் வட்டமாய் நிற்கும்போது, தமது கையிலுள்ள நடுவிரலையும் அணிவிரலையும் மடக்கிச் சுட்டு விரலையும் [illegible]றுவிரலையும் கோத்துநின்று ஆடுவர். அங்ஙனம் [illegible]வைக் கூ[illegible]து [illegible]ஆடும்போது ஆயர்களாயின் திருமா[illegible]யின் முருகனையும் துதித்துப் பா[illegible]பாடுவர். இடைய முது மகளாகிய மாதரி நிகழ்த்துவித்த குரவையாதலால், இதனை விவரித்துக்கூறிய இளங்கோவடிகள் ஆடுவோரது பெயர், நிலை ஆகிய செய்திகளையெல்லாம் மிக விளக்கமாகக் கூறினர். ஆயின், மலை நாட்டுமக்களாகிய குறவர்களது குரவையை இவ்வாறு விரித்துக் கூறினரல்லர். இதனல். அக்கால மக்கள் தத்தம் அறிவுக்கும் நாகரிகவளர்ச்சிக்கும் ஏற்றவகையில் குரவை முதலிய கூத்தினை ஆடிமகிழ்ந்தனர் என நாம் அறிதல் கூடும்.